உ

சிவமயம்.

# கச்சி ஆனந்த ருத்திரேசர்

# வண்டுவிடு தூது.

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து
மகா வித்வான்

ஸ்ரீ கச்சியப்ப முனிவர் இயற்றியது.

இது

ஷை ஆதீனத்துத் தலைவர்களாகிய
ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிகரவர்களுடைய விருப்பத்தின்படி
ஷை ஆதீனத்து மகாவித்வான்
ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களுடைய மாணாக்கராகிய
மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி
உத்தமதானபுரம். வே. சாமிநாதையரால்
பரிசோதிக்கப்பெற்று

நூதனமாக எழுதிய குறிப்புரை முதலியவற்றுடன்

சென்னை :
கேஸரி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பெற்றது

[இரண்டாம் பதிப்பு]

பிரமோதூத ௵ தைமீ
1931.

Copyright Registered.] [விலை அணா 8.

# இப்புத்தகத்தி லடங்கியவை.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | இப்பதிப்பில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி .... | iv |
| 2. | முகவுரை .... .... .... | v-xi |
| 3. | நூலின் சுருக்கம் .... .... .... | xii-xvi |
| 4. | கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டுவிடுதூது மூலமும் குறிப்புரையும் .... .... .... | க-அஉ |
| 5. | கச்சியப்ப முனிவர் நெஞ்சு விடுதூது .... | அங-சா |
| 6. | பிரதிபேதங்கள் .... .... .... | அறு |
| 7. | தலப்பெயர் முதலியவற்றின் அகராதி .... | அசு-அ |

# இப்பதிப்பில் எடுத்துக் காட்டிய நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி.

---

அகநா - அகநானூறு.
அடியார் - அடியார்க்கு நல்லாருரை.
அம்பலவாண. கலம் - அம்பலவாணதேசிகர் கலம்பகம்.
ஆனந்த. பதிற் - ஆனந்த ருத்திரேசர் பதிற்றுப்பத்தந்தாதி.
ஏ. உலா - ஏகாம்பர நாதருலா.
கந்த - கந்தபுராணம்.
கம்ப - கம்பராமாயணம்.
கலி - கலித்தொகை.
கா - காஞ்சிப்புராணம்.
கா. கலித் - காஞ்சிக் கலித்துறைப் புராணம்.
காசிக் - காசிக்கலம்பகம்.
காப் - காப்புச் செய்யுள்.
காளமேக - காளமேகப்புலவர் பாடல்.
குறுந் - குறுந்தொகை.
சிலப் - சிலப்பதிகாரம்.
சிவ. போ - சிவஞான போதம்.
சிறுபாண் - சிறுபாணாற்றுப்படை.
சீவக - சீவகசிந்தாமணி.
சுந்தர - சுந்தரமூர்த்தி நாயனார்.
சூ - சூத்திரம்.
தக்க - தக்கயாகப்பரணி.
தஞ்சை - தஞ்சைவாணன் கோவை.
தண்டி - தண்டியலங்காரம்.
தணிகைப்பதிற் - திருத்தணிகைப் பதிற்றுப் பத்தந்தாதி.
தமிழ்விடு - தமிழ்விடுதூது.
திருச்சிற் - திருச்சிற்றம்பலக் கோவையார்.
திருநா - திருநாவுக்கரசு நாயனார்.
திருப்பெருந்துறைப் - திருப்பெருந்துறைப் புராணம்.
திருவா - திருவாசகம்.
திருவானைக்காப் - திருவானைக் காப்புராணம்.
திருவிளை - திருவிளையாடற்புராணம்.
திவ் - திவ்வியப் பிரபந்தம்.
தே - தேவாரம்.
தொல் - தொல்காப்பியம்.
ந - நச்சினார்க்கினியருரை.
நள - நளவெண்பா.
நாகைக் - திருநாகைக் காரோணப் புராணம்.
நாலடி - நாலடியார்.
நான்மணி - நான்மணிக்கடிகை.
நீதிநெறி - நீதிநெறிவிளக்கம்.
நைட - நைடதம்.
ப. கா - பழைய காஞ்சிப்புராணம்.
பு. வெ - புறப்பொருள் வெண்பாமாலை.
புறநா - புறநானூறு.
பூதவேதாள - பூதவேதாளவகுப்பு.
பூவாளூர்ப் - பூவாளூர்ப் புராணம்.
பெரிய - பெரியபுராணம்.
பெருங் - பெருங்கதை.
பேர் - பேராசிரியருரை.
மதுரை - மதுரைக்காஞ்சி.
மயிலையந் - திருமயிலைத்திரிபந்தாதி.
மறைசை - மறைசையந்தாதி.
முத்துக் - முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ்.
முருகு - திருமுருகாற்றுப்படை
மேற் - மேற்கோள்.
யா. கா - யாப்பருங் கலக்காரிகை.
யா. வி - யாப்பருங்கலவிருத்தி.
வி. பா - வில்லிபுத்தூராழ்வார் பாரதம்.

உ

கணபதி துணை.

# முகவுரை.

## தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

தாயவன்கா ணுலகிற்குத் தன்னொப் பில்லாத்
தத்துவன்காண் மலைமங்கை பங்கா வென்பார்
வாயவன்காண் வரும்பிறவி நோய்தீர்ப் பான்காண்
வானவர்க்குந் தானவர்க்கு மண்ணு ளோர்க்குஞ்
சேயவன்கா ணினைவார்க்குச் சித்த மாகித்
திருவடியே யுள்கிநினைந் தெழுவா ருள்ளம்
ஏயவன்கா ணெழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காணவனென் னெண்ணத் தானே.

திருச்சிற்றம்பலம்.

தமிழ்மொழிக்கு உரியனவாகக் கூறப்படும் பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும். அவற்றுள் தூதென்பது ஒன்று. அது தலைவன் தலைவியர்களுள் ஒருவர் மற்றொருவர்பால் தமது வேணவாவைப் புலப்படுத்தித் தம்முடைய கருத்திற்கு உடம்பட்டமைக்கு அறிகுறியாக மாலையை வாங்கி வருமாறு அன்னமுதல் வண்டீறாகவுள்ள பத்தையும் பிறவற்றையும் தூதுவிடுவதாகக் கலிவெண்பாவால் இயற்றப்படுவது. அதன் இலக்கணம், "எகினம யில்கிள்ளை யெழிலியொடு பூவை, சகிகுயிலெனெஞ் சந்தென்றல் வண்டு—தொகை பத்தை, வேறுவே றுப்பிரித்து வித்தரித்து மாலைகொண்டன், பூறிவா வென்றறாது" (பிரபந்தத்திரட்டு) என்பதனாலும், இலக்கணவிளக்கம், 874-ஆம் சூத்திரத்தாலும் அதன் உரையாலும் அறியலாகும்.

ஸ்ரீ காஞ்சிபுரத்தில் உள்ள சிவதலங்கள் பல; அவற்றுள் ஆனந்தருத்திரேசம் என்பது ஒன்று. அஃது உருத்திரர் நூற்றுப் பதினெண்மருள் முதல்வராகிய ஆனந்த உருத்திரராற் பூசிக்கப் பெற்றது. அத்தலத்திற் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ ஆனந்த

ருத்திரேசர் என்னும் மூர்த்தியின் திறத்தில், இந்தக் கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டுவிடுதூதென்னும் நூல் திருக்கைலாய பரம் பரைத் திருவாவடுதுறையாதீனத்து மகாவித்வான் ஸ்ரீ கச்சியப்ப முனிவரால் இயற்றப் பெற்றது.

ஆனந்த ருத்திரேசர் விஷயமாக இந்நூலையன்றி இந்நூலாசிரியர் பதிற்றுப்பத்தந்தாதியொன்றும் கழிநெடிலொன்றும் இயற்றியுள்ளார்; திராவிட மகா பாஷியகர்த்தரும் இந்நூலாசிரியருடைய தமிழாசிரியருமான ஸ்ரீ சிவஞான யோகிகளால் இயற்றப் பெற்ற பதிகம் ஒன்றும் உண்டு; இவற்றையன்றி இவ்விருவராலும் வேறு சிலராலும் இம்மூர்த்தி சம்பந்தமாக அவ்வப்போது பாடப்பட்ட பல தனிச்செய்யுட்களும் உள்ளன.

கவிஞர் பெருமானென்றும் * கவிராட்சஸரென்றும் பெரும் புகழ்பெற்று விளங்கிய கச்சியப்ப முனிவர் இதன் ஆசிரியரென் பதனாலேயே இதன் பெருமை கூறாமல் விளங்கும். இஃது ஒரு சிறு நூலாக இருப்பினும், இதனுட் பொதிந்துள்ள உயர்ந்த கருத்துக்களும் சரித்திரங்களும் சொற்பொருட் பிரயோகங்களும் அணி வகைகளும் நடைநயமும் மிகப்பெரிய நூலில் அமைந்தன போலவே விளங்குகின்றன. சிறிய கிழியிற் பெரிய பொருள்களை அமைத்துக் காட்டிய ஓவியமும், பல்வகைப் பொருளையும் அவ்வகையுருவிற் செவ்வன் செறித்து இனிது விளக்கும் கண்ணாடியும், வல்லவன் தைஇய பாவையும் இதற்கு உவமையாமெனல் மிகையாகாது. கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத்தறித்த தென்றல் இதற்கும் அமையும்.

இந்நூலிலுள்ள கண்ணிகள் ௫௦௪.

சங்கச் செய்யுட் கருத்துக்களும் தேவாரம் முதலிய திருமுறைப் பிரயோகங்களும் இதில் ஆங்காங்கே அமைந்துள்ளன. அவை இதன் குறிப்புரையால் விளங்கும்.

இந்நூலுள், இத்தல சம்பந்தமான பற்பல சரித்திரங்களையும் ஆசிரியர் எடுத்துக் காட்டியிருத்தல் அறிந்து இன்புறுதற்குரியது. இதன் முற்பகுதியிலும் இறுதிப் பகுதியிலும் இடையிடையே சில இடங்களிலும் சைவ சித்தாந்த உண்மைக் கருத்துக்களை அமைத்துள்ளார்; சிவபெருமான் திருவிழாச் சிறப்பையும்

* கவிச் சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் கவிராட்சஸரென வழங்கப் பெறுவர்; தக்கயாகப்பரணியின் முகவுரையைப் பார்க்க.

பூசை முதலியவற்றையும் சைவாகம முறைக்கேற்ப ஒழுங்குபட அமைத்து விளக்கியிருக்கின்றார். பாட்டுடைத் தலைவரைச் தனிச் சிறப்பு வாய்ந்தவராகப் புகழ்தல் கவிமரபாதலின், இவரும் ஆனந்தருத்திரேசரைப் பலபடியாகச் சிறப்பித்துள்ளார்.

ஆனந்தருத்திரேசர் காஞ்சியிலுள்ள ஏனைய சிவ தலங்களிலுள்ள மூர்த்திகளிற் சிறந்தவரென்பதற்கும், வண்டு தூதிற்குரிய ஏனைய பொருள்களிற் சிறந்ததென்பதற்கும், பெண்ணிற்காக அவர்பால் தூது செல்லல் பயன் தருமென்பதற்கும் தக்க காரணங்களைக் காட்டும் பகுதிகளும், அவர் தம்மைப் பூசித்து வரம் பெற்ற காமன் முதலியவர்களைக் கடிவாரோவென்றெழுந்த வினாவிற்கு விடையாகக் குற்றஞ் செய்யின் தம்மைப் பூசித்தவர்களையும் கடிவாரெனக் கூறும் பகுதியும், குற்றஞ் செய்த எனக்கு அருள்வாரோ வென்னுந் தலைவியின் ஐய வினாவிற்கு விடையாகத் தக்கன் முதலியோர்கள் செய்த பிழைபொறுத்து ஆண்டுகொண்டருளினரெனக் கூறும் பகுதியும், தூது சென்று வருமளவும் எவ்வாறு உயிர் தாங்கி ஆற்றியிருப்பாயென்ற வண்டின் வினாவிற்கு விடையாகப் பல அடியாருக்கு உடலும் உயிரும் கொடுத்தருளினராதலின் யான் இறப்பினும் உயிர் தந்தருள்வாரென்று கூறும் பகுதியும் ஆசிரியருடைய அறிவின் வன்மையைப் புலப்படுத்தும்.

வண்டைச் சிறப்பிப்பாராய் அதன் உருவம், செயல், பெயர் வகை முதலியவற்றைப் பெற்றமையினாலேயே பல பொருள்கள் சிறப்புற்றனவென்று கற்பித்துக் கூறியுள்ள பகுதி மிக்க சுவையுடையதாகும்.

வண்டின் பெயராகிய மிஞிறென்பது ஞிமிறென்று மாறி வழங்குகின்றமையின் எழுத்திலக்கணம் முதல் அணியிலக்கண மிறுதியாக உள்ளவற்றில், வைசாகி யென்பது வைகாசியென மாறுதல் முதலிய நிலைமாற்றங்கள் உண்டாயினவென்று கூறும் இலக்கண வகையும், தலைவி இறைவனைக் கண்டபொழுது உண்டான மெய்ப்பாடுகளை விளக்குதல், "பாலை யுரிப்பொருளைப் பாற்றுவார்", "குறிஞ்சி யுரிப்பொருளுட் கொள்வார்" எனக் குறிப்பித்தல் முதலிய அகப்பொருட் செய்திகளும், இறைவன் திருவுலாவை வருணிக்கையில் இடத்திற்கேற்ற சந்தங்களை அமைத்திருத்தலும், காஞ்சியிலுள்ள விம்பிதங்கள் முதலியவற்றை எண்ணணிபடச் சொல்லுதல், வண்டின் பல பெயரைச் சொல்லி விளிக்

கையில் * வெளிப்படை யென்னும் இலக்கணம் அமையக் கூறுதல், இறைவனுக்கு அலங்காரம் செய்வதைப்பற்றிக் கூறுகையில் ஒவ்வோராபரணத்தைப் பற்றியும் தற்குறிப்பேற்ற அணிபடச் சொல்லுதல், வண்டின் இயல்பை விளக்குகையில் சிலேடையணியமையச் சொல்லுதல் முதலிய பொருளணியமைதியும், வண்டின் பெயர்கள் பலவற்றைத் திரிபிலும் காந்தாரமுதலிய பண்களின் பெயர்களை யமகத்திலும் அமைத்திருக்கும் சொல்லணியமைதியும் இந்நூலாசிரியர் ஐந்திலக்கணங்களையும் நன்கறிந்து அவற்றை ஏற்ற இடங்களிற் செவ்வனே அமைத்து விளக்கும் பேராற்றலையுடையவரென்பதைப் புலப்படுத்தும்.

தூதிற்குரிய பொருள்களாக இவர் இடையே குறிப்பிட்டவை அன்றில், அன்னம், கிளி, குயில், தமிழ், தென்றல், நெஞ்சு, பாங்கி, புறவு, பூவை, பொன், மேகம் முதலியன.

இவர் ஆண்ட சிலவகைச் சொற்பிரயோகங்கள் : ஒற்றிப்ப, கதிய—கதுவிய (85), கலவி—கலந்து (173, 215), சஞ்சாயகம், புயக்க (293), மிறுகம்—மிருகம் (400), மீளி—மீளுதல் (355), முகிழ்ந்து (235), மேவித்தார்—மேவுவித்தார் (294.)

இந்நூலை ஆராய்ச்சி செய்வதற்கு, பெரிய புராணத்திலுள்ள திருக்குறிப்புத் தொண்டநாயனர் புராணமும், கந்தபுராணத்துள்ள திருநகரப்படலமும், ஸ்ரீ ஏகாம்பரநாதருலாவும், பழைய காஞ்சிப் புராணமும், காஞ்சிக் கட்டளைக் கலித்துறைப் புராணமும், ஸ்ரீ சிவஞானயோகிகளும் இந் நூலாசிரியராகிய ஸ்ரீ கச்சியப்ப முனிவரும் இயற்றிய காஞ்சிப்புராணம் முதலிய நூல்களும் உதவியாக இருந்தன.

திருவாவடுதுறையாதீனத்து மகாவித்வானும் என்னுடைய தமிழாசிரியருமான திரிசிரபுரம் ஸ்ரீமீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் இந்நூலாசிரியராகிய கச்சியப்ப முனிவரிடத்திலும் இவர் இயற்றிய நூல்களிலும் மிகுந்த ஈடுபாடுடையவர்கள். அவர்கள் திரிசிரபுரத்திற் சிறந்த தமிழ்ப் பயிற்சியுற்று வித்வானென்னும் பட்டம் பெற்று விளங்கிய பொழுது ஒரு நண்பர் மூலமாகக் கிடைத்த திருவானைக்காப்புராணத்தை வாசித்து அதன் சொன்னயம் பொருணயங்களை அறிந்து மகிழ்ந்து அந்நூலின் ஆசிரியராகிய இம்முனிவரிடத்தும் இவர் வழிபட்டொழுகிய திரு

* இதனை விபாவனையணியுள் அடக்குவர் தண்டியாசிரியர்.

வாவடுதுறை யாதீனத்திடத்தும் பேரன்பு பூண்டார்கள். அது முதல் கச்சியப்பமுனிவரியற்றிய வேறு நூல்களை அவாவோடு தேடிப் பெற்றுப் படித்தலையும் ஷை ஆதீனத்துச் சம்பந்தம் பெற முயலுதலையும் மேற்கொண்ட தன்றி ஸ்ரீ கச்சியப்ப முனிவரையே தம்முடைய வித்தியாகுருவாகவும் வழிபடு தெய்வமாகவும் எண்ணி ஒழுகி வந்தார்கள். நூல்கள் இயற்றும்பொழுதும் பாடஞ் சொல்லுகையிற் பொருள் கூறும்பொழுதும் முட்டுப்பாடு நேர்ந் தால் இம்முனிவர்பிரானைத் தியானித்தல் வழக்கமென்றும் உடனே அது தமக்கு நீங்குமென்றும் அவர்கள் சொல்ல உடன் கற்ற அன்பர்களும் நானும் கேட்டிருக்கிறோம்.

இரண்டாவது முறை அவர்கள் சென்னைக்கு வந்திருந்த பொழுது இந்த ஆனந்தருத்திரேசர் வண்டு விடுதூது காஞ்சீபுரம் மகாவித்வான் ஸ்ரீ சபாபதிமுதலியாரவர்களிடம் இருப்பதை யறிந்து அதை வாங்கிக் கடிதத்தில் ஒரு பிரதி செய்து கொண்டு பாடமும் கேட்டார்கள். அவ்வாறு கேட்கையில் அங்கங்கே சில குறிப்புக்களையும் எழுதியிருந்தார்கள்; "தீதிரண்டு-புத்திபூர்வம், அபுத்தி பூர்வம். ஈட்டம் - சகுனம்," என்பன அவற்றிற் சில. அப்பிரதி சிதைந்திருந்தமையின் குறிப்புக்களெல்லாவற் றையும் பார்க்க இயலவில்லை. அவர்கள் பாடஞ்சொல்லி வருகை யில், சில சமயங்களில் இந்நூலிலுள்ள, "முன்னின்ப நின்னின்ப முற்றிய வென்னின்பம், பின்னின்ப மன்றிப் பிறிதுண்டே - அன்னை நீ, ஆதற் குரிமை யடுத்தலா னிற்றாது, போதற்கணுக்கப் புகன்றனேன்" (௩௨௦ - ௬௧) என்னும் பகுதியை எடுத்துப் பாராட்டுவதுண்டு.

இந்நூலாசிரியர் இயற்றிய வேறு நூல்களாவன:—(1) விநா யக புராணம், (2) திருத்தணிகைப் புராணம், (3) திருத்தணிகை யாற்றுப்படை, (4) திருத்தணிகைப் பதிற்றுப் பத்தந்தாதி, (5) காஞ்சிப்புராணத்தில் இரண்டாம் காண்டம், (6) ஆனந்தருத்தி ரேசர் பதிற்றுப் பத்தந்தாதி, (7) ஆனந்த ருத்திரேசர் கழிநெடில், (8) பிரமீசர் பதிற்றுப் பத்தந்தாதி, (9) திருவானைக்காப் புராணம், (10) பூவாளூர்ப் புராணம், (11) பேரூர்ப் புராணம். இவையன்றி, பல தனிப்பாடல்களுமுண்டு.

இந்நூல் மூலமட்டும் ஸர்வஜித்து ௵ பங்குனி ௴ (1888, மார்ச்சு ௴) என்னால் அச்சிடப் பெற்றது.

இதற்கு ஒரு குறிப்புரை எழுதிச் சேர்த்து வெளியிடவேண்டுமென்னும் எண்ணம் நெடுநாட்களாக இருந்து வந்தது. வேறு பல நூலாராய்ச்சியினால் அவ்வெண்ணம் நிறைவேறவில்லை. இப்பொழுது சில அன்பர்கள் வற்புறுத்தினமையால் குறிப்புரையுடன் இப்பதிப்பு வெளியிடப் பெற்றது.

மற்றப் பிரபந்தங்களுக்கு எழுதியதுபோலக் கடினமான சொற்களுக்குப் பொருளும் இன்றியமையாத இடங்களிற் சொன் முடிபு பொருண்முடிபுகளும் காட்டிப் பழைய நூல்களிலும் பிற் காலத்து நூல்களிலும் காணப்படும் ஒத்த பகுதிகளை உரிய இடங் களில் அமைத்தும், காஞ்சித்தல சம்பந்தமான கதைகளில் விளங் கியவற்றை இயன்றவரையில் அங்கங்கே சுருக்கிக் காட்டியும், இந் தக் குறிப்புரை எழுதப்பெற்றது. இந்நூலாசிரியருடைய கருத்து இன்னதென்று தெளிவதற்குத் தக்க ஆதாரங்கள் அகப்படாமையின் சில இடங்களில் குறிப்புரை துணிந்து எழுதவில்லை. இந் நூலாசிரியர் விஷயமாக இவர் மாணாக்கர் ஒருவரால் இயற்றப் பட்ட நெஞ்சுவிடுதூது ஒன்றுண்டு. அதனுள் இவர் இயற்றிய நூல்களைப் புலப்படுத்தும் பகுதி இந்நூலின் பின்னர்ச் சேர்த்துப் பதிப்பிக்கப் பட்டுள்ளது.

இந்நூற் பதிப்புக்கு உபயோகமாக இருந்த மூலப் பிரதிகள் :

1. திருவாவடுதுறையாதீனப் புத்தகசாலை ஏட்டுச் சுவடி .... .... .... .... க
2. ஷை ஆதீனத்து மகாவித்வான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் கடிதப் பிரதி க
3. மதுரை இராமசாமிப்பிள்ளையெனவழங்கும்திரு ஞானசம்பந்தப்பிள்ளையவர்கள் கடிதப் பிரதி க
4. காஞ்சீபுரம் ஸ்ரீமான் தெய்வசிகாமணி முதலியாரவர்கள் தந்த ஏட்டுப் பிரதி .... .... க
5. காஞ்சீபுரம் ஸ்ரீமான் கங்காதர முதலியாரவர்கள் ஏட்டு பிரதி .... .... .... க

திருவாவடுதுறையாதீனத்தில், சிவக்ஷேத்திர குருக்ஷேத்திர பரிபாலனங்களும் தர்மபரிபாலனமும் வித்யாபரிபாலனமும்

செய்துகொண்டு சிவபுண்ணியச் செல்வர்களாய் கக-ஆம் பட்டத்தில் ஆதீன கர்த்தர்களாக இப்பொழுது எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிகரவர்களின் பேருதவியால் இப்பதிப்பு வெளியிடப்பெற்றது. இந்நூலாசிரியருக்கு ஞானசிரிய ஸ்தானமாக வுள்ள இவ்வாதீனத்தின் ஆதரவு இந்நூற் பதிப்பு விஷயத்திலும் அமைந்தது மிகவும் பாராட்டத்தக்கது. இன்னும் இவ்வாதீனத்தில் முன்பு விளங்கியவர்கள் இயற்றியுள்ள நூல்களை யெல்லாம் ஒவ்வொன்ருகக் குறிப்புரையுடன் வெளியிடச் செய்யவேண்டுமென்ற நோக்கம் ஷை ஆதீன கர்த்தரவர்களுக்கு இருந்து வருகின்றது. இந்த ஆதீனத்தின் சம்பந்தம் எனக்கு ஏற்பட்டு 60 வருடங்க ளாகின்றன. ஆரம்பமுதல் இவ்வாதீனத்தின் ஆதரவு வர வரப் பெருகிவருதல் என் மனத்திற்கு ஊக்கத்தை விளைவிக்கின்றது.

ஸ்ரீ கச்சியப்ப முனிவரியற்றிய பிரபந்தங்களெல்லாவற்றையும் சேர்த்து ஒருதொகுதியாகக் குறிப்புரை, நூலாசிரியர் சரித்திரம் முதலியுவற்றுடன் வெளியிட எண்ணியுள்ளேன். அதனை நிறைவேற்றிவைக்கும் வண்ணம் தமிழ்த்தெய்வத்தை இறைஞ்சுகின்றேன்.

இந்நூலைப் பதிப்பிக்கும்போதும் ஆராயுங்காலத்தும் வழக்கம்போல் உடனிருந்து உதவி செய்தவர்கள் என்னுடைய சகோதரர் சிரஞ்சீவி வே. சுந்தரேச ஐயரும், சென்னை விமன்ஸ் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதர், சிரஞ்சீவி வித்வான், சு. கோதண்டராம ஐயரும், கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதர், சிரஞ்சீவி வித்வான் வி. மு. சுப்பிரமணிய ஐயரும், மோகனூர்த் தமிழ்ப்பண்டிதர், சிரஞ்சீவி கி. வா. ஜகந்நாத ஐயரும் ஆவர்.

இங்ஙனம்

திருவேட்டீசுவரன் பேட்டை.
20—1—31.

வே. சாமிநாதையர்

## நூலின் சுருக்கம்.

---

### தேவாரம்.

*திருச்சிற்றம்பலம்.*

*வண்டரங்கப் புனற்கமல மதுமாந்திப் பெடையினொடும்*
*ஒண்டரங்க விசைபாடு மளியரசே யொளிமதியத்*
*துண்டரங்கப் பூண்மார்பர் திருத்தோணி புரத்துறையும்*
*பண்டரங்கர்க் கென்னிலைமை பரிந்தொருகாற் பகராயே.*

*திருச்சிற்றம்பலம்.*

பரம கருணாநிதியாகிய சிவபெருமான், ஸ்ரீ காஞ்சியம்பதியும் தீர்த்தக் குழாங்களும் ஸ்ரீ ஏகம்பநாதருமாக எழுந்தருளியிருந்தும் பல்வகை ஆன்மாக்களை உய்வித்தருளத் திருவுளங்கொண்டு பின்னும் * மூன்று கம்பங்களாகியதன்றி வாலீசமுதல் நூற்றுப்பதினெண்டளிகளீருக உள்ள தலங்களை இடங்களாகக் கொண்டு வாலீசர் முதலிய திருநாமத்துடனே எழுந்தருளிப் பேரருள் பாலித்தாலும், ஏனையோர்கள் பூசித்த இடங்களிலும் மூர்த்திகளிலும் அம்பிகை பூசித்த மாவடியும் சோதிலிங்கமும் சிறந்தன. சிவபெருமானுடைய முழு உருவத்தையும் திருநாமத்தையும் கொண்ட உருத்திரர்களாற் பூசிக்கப்பெற்ற உருத்திரேசங்களும் உருத்திரேசலிங்கங்களும் முறையே அவ்விரண்டையுமொக்கும். பேரானந்தத்தை மிகுதியாக அளித்தலாலும் ஆனந்தனென்னும் பெயரோடு பொருந்தியதாலும் ஆனந்தருத்திரேசமும் அதன்பாலுள்ள மூர்த்தமும் அவற்றுட் சிறந்தன.

அத்தகையதாகிய ஆனந்தருத்திரேசத்திற் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஆனந்த ருத்திரேசர் திருவிழாக் கொள்ளத் திருவுளம் பற்றித் தம்முடைய திருக்கோயிலினின்றும் தினந்தோறும் வேறு வேறூர்திகளில் உலாப்போந்து பின்னொரு நாள் வைகறையில் திருப்பள்ளியறையினின்றும் எழுந்தருளிப் பலவகை அலங்காரங்களும் செய்யப் பெற்றதாகிய மண்டபத்தை யடைந்து சிங்காதனத்தில் வீற்றிருந்து திருமஞ்சனம் கொண்டருளினர். பின்னர்த் திருவாபரணங்கள் அணியப்பெற்றன; பலவகை நிவேதனங்கள் செய்யப்பெற்றன; உபசாரங்கள் பல நிகழ்ந்தன. பின்பு, அவர் தோத்திரங்களைக் கேட்டு நாட்டியங் கண்டு கர்ப்பூர தீபத்தை ஏற்றருளித் திருநீறு அளித்தபின்,

---

* இம்மூன்று கம்பங்களாவன, நல்லகம்பம், கள்ளக்கம்பம், வெள்ளாக் கம்பமென்பன.

கவிகையோங்கவும் சாமரைகளிரட்டவும் ஆலவட்டம் அசையவும் வாத்தியங்கள் முழங்கவும் அடியார்குழாம் துதித்துக் களிப்பவும் கவிகைகள் நிழற்றவும் கோயிலகத்து உலாக்கொண்டு கோபுரவாயில் வழியே திருவீதி எய்தித் திருத்தேர்ப்பீடத்து எழுந்தருளினர். விநாயகக் கடவுள் முதலியோர் தத்தம் தேர்களில் உடன் ஊர்ந்து வந்தனர். அப்பொழுது மத்தளமாதவர் முதலிய தேவர் தத்தம் பணிகளையாற்றினர். திருச்சின்னங்கள் பணிமாறின. தவமுனிவர் மறையவர் முதலியோருடன் வந்தனர். தெய்வமங்கையர் நடஞ்செய்தனர். மானிட மகளிரும் தெய்வ மகளிரும் அவர் திருமேனியினழகைக்கண்டு மையலால் வருந்துவாராயினர். இங்ஙனம் அவர் எழுந்தருளலும், அங்கே சென்ற அடியேனும் அவருடைய திருவடி முதலியவற்றைத் தரிசித்து அவற்றின் அழகில் ஈடுபட்டுக் காம மயக்கத்தினால் மெலிந்து திருமுன் நின்றேனாக, அவர் கருணையுடன் என்னை நோக்கிப் புன்முறுவல் புரிந்தார்.

ஆயினும், அடியேன் தவக்குறையோ அவருடைய திருவிளையாட்டோ யாதோ அறியேன் : முன்னர்ப் பல அடியார்களுக்கு இத்தலத்திற் பல வரங்களை யளித்தும் இடையூறுகளை நீக்கியும் பலவகைத் திருவிளையாடல்களைச் செய்தும் பாதுகாத்த அப்பெருமான் ஏழையேனுக்கு அருள் செய்திலர். அப்பால், "இங்கே தம்மைப் பூசித்துப் பேறுபெற்ற காமன் முதலியவர்களை என் பொருட்டுக் கடியத்துணிவாரோ ; இனி என் செய்வது?" என்று இரங்கினேன். இரங்கிப் பின்பு ஒருறுதி கொண்டேன் : முன்பு சிலர் தம்மை வழிபட்டு அருள்பெற்றாரேனும் தம் அன்பர்களுக்கு அவர் தீங்குசெய்தபொழுது ஒறுக்கும் இயல்புடையாராயிருந்தமையின் தம்பால் அன்புள்ள அடியேனுக்குத் தீங்கு புரியும் மாரன் முதலியோரை ஒறுத்து அருள்செய்வார். அறியாப் பருவத்துக் குற்றம் செய்தேனாயினும் குற்றம் செய்த தக்கன் முதலியோர் தம்மைச் சரணடைந்தமையாற் குற்றங்களைப் பொறுத்து அவர்களைப் பாதுகாத்தருளியவராதலின் தம்மைச் சரணடைந்த அடியேனுக்கும் திருவருள் பாலிப்பாரென்று ஊக்கங்கொண்டேன். அன்றியும் சுந்தரமூர்த்தி நாயனாருக்காகத் தூது சொல்லச் சென்றவராதலின் தம்பால் வந்த தூதைப்பயன்படும்படி செய்வார். ஆகையால் அவர்பால் தூதுவிடுத்தல் நலம் ; அங்ஙனம் செய்யின் விரைவில் அருள்புரிவாரென்றெண்ணினேன் ; எண்ணி வண்டே உன்னைத் தூதுவிடத் துணிந்தேன். துணிந்தபொழுதே நீ வந்தாயாதலின் உன் வரவை நன்னிமித்தமாகக் கொண்டேன்.

பிரமரமே! தூதிற்குரிய பிறவற்றை விடுக்கி[...]மே யென்பாயாயின் கூறுவேன் கேட்பாயாக. நெஞ்சத்தைத் தூதுவிட நினைத்தால், அவர்

திருவுலாக் கொண்டருளுங் காலத்தில் அது முன்னமே அவருடைய பேரழகில் ஈடுபட்டு உடன்சென்றது; இன்னும் வரவில்லை. வரினும் மீண்டும் செல்லுதற்கு மயங்கும்; போக விரும்பினும் புலன்களாற் பற்றப்படும்; அங்கே சென்றாலும் மேற்கொண்ட காரியத்தை மறத்தலுங் கூடும். ஆதலின் தூது செல்லுதற்கு அது தகுதியுடையதன்று. அன்றி, அன்னம் முதலியவற்றை விடுத்தால் சில சில காரணங்களால் அவை காரியத்தை நிறைவேற்றிக்கொண்டு வாரா. பாங்கி முதலியவர்களும் சில காரணங்களால் தூதாகச் செல்லுதற்குரியரல்லர். சென்றாலும் என்னுடைய விருப்பத்தைச் சொல்லக்கூடுமேயன்றி உன்னைப்போல் யான் விரும்பிய பொருளைக் குறித்துக்காட்டும் வன்மை அத்தூதுகளுக்கு இல்லை. நீயோ நேரே சென்று யான் வேண்டும் பொருளாகிய கொன்றை மாலையிலிருந்து என் விருப்பம் இன்னதென்பதைக் குறிப்பாக அவருக்குப் புலப்படுத்திக் காரியத்தைச் சித்திபெறச் செய்யும் வன்மையையுடையாய். அவருடைய திருமாலையைச் சார்தற்குரிய தவத்தை நீ செய்யாதிருப்பினும் உடல் பொருளாவி மூன்றையும் அவருக்கே உரிமையாக்கிய எளியேனுக்கு உதவி செய்தலே உனக்குப் பெருந் தவமாம். அங்ஙனஞ் செய்வாயாயின் முதலில் அந்தத்தாரிலுள்ள தேனையருந்திக் களிப்பாய். மீண்டு இங்குவரினும் இங்கேயும் அம் மாலையிலுள்ள தேனை நுகர்வாய். தூது விடுபவர்கள் எதனை விரும்புகிறார்களோ அப்பொருளே தூது செல்பவர்களுக்குமுரியதெனின், உன்னுடைய பேற்றை நானென்னவென்று சொல்லுவேன்?

உன்னுடைய பெருமை பலவல்லவோ? நீ பிறந்ததனாலன்றோ உன் குலம் ஈடேறியது. சிவபெருமானைத் தரிசிப்பதற்கும் அவருடைய திருமேனியைத் தீண்டுவதற்கும் பெற்ற உன்னைப்போல் பாக்கியமுடையார் வேறு யாருளர்? கொன்றைமாலையிலுள்ள தேனையுண்டு முன்னின்பம் நீ பெற்றுப் பின்பு அம்மாலையை எனக்களிக்குந் தன்மையால், தான் முதலில் உணவை உண்டு பின்பு அதன் சாரத்தைத் தன் வயிற்றிலுள்ள குழந்தைக்கு அருத்தும் தாய்போல்வாய். ஆதலால் உன்னைத் தூதுவிட விரும்பினேன்.

உன்னுடைய உருவத்தை எடுத்த தன்மையினாலேதான் முருகவேள் உமாதேவியாரின் கூந்தலிலிருந்து வேதத்தை அறிந்தார். திருமால் முதலியோர்கள் உன் பெயராகிய அரியென்பதை யுடைமையால் சிவபெருமானுடைய அருளால் உயர்ந்த பதவியிலிருக்கின்றார்கள். சிங்கம் பாம்பு முதலியனவும் அப்பெயரைக் கொண்டமையாற் பெருமையடைந்தன. அன்றியும் உன் பெயர்களாகிய மந்தி முதலியவற்றைப் பெற்று வானரமுதலியன உயர்வை யடைந்தன. இவ்வாறு உன்னுடைய

நாமங்களே யாவருக்கும் நன்மையைத் தருவனவெனின் நாமியாகிய நீ எனக்கு நன்மையை அளித்தல் அதிசயமோ?

என்னுடைய வளைகள் வண்டென்னும் பெயரையுடையன. என்னுடைய கூந்தலில் உன்குலம் தங்கி வாழும். என் கண்கள் உன்னைப் போன்ற உருவமுடையன; அவையாடும் செயலும் உன் செயலையொத்ததே. அவற்றிலமைந்த இரேகை அரியென்னும் உன்பெயரை அடைந்ததே. என் காற்சிலம்பிலுள்ள பரல்கள் உன்னுடைய அப்பெயரைக் கொண்டனவே. இவ்வகையினால் உனக்குரிமையுடைய என்னை, உன்குலத்தை நாணுகக்கொண்டு மாரன் வருத்துதலை நீ பார்த்திருத்தல் முறையோ? தவிர்க்கவேண்டுமன்றோ?

உன் பெயரைக்கொண்ட (வண்டு) என் கைவளைகளை நழுவாமல் உன்னையன்றி வேறுயார் காப்பார்? உன்னுடைய உருவம்போன்ற கண்ணிலிருந்து வரும் நீரை உன்னையன்றி வேறுயார் விலக்கவல்லவர்? மகளிருடைய உடம்பையும் பசலையையும் ஒத்தனவென்று எண்ணித்தானே சண்பக மலரையும் வேங்கை மலரையும் நீ அணுகாய்.

ஸ்ரீ காஞ்சியில் தமக்கு நிழலளிக்கும் மா, பலாசு, வில்வம் என்னும் மரங்களிலுள்ள மலரின் மதுவையுண்ணுதற்காக நீ சுழன்று சென்று பறந்தாலும் தம்மை வலம்புரிந்தாயென்று நினைத்து அவர் அருள் செய்வார். அத்தகையவராகிய ஆனந்த ருத்திரேசரைத் தரிசித்தல் உனக்கு மகிழ்ச்சியைத் தருவதன்றோ!

உலகில் ஒருவர் ஒருவரை இரத்தல் அருமை. அவ்வாறு இரப்பார் உவப்பக் கொடுத்தலினும் சிறந்தபுகழ் வேறு ஒன்றுமில்லை. அத்தகைய புகழ் அளிக்கல்லாமல் (அளி - அன்பு, வண்டு) வேறுயாருக்கு உண்டாகும்?

நீ அவரிடம் தூதாகச் செல்வாயாயின் என்னுடைய துன்பங்கள் எல்லாம் நீங்கும், இன்பம் உண்டாகுமென்று எண்ணி உன்னை இரந்தேன். இதுசெய்தல் கடப்பாடென்று நீ நயப்பாயாக

இலளிதை முதலிய சத்திமார்களுக்கும் ஏனைய மகளிர்க்கும் வரங்களை யளித்தவராகிய அவரிடத்து ஒரு பெண்ணுக்காகத் தூதுசெல்லுதலை யார்தாம் விரும்பார்?

மதுகரமே! உன்னுடைய பெயராகிய மிஞிறென்பதிலுள்ள எழுத்துக்கள் மாறி ஞிமிறென்று திரிந்ததனால், வைசாகியென்பது வைகாசியெனத்திரிதல் முதலிய எழுத்துநிலை மாற்றங்களும், நீர்க்கீழென்பது கீழ்நீரென வருதல் முதலிய சொன்னிலை மாற்றங்களும், திணைமயக்கம் முதலிய பொருள் நிலைமாற்றங்களும், யாதனை முதலியவற்றின் உறழ்ச்சியாகிய யாப்புநிலை மாற்றங்களும், காவிமதி யென்பது காழவிதியென வருதல் முதலிய அணிநிலை மாற்றங்களும் உண்டாயின. ஆதலினும்

நீ எது செய்யினும் அச்செயலுக்கு அவருடைய திருவருள் துணையாகவே நிற்குமென்பதற் கையமில்லை.

அளியே! நீ உலகில் மிகவும் கீழான தொழிலையும் மிகவும் மேலான தொழிலையும் செய்யாய் * * * * * * * *

எல்லாத் துறைகளிலும் நீ பயில்வாய். ஆனந்தருத்திரேசர் திருவருட்குரியவர்கள் உன்போல் வேறுயாவர் உளர்? தேவர்களும் உன்னைத் தங்களுடைய தலையின் மேற் கொள்வார்களெனின் உன்னை யார் வெறுப்பார்?

அரியே! நீ தூதாகச் செல்கையில், இடையில் உள்ள பல சோலைகளிலும் மலர்களிலும் சென்று மொய்த்துக் காலம் போக்காமல், விரைவில் ஆனந்தருத்திரேசரிடம் சென்றெய்தி உமாதேவியாரும் கங்கையும் அறியாமல் அருகிற்சென்று ஸ்ரீ பஞ்சாட்சரத்தைத் தியானித்துப் பணிவுடனே அவருடைய கொன்றை மாலையில் இவர்ந்து தேனையுண்டு மகிழ்ந்து காந்தாரம் முதலிய இராகங்களைப் பாடுவாயாக. பாடினல் அவர் குறிப்பறிந்து எளியேனுடைய துயரை நீக்கியருள முற்படுவர்.

சுரும்பே! "எல்லாவற்றையும் சொல்லி மாலை வாங்கி வருமளவும் எவ்வாறு உயிர்தரிப்பாய்? உயிர்தரிப்பினும் அவர் வந்து தழுவுமளவும் அந்த மாலையால் எவ்வாறு ஆற்றியிருப்பாய்? அவர் எவ்வாறு இங்கே வருவார்?" என்று நீ ஐயமுற்றாயாயின், சொல்லுவேன் கேட்பாயாக:

இங்கே என் உயிர்போனாலும், முன்பு பலருக்கு உயிரையும் உடலையும் இத்தலத்தில் ஈந்தருளிய அவர் எனக்கு மீண்டும் உயிர்தந்தருளுவாரென்பதுண்மை. அவர் பல மகளிருக்கு முன்னம் கருணை பாலித்துள்ளார். தம்முடைய மாலையை உன்னிடம் தந்து நீ இங்கே வந்து சேருவதற்கு முன்பு தாமே வந்தாலும் வந்துவிடுவார். அவர் அவ்விடத்தில் இருந்தாலும், எங்கும் நிறைந்திருப்பவராதலின் என் துயரை அறியாரோ? இன்னும் அவருடைய திருவருட் செயல்களும் பெருமைகளும் பல.

அவ்ரோடு பழகுவாருக்கு அவருடைய திருக்கண் முதலியன ஆனந்த மயமாக இருக்கும். அவர் எழுந்தருளியிருக்கும் காஞ்சியும் ஆனந்த மயமே. அத்தகையவராகிய ஆனந்தருத்திரேசர் திருக்கோயிலையடைந்து முறைப்படி உள்ளே சென்று நான் சொல்லியவற்றை நினைந்து சொல்லியவாறே ஒழுகி அவருடைய கொன்றை மாலையை வாங்கிவந்து எனக்கு வழங்கி அதனலே வளர்கின்ற பெரிய இன்ப வாழ்க்கையை உதவுவாயாக.

---

* இவ்விடங்களில் ஆசிரியர் சிலேடையிற் பல விஷயங்களைச் சுவைபடக் கூறுகின்றார்; அவை வசனத்திலெழுதின் விரிவு தருமென வஞ்சி விடப்பட்டன.

உ

கணபதி துணை.

கச்சி ஆனந்த ருத்திரேசர்

# வண்டுவிடு தூது.

## காப்பு.

### விநாயகக்கடவுள்.

க. மணிநீர்ப் புவிவியக்கும் வண்காஞ்சி வைப்பிற்
பிணிநீர் மலம்பெயர்க்கும் பெம்மான் - அணிசீர்செய்
வண்டுவிடு தூதுக்கு வான்பொருளெ லாநிரம்பக்
கண்டுவிடு முக்கட் களிறு.

---

## குறிப்புரை.

### காப்பு.

க. மணிநீர் - பளிங்குபோலும் நீரையுடைய கடல்சூழ்ந்த; 'பளிங்குவகுத் தன்ன தீநீர்" (புறநா. கங0 : 27); "மணிநீர் வைப்பு" (சிறுபாண். 152); நீலமணி போன்ற நீரெனினுமாம். வியக்கும் - கண்டோர் வியப்புறுதற்கிடமாகிய; பல விம்பிதங்களுக்கும் காஞ்சி இடமாயிருத்தல்பற்றி வியக்குமென்றார்; "வெள்ள வேணிய ருளினு லற்புத விளைவென், றுள்ள வைக்கெலா முறைவிட மாயது காஞ்சி" (கா. விம்பித. 2.) பிணிநீர் - கட்டும் நீர்மையையுடைய; பிணி - நோயுமாம். மலம் நித்தியமாயிருத்தலிற் பெயர்க்குமென்றார். பெம்மானென்பது பெருமானென்பதன் சிதைவென்பர். பிணி........பெம்மான் : "பிணியா வருக்கும் பெயர்ப்பான்" என்பர் பின்; கண்ணி, சஅக. வண்டுவிடு தூதுக்கு - வண்டு விடுதூதென்னும் இந்நூலை அடியேன் இயற்றுதற்குரிய. வான்பொருள் எலாம் - சிறந்த அர்த்தங்களெல்லாவற்றையும். கண்டுவிடும் - செய்தருளுவர். முக்கட் களிறு - விநாயகர்.

முக்கட்களிறு கண்டுவிடுமென்க.

## ஸ்ரீ ஆனந்த ருத்திரேசர்.

உ. திருவழங்கும் பல்கலையுஞ் சேர்க்குமிடர் தீர்க்கும்
அருள்வழங்கு மானந்த மாக்கும் - மருவழங்கும்
ஆத்தி மதிமிலைந்த வானந்த ருத்திரனைத்
தோத்திரஞ்செய் வார்க்குத் துணைந்து.

---

## நூல்.

(கலிவெண்பா.)

### பிறைவளர் வேணி இறையவன் பெருமை.

க. பூமாது புல்கும் புயல்வண்ணப் புத்தேளும்
நாமாது புல்குநளி னத்தோனும் - கோமானும்

உ. வானவரு மண்ணவரும் வானடைய வைந்தொழிலும்
தானடவி நின்ற தனிமுதல்வன் - வானமுதல்

ந. பூதமுதற் காரணமாய்ப் பூத பவுதிகமாய்ப்
பேதமு மான பெருஞ்சோதி - கோதகன்ற

ச. சிற்றறிவுக் குள்ளே செறிந்து திருமேனி
முற்று மெடுத்த முறைமையான் - முற்ற

ரு. மறையாக மங்கலைகண் மற்றுங் கிளந்து
முறையாவும் வைத்த முனிவன் - முறைபுரியும்

---

உ. மரு - நறுமணம். ஆத்தி மதி மிலைந்த - ஆத்திப் பூவையும் பிறையையும் சூடிய. துனைந்து - விரைந்து.

அத்தோத்திரம், துனைந்து வழங்கும், சேர்க்கும், தீர்க்கும், வழங்கும், ஆக்குமென்க.

நூல்.

க. கோமான் - இந்திரன். இந்திரனை அரசனென்றே வழங்குவர்; "புரவலன்வாழ் வுய்க்க" (உஎ) என்பர் பின்னும்; "வேந்தன் மேய தீம்புன லுலகமும்" (தொல். அகத். சூ. 5), "வேந்தனும் வேந்து கெடும்" (குறள், 899) என்பவைகளும் இக்கருத்தை வலியுறுத்தும்.

உ. வான் அடைய - முத்தியுலகத்தை அடையும்படி. ஐந்தொழிலும் தான் நடவி - படைப்பு முதலிய ஐந்து தொழில்களையும் தான் நடத்தி; "மாவடியி லோங்கிய வைந்தொழில்செ யுத்தமனார்" (சகூ0) என்பர் பின்னும்.

ரு. கலைகள் - அறுபத்துநான்கு கலைகள். கிளந்து - சொல்லி. முறை - ஒழுக்கம். முறைபுரியும் - விதித்தவற்றைச் செய்யும்.

௬. ஆருயிர்க்குப் போக மருத்தித் திறம்புயிர்கட்
கோருமருந் துன்ப முறுத்துவோன் - சாருடலின்

௭. ஐந்தவத்தைச் சாக்கிரத்தி னூர்வினையிட் டாவிகட்கு
மைந்துமல மிந்துவென வாட்டுவோன் - முந்து

௮. மலமாற வண்கருணை மாறு வருளின்
நிலைமாறு பாக நிறுப்போன் - மலமூன்றும்

௯. போக்கி முழுத்த புகருயிரை யாங்கறிவின்
ஆக்கித் தனைக்காட்டு மாண்மையான் - ஊக்கியெழும்

௧0. எற்றந் தவிர்த்தொளியி னேய்த்துத்தன் னோடொருக்கி
அற்ற நிலையருளா னந்தன் - ஒற்றைமறை

---

௬. போகம் அருத்தி - இன்பத்தை நுகரச்செய்து. திறம்பு - முறையினின்றும் மாறுபடுகின்ற. ஒரும்: அசைநிலை; "ஓருந், தனைநோக்கு மாருயிரை" (௪௮௭ - ௮) என்பர் பின்னும்; "செயற்பால தோரு மறனே யொருவற், குயற்பால தோரும் பழி" (குறள், 40.) உறுத்துவோன் - அடையச்செய்பவன்.

௭. ஐந்தவத்தைச் சாக்கிரம் - சாக்கிரத்திற் சாக்கிரம், சாக்கிரத்திற் சொப்பனம், சாக்கிரத்திற் சுழுத்தி, சாக்கிரத்தில் துரியம், சாக்கிரத்தில் துரியாதீதம்; சிவ. போ.சூ. 4, அதி. 3, பார்க்க. ஐந்தவத்தை......... இட்டு - ஐந்து அவத்தையினையுடைய சாக்கிரத்தானத்திலே நுகர்தற்குரிய வினைப்போகத்திற் சேர்த்து; கனவுமுதலிய நாலவத்தைகளில் வினையைச் செய்தல் இன்மையின், 'ஐந்தவத்தை.........இட்டு' என்றார். மைந்து - வலி. இந்துவென வாட்டுதல்: "மன்னு மிருளை மதிதுரந்த வாறன்பின், மன்னு மரனே மலந்துரந்து" (சிவ. போ. சூ. 11, அதி. 2); "மதிவளம் படைத்து நாளும் வளரிருள் சீக்கு மாபோற், கதிவளம் படைக்குந் தூய கருணை" திருவானைக்காப். கடவுள். 2.

௮. பாகம் - பக்குவம்.

௯. முழுத்த - நிரம்பிய; "முழுத்த கேள்வியன்" (கா. பன்னிரு. 146); "முழுத்தபே ரறிவாய்" (தணிகைப்பதிந். 1.) ஊக்கி - எழுப்பி.

௧0. எற்றம் - மனத்துணிவு; "எற்றமி லாட்டி" (கலி. ௧௪௪: 63); என்றது இங்கே ஆன்மாவின் முனைப்பை. எய்த்து - பொருந்தச் செய்து. ஒருக்கி - ஒன்றுபடுத்தி. அற்றநிலை - பற்றற்ற நிலையை.

'ஒற்றைமறைமா' என்பதுமுதல் ௫௪ - ஆங்கண்ணி இறுதியாகக் காஞ்சியிலுள்ள விசேடங்களை எண்ணணியமையக் கூறுவர்.

வாஞ்சித் திடுதிருக் காஞ்சித் தலச்சீர்:

செம்மிய நலனுறு விம்மித வகைகள்.

கக. மாவு மிருசுடரும் வான்விலங்கு மொண்கோட்டத்
தேவியமை தீர்த்தங்க ளோரிரண்டும் - மேவினர்க்குப்

கஉ. பல்பவத்துத் தாதையரைத் தாயரைப்பல் கேளிரையிவ்
வொல்பவத்துக் காட்டுமிட மோர்மூன்றும் - வெல்பனுவல்

கங. வாக்கியிழி மூகையென மூகைமொழி வாக்கியென
ஆக்குவது நீரமுத மார்த்துவதும் - தேக்கெறிய

கச. வேட்டன யாவும் விளைப்பதுவு மென்னவிருள்
ஓட்டுமணித் தெற்றி யொருமூன்றும் - ஈட்டுமுவொன்

கரு. றின்றி விளைப்பதுவித் திட்டஞான் றேவிளைவு
துன்றுவது கொய்யுந் தொறுமீள - நன்று

---

க0 - கக. ஒற்றை மறைமா - நான்கு வேதங்களாகிய ஒரு மாமரம்; இது தலவிருக்ஷம்; "வண்ண மாமறை வடிவமாந் தனிப்பெரு மா", "வேதமொரு மாவாக வுறைதலினல்" (ப. கா. சிவாலயச். 80, 519); கா. திருவேகம்ப. 3 - 4. இருசுடர் - சந்திராதித்தர். வான் விலங்கும் - வானில் விலகிச்செல்லும். கோட்டம் - கோயில். தேவி - ஸ்ரீ காமாட்சியம்மை. ஸ்ரீ காமாட்சியம்மையின் கோயிலுக்கு நேரே செல்லாமல் சந்திராதித்தர் ஆகாயத்தில் வழிவிலகிச் செல்வாரென்பது ஐதிஹ்யம்; பெரிய. திருக்குறிப்பு. 74. தீர்த்தங்கள் இரண்டாவன, உமாபத்திரை, கீர்த்திமதி என்பன. இவை முறையே திருவேகம்பத்தின் தென்பாலும் வடபாலுமாக உள்ளன; கா. கழுவாய். 329 - 30.

கக - உ. இடம் மூன்று: கா. விம்மித. 7.

கஉ - ச. வெல் - பிறரை வெல்லுகின்ற. பனுவல் வாக்கி - பாடலைச்செய்யும் வாக்கையுடைய கவிஞன். மூகை - ஊமை. ஊமையாக இருந்த ஒருவர் இத்தலத்திற் சிலபெரியோர்களது கட்டளையின்படி தேவியை வழிபட்டு அருள்பெற்றுச் சிறந்த வாக்கியாய்த் தேவியைத் துதித்தனரென்றும் அதனல் அவர் மூககவியென்று புகழ்பெற்று விளங்கினரென்றும் வடமொழியறிஞர் கூறுவர். நீரும் அமுதமும்; அமுதம் - உணவு. தேக்கு எறிய - ஏப்பம்விட; "வாய் மடுத்துத் தேக்கெறிந்து" (௩௫௪) என்பர்பின்; தேக்கெறிய ஆர்த்துவதென்க. தெற்றி - திண்ணை; "இலங்குவளை மகளிர் தெற்றி யாடும்" புறநா. ௫௩: 3.

தெற்றிமூன்று: கந்த. நகர. 93; கா. விம்மித. 8.

௧௬. விளைவதென மும்மை வியனுலகும் போற்றும்
வளமலிந்த தெய்வவயன் மூன்றும் - ஒளிருமென்றாழ்

௧௭. வேத னரியரனை விண்ணோர் தொழத்தெரிக்கும்
ஆதி மடங்க லணைநான்கும் - மாதரமிழ்

௧௮. தூற்றுபொலம் பூஞ்சூத மொண்ணிழல்சா யாக்காஞ்சி
தோற்றுகாய் பூவில் சுவைப்புளிபல் - வேற்றலரும்

௧௯. பூக்கு மிருப்பைமலர் பொன்னத்தி யென்றுவிண்ணைத்
தாக்குங் கடவுட் டருவைந்தும் - தேக்கமலம்

௨௦. எல்லிற் பகற்குமுத மேய்ந்தலர்வ தோர்நாளத்
தல்லிக் கமலத் தலர்மூன்று - புல்லுவது

௨௧. வானர மாக்குவது வண்மை தருவதொன்னார்க்
கூனமுய்ப்ப தாந்தடங்க ளோரைந்தும் - வானமழை

௨௨. காலமன்றிப் பெய்யக் கரைமஞ்ஞை வேட்டவெலாம்
சாலவருணைமிமறை சாற்றுகிளி - நூலிசைவல்

---

௧௪ - ௬. 'உழவு - உழுதல். வித்திட்ட ஞான்றே - விதை விதைத்த தினத்திலேயே. நன்று - மிக.

வயல்மூன்று : கா. விம்மித. 9.

௧௬ - ௭. என்றாழ் - சூரியன். தெரிக்கும் - தெரிவிக்கும்.

மடங்கலணை நான்கு - சிங்காதனம் நான்கு : கா. விம்மித. 10.

௧௭ - ௯. மாதர் - விருப்பம். அமிழ்து - அமிர்தம். பொலம்பூ - பொற்பூ. சூதம் - மாமரம். காஞ்சி - காஞ்சிமரம்; நிழல்சாயாக் காஞ்சி: பெரிய. திருக்குறிப்பு. 75; "நின்றவிடங் காஞ்சி நிழல்" (ஏ. உலா, 18); "ஒரு காஞ்சி.........தன்னிழல் பிரிகிலா துறலால்" (கந்த. நகர. 64.) காய் பூ இல் - காயும் பூவும் இல்லாத. புளி - புளியமரம்; இதனைக் காயாப்புளி யென்பர்; பெரிய. திருக் குறிப்பு. 79. வேற்றலரும் - தன்பூவையன்றி வேறு பூக்களையும். இருப்பை - இருப்பைமரம். மலர் பொன் அத்தி - பூக்கின்ற பொன் மயமான அத்திமரம்.

கடவுட்டரு ஐந்து: கந்த. நகர. 94; கா. விம்மித. 11.

௧௯ - ௨௧. தேக்கமலம் - தேனையுடைய தாமரைப்பூ. எல்லில் - இரவில். பகல் - பகலில். ஓர் நாளத்து - ஒரு தண்டில். அல்லி - அக விதழையுடைய. புல்லுவது - பொருந்துவது; மலர்வது. ஒரு தாளில் மூன்று கமலம் மலரும் தடம்: பெரிய. திருக்குறிப்பு. 79; ஏ. உலா, 20. வானரமாக்குவது - வானரமாக்குந்தடம்; வானரமாக்கும் பிலமென்

உ௩. பூவை முழுதுணர்க போதங் கணித்தாந்தை
பாவு புகழ்ப்பறவை யோராறும் - தேவர்மொழி
உ௪. கேட்ப வுரகர்மொழி கேட்பவிண்ணூர் காணவிழு
தேற்பதின்றித் தீப மெரியமுயற் - கார்ப்பொடிபம்
உ௫. மங்கத் திசைமயக்க மல்கவொலித் துந்துமிகள்
பொங்கத் திகழ்ந்த பொதுவேழும் - தங்குபிணி
உ௬. சீப்ப மனக்கினிய சேர்ப்ப விழைந்தவெலாம்
யாப்பமணி யேரிசைப்ப வேமவுருக் - கோப்பப்
உ௭. புரவலன்வாழ் வுய்க்கமெய்ஞ்ஞா னம்புணர்த்த வீடு
தரவமைந்த தண்பொய்கை யெட்டும் - வரவிமையோர்
உ௮. ஆக்கவிடங் தீர்க்கசித்தி யார்த்தவுயிர் நல்கவழக்
கூக்கி யறுக்க வுறுபிணிபுண் - போக்கவுடல்

---

பர்; பெரிய. திருக்குறிப்பு. 80; ஏ. உலா, 24 - 5. வண்மை - வளம், இன்பம். ஊனம் - கேடு. தடங்கள் - தடாகங்கள்.

தடங்கள் ஐந்து : கா. விம்மித. 12.

உக - ௩. வானம் - மேகங்களானவை; வானம் மழையைப் பெய்யும்படி. கரை மஞ்ஞை - ஒலிக்கின்ற மயில். நேமி - சக்கரவாகப்புள். நூல் இசை வல்பூவை - நூல்களை இசைத்தலில் வல்ல நாகணவாய்ப்புள். கபோதம் - மாடப்புறா. கணித்து ஆந்தை - கணியின் தன்மையையுடைய ஆந்தைப்பறவை; கணி - சோதிடங் கூறுவோன். பாவு - பரவிய.

பறவை ஆறு : கா. கலித். 148; கா. விம்மித. 13.

உ௩ - ௫. உரகர் - நாகலோகத்தாருடைய. விண்ணூர் - சுவர்க்கலோகத்தை. இழுது - நெய். தீபம் - இங்கே தூண்டாவிளக்கு; ஏ. உலா, 20; கந்த. நகர. 92; "பூண்டாங்கு கொங்கை பொரவே குழைபொருப்புந், தூண்டாத தெய்வச் சுடர்விளக்கும் - நாண்டாங்கு, வண்மைசால் சான்றவருங்காஞ்சி வண்பதியும், உண்மையா லுண்டிவ் வுலகு" (தண்டி. மேற்.) முயற்கு ஆர்ப்போடு இபம் மங்க - முயலுக்கு ஆரவாரத்தோடு யானை தோல்வியுற. யானையை முயல் துரத்துமிடம் : பெரிய. திருக்குறிப்பு. 77; ஏ. உலா, 17 - 8. மல்க - பெருக. பொது - அம்பலம்.

பொதுவேழு : கா. விம்மித. 14.

உ௫ - ௭. பிணி சீப்ப - நோயை நீக்க. மனக்கு இனிய - மனத்திற்கு இனியவற்றை. யாப்ப - பொருந்தச்செய்ய. மணி ஏர் - இரத்தினத்தின் அழகையுடைய உருவம். ஏம உரு - பொன் உருவத்தை. புரவலன் வாழ்வு உய்க்க - இந்திரனது செல்வத்தைக் கொடுக்க.

உசு. பட்ட துணிபொருத்தப் பாற்றவினை மெய்ஞ்ஞானம்
ஒட்ட வமைந்தசிலை யொன்பதும் - அட்டும்

ந௦. இரசதம்பொ ஞரமில கிந்திர நீலம்
குருவிந்தங் கோதில் வயிரம் - புருடரா

நக. கங்கலுழப் பச்சை கதிர்த்தவயி டூரியமென்
பொங்குமழை நல்குபொழி லொன்பதும் - தங்கிற்

நஉ. றிசைமயக்கக் கல்விநலந் தேற்றமருள் சோரர்க்
கிசைவிக்கப் பல்வடிவு மேய்ப்ப - வசைவினைஞர்

நந. மூங்கையுறப் பாதலத்தின் முற்றுபிலங் காட்டவுற்றோர்
தாங்கள்பிறர் காணுத் தகுதிபெற - ஒங்கொளிப்பொன்

நச. மாணிக்க மாரி பொழியவரஞ் சாவாமை
பேணிக்கொடுக்கப் பிறங்குபகல் - ஏணிரவு

நரு. மாறுபெறக் காட்ட வமைந்து வயங்கியிடர்க்
கூறுசெயு மன்ற மொருபதும் - பாறயிர்நெய்

---

பொய்கைஎட்டு : கா. விம்மித. 15; பொய்கைகள் ஒன்பதென்பர்; கந்த. நகர. 97.

உஎ - கூ. வரம் - விசேடத்தையுடைய. விடம் - விஷம். தீர்க்க சித்தி : சகரம் தொகுத்தல். ஆர்த்த - பொருந்தச்செய்ய. ஊக்கி - மேற்கொண்டு, பிணியையும் புண்ணையும் போக்க. துணி - துண்டத்தை. வினையைப் பாற்ற; பாற்ற - நீக்க. ஒட்ட - பொருந்தச்செய்ய. சிலை - கல்.

சிலையொன்பது : கா. விம்மித. 16; சிலைபத்தென்பர்; கந்த. நகர. 98 - 9.

உகூ - நக. அட்டும் - சொரிந்த. இரசதம் - வெள்ளி. ஆரம் - முத்து. குருவிந்தம் - சிறந்ததோர் இரத்தினம்; "குருவிந்தந் தரிப்பவர்பார் முழுதுமொரு குடைநிழலிற் குளிப்ப வாண்டு, திருவிந்தை யுடனிருப்பர்" (திருவிளை. மாணிக்கம். 42.) புருடராகம் - புருஷராகம். கலுழப்பச்சை - கருடப்பச்சை. கதிர்த்த - ஒளியை வீசிய.

பொழிலொன்பது : கா. விம்மித. 17.

நக - ரு. திசை மயக்க - திசை மயக்கத்தை உண்டுபண்ணவும். திசைமயக்கம் உண்டாக்குமன்றம் : பெரிய. திருக்குறிப்பு. 74. தேற்ற - தெளியச்செய்யவும். மருள் - மயக்கத்தை. சோரர்க்கு - திருடர்க்கு. சோரர்க்கு மருள் இசைவிக்கவும். ஏய்ப்ப - பொருந்தச் செய்யவும். வசைவினைஞர் - பிறரை வைவோர். மூங்கை உற - ஊமைத்தன்மையை அடையவும், உற்றோர் பிறர்காணுத்தகுதியைப் பெற. சாவாமை வரம்

௩௬. தேன்கருப்பஞ் சாறு திகழ்ந்தனநன் முத்திநெறி
வான்கதிமற் றேனையுல கத்துவழி - தான்கருதக்

௩௭. காட்டுவன சாயைபிணிப் பக்கலந்தோர் தாமயரார்
மீட்சியுற வித்தின்றி மென்பயிர்கள் - ஈட்ட

௩௮. இயைந்தநறு நீரினவென் றெவ்வுலகும் போற்ற
உயர்ந்தமணிக் கூவல்பதி னொன்றும் - நயந்துதன்பால்

௩௯. இட்டவெட்கு நெய்யொருபா லீயுந் தனிச்செக்கும்
தொட்டனபொன் னூக்குஞ் சுடர்ச்சிலையும் - முட்டும்

௪0. வினைப்பயனைத் தாமே விளக்குமொரு கல்லும்
தனைப்பொருவுங் கற்பாவை தானும் - எனைத்துமருள்

௪௧. தாவா வயிரவனூர் தாங்குநட னச்சிலம்பார்ப்
போவாது கேட்கு மொலியிடமும் - பாவாணர்

௪௨. எண்ணித் தளரவின்னு மீண்டுபல விம்மிதமும்
அண்ணற் கவுரியறச் சாலைகளும் - நண்ணிக்

௪௩. குடக்கோடி நீர்கரக்குங் கோணைநத மொன்றும்
இடக்காம ரேரி யிரண்டும் - தொடக்கீர்த்து

---

கொடுக்கவும். மன்றம் - ஊர்க்கு நடுவே எல்லாருமிருக்கு மரத்தடி யென்பர்; முருகு. 226, ந.

மன்றம்பத்து : கந்த. நகர. 100 - 101 ; கா. விம்மித. 18.

௩௬ - அ. பாலும் தயிரும் நெய்யும். வான்கதி - சுவர்க்கத்தை அடையும் வழி. சாயை பிணிப்ப - நிழலை இல்லாமற்செய்ய. சாயை பிணிக்கும் கூவல் : பெரிய. திருக்குறிப்பு. 80. மயரார் - மயக்கமடையாராகி. வித்து - விதை. கூவல் - கிணறு.

கூவல் பதினொன்று : கா. விம்மித. 19.

௩௯ - ௪0. எட்கு - எள்ளிற்கு. செக்கு : கா. விம்மித. 20. பொன்னூக்குஞ்சிலை : பெரிய. திருக்குறிப்பு. 84 ; ஏ. உலா, 23. பாவை - பிரதிமை. விளக்குங்கல்லும் விளக்கும் பாவையுமென்க.

கல்லுங்கற்பாவையும் : கா. விம்மித. 20.

எனைத்தும் - யாவற்றையும்.

௪௧. வயிரவனூர் சிலம்போசை கேட்கு மிடம் : கா. விம்மித. 20.

௪௨. பலவிம்மிதமுண்மை : கா. விம்மித. 21. அண்ணல் - பெருமை. கவுரியின் அறச்சாலைகள் : உ௬௭-ஆம் கண்ணியைப் பார்க்க.

௪௩. குடக்கு - மேற்கு. கரக்கும் - ஒளிக்கும். கோணை : கோண் - மாறுபாடு ; ஐ : சாரியை ; "கோணைக் களிறு" (சீவக. 28.) நதம் -

சச. முத்தியருண் மண்டபங்கண் மூன்று நிலநான்கும்
அத்தன்மகிழ் புட்கரிணி யாங்கைந்தும் - உத்தமிமுன்

சரு. காத்தமத மாறுங் கடிநதிக ளோரேழும்
ஆத்தனருள் பீட மவையெட்டும் - சாத்தர்களோர்

மேற்கேயோடும் ஆறு; குடக்கோடி நீர்காக்கும் நதம்: பெரிய. திருக்குறிப்பு. 79; ஏ. உலா, 21 - 2.

ஏரி இரண்டு: "ஏரி யிரண்டுஞ் சிறகா வெயில்வயிறுக், காருடைய பீலி கடிகாவாச் - சீரிய, அத்தியூர் வாயா வணிமயிலேபோன்றதே, பொற்றேரான் கச்சிப் பொலிவு" யா. வி. மேற்.

சச. முத்திமண்டபம் மூன்று: முத்தீச்சுரத்திற்கு எதிரில் ஒன்றும் சர்வதீர்த்தத்தின் பக்கத்தில் ஒன்றும் திருவிராமேச்சுரத்தின் சந்நிதியிலொன்றும் உள்ளன; கா. சருவ. 24 - 5.

நிலம் நான்கு - குறிஞ்சி முதலிய நிலங்கள் நான்கு; காஞ்சித் தலத்தின் எல்லை மிக விசாலமாக உண்மையின் அவ்வெல்லையுள் குறிஞ்சி முதலிய நான்குதிணைகளும் அடங்கியிருத்தலை நினைந்து இங்ஙனங் கூறினார்போலும்.

புட்கரிணி ஐந்து: சூரியபுஷ்கரிணி, சந்திரபுஷ்கரிணி, அக்கினிபுஷ்கரிணி, சுவர்ணபுஷ்கரிணி, அமிர்தபுஷ்கரிணி; "உரைக்கு மிரவி மதி கனலி சுவண மமிழ்த முறுபெயரான், வரப்புட் கரிணித் தடமைந்தும்" கா. திருக்கண். 10.

சச - ரு. உத்தமி - உமாதேவியார். உத்தமி முன் காத்த மதம் ஆறு: "ஆண்ட நாயகி சமயங்க ளாறும்........அளிக்குமந் நகரும்" (பெரிய. திருக்குறிப்பு. 84); "சமய மாறினையுந் தாயென வளர்த்து" கந்த. நகர. 78.

நதிகள் ஏழு: பம்பை, கம்பை, மஞ்சணதி, வேகவதி, பாலி, சேயாறு, புண்ணியநீர்; கா. தல. 23; இவை வேறாகவும் நூல்களிற் காணப்படுகின்றன; "எழுநதிதாம், கம்பைநற் பம்பை மஞ்சணீர் பிச்சி கலிச்சிபொன் மண்ணிவெஃகா காவே" (கந்த. நகர. 95); "கலிச்சியும் மண்ணியுஞ் சிப்பியு மஞ்சணீர்க் காலுமேன் மேல், அலைப்பயில் பம்பையும் வெஃகாவுங் கம்பையு மாகியிங்கே, நிலைப்பட வின்றி யெழுநதி யாக நிகழ்ந்தனவே" (கா. கலித். 149.) ஆத்தன் - சிவபெருமான்.

பீடம் எட்டு: சத்திபீடம், ருத்ரபீடம், சசாங்கபீடம், முத்திபீடம், ஆரியாபீடம், தர்மார்த்தகாமபீடம், ஆதிபீடம், யோகபீடம்; கா. திருக்கண். 9; ப. கா. அரிதிருமுற்றச். 53; பீடம் இரண்டெனவும் கூறப்படும்; பெரிய. திருக்குறிப்பு. 83.

சகூ. எண்மருந் துர்க்கையர்க ளெண்மருங் காளியர்கள்
எண்மருமாற் குச்சிறந்த வெட்டிடமும் - விண்ணவரும்

சஎ. பற்றியெழு வாரத்தும் பாய்ந்தாட மிக்குரிமை
உற்றமணித் தீர்த்தங்க ளொன்பதும் - முற்றுமலம்

சஅ. போக்க வமைந்தசிவ புண்ணியங்கள் பத்துமவை
ஆக்குமருள் மூர்த்தம் பதினொன்றும் - தேக்குபுகழ்

சகூ மந்திரமைந் தோடாறு மான நலனளித்துப்
பந்தமறுக் கும்பெயர்கள் பன்னிரண்டும் - இந்துமுடி

---

சடு - கூ. சாத்தர்கள் எண்மர்: கா. திருக்கண். கக.

துர்க்கையர்கள் எண்மர்: "பஞ்ச தீர்த்தத் தவள்காஞ்சிப் பதியாண் மணித்தா னத்துடையா, ளஞ்சந் தியினில் வாழ்வாள்சே யாற்றங் கரையாள் கீர்த்திமதி, கஞ்ச வதனத் தென்மலையாள் காப்புத் தீர்த்தத் தவளென்னுந், துஞ்ச மினவண் டளர்கூந்தற் றுர்க்கை கூற்றி னெண்மர்களும்" கா. திருக்கண். 7.

காளியர்கள் எண்மர்: "புரைதீர் கருப்பத் தானத்தி யோற்று மம்பி காபுரத்தி, தரைசூழ் கோடி மாரணைதன் காயோற் கார காரணிசீர், வரையா வென்றி யிலயசித்துப் பிட்டா புரத்தி மணிசித்தூர், கரையான் கூவத் தவளென்று காளி கூற்றி னெண்மர்களும்" கா. திருக்கண். 8.

மாற்குச் சிறந்த எட்டிடம்: அத்திகிரி, திருவெஃகா, நிலாத்திங்கட் டுண்டம், கிராகாரம், அட்டபுயம் (அட்ட புயங்கம்), சகாளாங்கம், ஊரகம், பாடகம்; கா. இருபத்தெண். 10. திருமாலுக்குரிய காஞ்சியிலுள்ள தலங்கள் பன்னீராயிரமென்று (கா. இருபத்தெண். 3) தெரிதலால் அவற்றுள் இந்த எட்டும் சிறந்தனவென்பதைப் புலப்படுத்தற்குச் சிறந்த எட்டிடமென்றார்.

சஎ. ஏழு வாரத்தும் ஆடும் ஒன்பது தீர்த்தங்கள்: ஞாயிறு இட்ட சித்தி; திங்கள் சிவகங்கை, கம்பை; செவ்வாய் மங்கள தீர்த்தம்; புதன் இந்திரதீர்த்தம், சங்கதீர்த்தம்; வியாழன் சூலதீர்த்தம்; வெள்ளி பஞ்ச தீர்த்தம்; சனி தீர்த்தராசம்; கா. தீர்த்த. 112 - 8.

சகூ. பெயர்கள் பன்னிரண்டு: காஞ்சீபுரம், திரிபுவனசாரம், காமபீடம், தபோமயம், மும்மூர்த்திவாசம், துண்டீரபுரம், இலய சித்து, பிரமபுரம், விண்டுபுரம், சிவபுரம், சகலசித்தி, கன்னிகாப்பு; கா. பன்னிரு. 8; இவ்வாறன்றி வேறு வகையாகவும் கூறப்படும்; கந்த. நகர. 64 - 74; கா. திருவேகம்ப. 54 - 8.

சீர்த்தளி வகையும் தீர்த்தம் பலவும்.

ருO. வாய்ந்தவிறை யோன்பல் வளம்பதியு ளுஞ்சிறந்தேர்
ஏய்ந்த தலங்க ளிருபதும் - ஆய்ந்துமையாள்

ருக. முட்டா தெடுத்தவற முப்பத் திரண்டுமவட்
கொட்டாய கோட்டமுத லொள்ளிடமும் - மட்டேறும்

ருஉ. கோதைக் கடம்பன் குமரகோட் டம்முதலாம்
தீதற்ற பற்ப றிருநகரும் - போதகத்துப்

ருங. பிள்ளை பலதளியும் பீடுடைவெய் யோன்முதலோர்
கொள்ளுமுயர் தேவ குலத்திரளும் - தெள்ளுபல

---

ருO. தலங்கள் இருபது : திருவேகம்பம், கச்சபாலயம், கச்சிக்கா ரோணம், திருமேற்றளி, இந்திராலயம், பணாதரீசம், மணீசம், சதுரானன சங்கரம், சுரகரீசம், பரசுராமம், உருத்திரர்கா, மாகாளம், வராகபுரம், திருவோத்தூர், திருமாற்பேறு, அநேகதங்காவதம், வேதநூபுரம், கச்சி மயானம், கடம்பர் கோயில், வீராட்டகாசம்; கா. இருபத்தெண். 8 - 9; இவை சில நூல்களில் வேறுவகையாகவும் காணப்படுகின்றன ; கந்த. நகர. 89. ஸ்ரீ காஞ்சியில் உள்ள சிவபெருமானாலயங்கள் பதினாறாயிர மென்றுதெரிதலால் (கா. இருபத்தெண். 2) இங்கே கூறிய இருபதும் அவற்றுட் சிறந்தனவென்பதைப் புலப்படுத்தற்குச் சிறந்து ஏரேய்ந்த தலங்களென்றார்.

ருO - ருக. உமாதேவியார் வளர்த்த முப்பத்திரண்டறங்கள் : கா. தழுவ. 138 - 42, கழுவாய். 238 - 70 ; "இச்சைப்படி தன்பேரற மெண்ணான்கும் வளர்க்கும், பச்சைக்கொடி.........கச்சிப்பதி கண்டான்" (வி. பா. அருச்சுனன்தீர்த்த. 13.) அவட்கு ஒட்டாய கோட்டம் - காமகோட்டம் ; பெரிய. திருக்குறிப்பு. 71 - 2. முதலொள்ளிட மென்றது இறைவியின் கூற்றினராகிய சத்திகளுடைய ஆலயங்களை.

ருஉ. கடம்பன் - குமரக்கடவுள். கடப்பமரம் மாலைபோலப் பூத்த லின், கோதைக் கடம்பென்றார் ; கோதை - மாலை; "துறுநீர்க் கடம் பின் றுணையார் கோதை" (சிறுபாண். 69) என்பதன் அடிக்குறிப்பைப் பார்க்க. குமரகோட்டம் : கா. குமர. நகர் - கோயில். முருகக்கடவுளின் ஆலயம் ஐந்நூறு என்பர் ; கா. இருபத்தெண். 5.

ருஉ - ரு. போதகத்துப்பிள்ளை - விநாயகக்கடவுள். தளி-கோயில். விநாயகர் கோயில் ஐந்நூறு என்பர் ; கா. இருபத்தெண். 5. வெய் யோன் - சூரியன். முதலோரென்றது, உமாதேவியின் கூற்றினராகிய சத்திகள் முதலியோரை. இவர்களுள் சூரியனுக்குக் கோயில் ஐந்நூறு, சத்திகளுக்கு ஐயாயிரம், துர்க்கை வைரவர் ஐயனார் இவர்களுக்குத்

௫௪. தீர்த்தமுந் தேவர் திரளும் பிறவுநனி
கூர்த்த வளமுங் குடிகொண்டு - பார்த்தலையில்

௫௫. ஓங்கிய காஞ்சி யொருநகரா யங்ககரிற்
றேங்கிய தீர்த்தத் திரளாகித் - தாங்குமருள்

௫௬. ஏகம்ப நாதரா யென்று மினிதிருந்தும்
பாகம் பலவான பல்லுயிர்க்கும் - மோகம்

௫௭. படைத்தமலந் தீர்ப்பப் பரிந்ததிரு வுள்ளம்
தொடுத்த கருணை துனைய - அடுத்தருளும்

கச்சியில் அமலன் நச்சிய தலங்கள்.

௫௮. மற்றுமொரு மூன்றுகம்பம் வாலீச நந்தீசம்
வெற்றிமயா னம்விண்டு வேசமெழில் - மத்தள

---

தனித்தனியே ஆயிரம் ஆயிரம், பிரமதேவருக்குப் பதினாயிரத்தெழுநூறு, ஆதிசேடனுக்குத் தொண்ணூற்றென்பது, அருகனுக்கு ஒன்பதினாயிரம், புத்தனுக்கு எண்ணாயிரமென்று புராணங்கூறும்; கா. இருபத்தெண். 3 - 6. தேவகுலம் - கோயில்.

௫௪. கூர்த்த - மிக்க.

௫௬. பாகம் - பக்குவம். ௫௭. துனைய - விரைய.

௫௮. மற்றும் ஒரு மூன்று கம்பம் - நல்லகம்பம், கள்ளக்கம்பம், வெள்ளக்கம்ப மென்பன; இவை முறையே உருத்திரர், திருமால், பிரமன் ஆகிய மூவராற் பூசிக்கப்பெற்றவை; கா. திருவேகம்ப. 86 - 9; திருவேகம்பம் கம்பமென்றும், பெரிய கம்பமென்றும் கூறப்படுமாலின் மற்றுமொரு மூன்று கம்பமென்றார்; "கால காலனைக் கம்பனெம்மானை", "உமைநங்கை மருவி யேத்தி வழிபடப் பெற்ற, பெரிய கம்பனை" தே. சுந்தர.

வாலீசம் - வாலி பூசித்ததலம்; கா. திருவேகம்ப. 104 - 20.

நந்தீசம் - நந்தி பூசித்ததலம்; நந்தி பூசித்தது; கா. தீர்த்த. 137-ஆம் செய்யுள் முதலியவற்றால் அறியப்படும்.

மயானம் - கச்சிமயானம்; இது தேவர்கள் முதலியோர்களின் உடலிற் புகுந்து அவர்கள் வன்மையைக் கவர்ந்து மெலிவித்த பண்டாசுரனை அழித்தற்கு எல்லோரையும் சாம்பராக்கிப் பின்பு அவனைக்கொன்று மீட்டும் அவர்களைப் படைத்ததலமென்பர்; "அந்தோமுன், மாயன்முதலோருடலை மாய்த்தெதிர்ந்த பண்டனுயிர், சாய வழித்துத் தகமுன்போற் - காயம், கொடுத்தருளுங் கச்சி மயானத்தெங் கூத்தர்" (௪௬௧ - ௩) என்பர் பின்; கா. கச்சிமயான. இருபத்தெண். 9. இது தேவாரம்பெற்ற தலம்.

ருகூ. மாதவே சஞ்செவ்வந் தீசம் வருணேசம்
மாதலீ சந்திரு மாற்பேறு - தீதில்
கூ0. அனந்தபற்ப நாபேச மானவகத் தீசம்
கனிந்தகட கேசங்காப் பீசம் - முனைந்தவிரா

---

விண்டுவேசம் - திருமால் தான் கண்ட திருநடனத்தைத் திருமகள் முதலியோரும் காணவேண்டிச் சிவலிங்கப் பெருமானைத் தாபித்துப் பூசித்ததலம்; கா. தழுவ. 150 - 78.

ருஅ - கூ. மத்தள மாதவேசம் - இறைவனுடைய திருநடனகாலத்தில் மத்தளங் கொட்டுதற்குத் திருமால் வரம்பெற்ற தலம்; "முன்னர், வரத்தி னருள்பெற்ற மத்தளமா யோன்றன், கரத்தினனி யொத்திக் களிப்ப" (ககூஉ - ங) என்பர்பின்; கா. தழுவ. 290 - 99. இதனை முழவீசமென்பர் பழையகாஞ்சிப்புராணமுடையார்; சிவாலய. 524.

செவ்வந்தீசம் - வாயுதேவன் செவ்வந்திமலராற் பூசித்துக் கந்தவாகனெ னும் பேர்பெற்ற தலம்; "பூமலியக், காலிறைவன் றாவிக் களித்த ன் மெல்லவரும், காலினை யிங்கே கழிப்பரோ" (உஅ0 - அக) என்று வாயு பூசித்ததைப் பின்பு குறிப்பிடுவர்; கா. நவக்கிர. 4.

வருணேசம் - வருணன் பூசித்துத் தலைமைபெற்ற தலம்; இது கங்காவரமென்றுங் கூறப்படும்; கா. சருவ. 20.

மாதலீசம் - இந்திரன் தேர்ப்பாகனாகிய மாதலி இராமபிரானுக்குத் தேர்ப்பாகனாகி, இராவணசங்காரத்தின் பின்பு அவருடன் வந்து பூசித்த தலம்; கா. மாசாத்தன். 37.

திருமாற்பேறு - திருமால் பூசிக்கச் சிவபெருமான் மகிழ்ந்து சக்கராயுதம் அளித்ததலம்; "மாதவர்கு..........ஆழி முன்னிங்குத் தந்தாரென்பார்" (உசஅ - க), "விட்டதொரு, பூவுக்குங் கண்வாங்கும் புண்ணியனூர்" (உகக - ங00) என இத்தலசம்பந்தமான செய்திகளைப் பின்னுங்கூறுவர்; கா. திருமாற். அந்தரு. 13. இது தேவாரம்பெற்றதலம்.

கூ0. அனந்த பற்பநாபேசம் - அனந்த பத்மநாபேசம்; இஃது உமாதேவியாருடைய சாபத்தாற் பாம்புருவங்கொண்ட திருமால் பூசித்துப் பழைய உருவம்பெற்ற தலம்; கா. அனந்த. பத்மமென்றது பற்பமென வந்தது; "பற்பநாப னுயர்வறவுயரும் பெருந்திறலோன்........எற்பரன்" திருவாய்மொழி.

அகத்தீசம் - அகத்தியர் பூசித்த தலம்: கா. தழுவ. 184 - 288.

கடகேசம் - உமாதேவியார் ஏகாம்பரநாதரைப் பூசித்தற்கு முன் கடகமணிந்து பூசித்ததலம்; கா. தழுவ. 133.

காப்பீசம் - உமாதேவியார் ஏகாம்பரநாதரைப் பூசித்தற்காகக் காப்பணிந்து பூசித்த தலம்; கா. தழுவ. 132. முனைந்த - முற்பட்ட

சுக. மேச்சுரம் வெல்பரசி ராமேச் சுரமபிரா
மேச்சுரம் வாழ்விச் சுவநாதம் - தூச்சிவாத்

சுஉ. தான நவக்கிரகே சம்யோகா சாரியர்சூழ்
தானமங்க ளேசந்தா னேதோன்றும் - தானம்

சுங. இறவாத்தா னஞ்சுரக ரேசந்தீர்த் தேசம்
பிறவாத்தா னங்கச்ச பேசம் - நெறிக்காரைக்

---

சுO - சுக. இராமேச்சுரம் - இராமர் இராவணனைக் கொன்ற பாவம் நீங்கப் பூசித்த தலம்; கா. மாசாத்தன். 36.

பரசிராமேச்சுரம் - அரசர் குலத்தை அழித்தற்குப் பரசுராமர் பூசித்துப் பரசென்னும் ஆயுதத்தையும் வரத்தையும் பெற்றதலம்; "சமர்த்த விராமற், கலங்கு பரசொன் றளித்தான்" (சகூஉ) என்பர்பின்; கா. பரசு. அந்தரு. 14.

அபிராமேச்சுரம் - வாமனர் மாவலியை வெல்வதற்குப் பூசித்து வரம்பெற்ற தலம்; அபிராமனென்றது வாமன மூர்த்தியை; "ஒன்று வரம், வாமனனுக் கீந்தார்" (உகூச - கு); கா. அபிராமீ. அரிசாப. 22.

விச்சுவநாதம் - காசியிலும் இத்தலம் சிறந்ததென்று எண்ணி விசுவநாதக் கடவுள் இங்கே திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் தலம்; கா. சருவ. 21 - 2.

சுக - உ. சிவாத்தானம் - பிரமன் பூசித்து வரம்பெற்றதலம்; "அரியோ டலகயனு மீன்றான்" (உஅசு) என்பர்பின்; கா. சிவாத்தான.

நவக்கிரகேசம் - நவக்கிரகங்கள் வழிபட்ட தலங்கள்; கா. நவக்கிர.

யோகாசாரியர் சூழ்தானம் - சுவேதர் முதல் இலகுளீசரீறாகிய யோகாசாரியர் தனித்தனியே பிரதிட்டித்துப் பூசித்ததலங்கள்; கா. யோகா. இவை நாற்பத்தெண்ணாயிரமென்பர் பழைய காஞ்சிப் புராணமுடையார்.

மங்களேசம் - உமாதேவியார் பாங்கியாகிய மங்களை பூசித்ததலம்; "மாக்கருங்கண், மங்களை வேட்ட வரமளித்தார்" (சOஎ - அ) என்பர் பின்; கா. மாசாத்தன். 35.

தானே தோன்றுந் தானம் - தான்றோன்றீசம்; சிவபெருமான் தாமே தோன்றிய இடம். இஃது உபமன்னியமுனிவர் பூசித்துப் பாற்கடலைப் பெற்றதலம்; கா. தான்றோன்றீசப். அவர்பாற்கடலை யுண்டமை, "அயராமைப், பாலுததி யோர்முனிக்குப் பாலித்தார்" (உஎச - கு) என்று பின்பு கூறப்பட்டுள்ளது. இத்தலம் ஸ்வாயம்புவமென்றும் கூறப்படும்.

சுங. இறவாத்தானம் - சுவேதர், மார்க்கண்டேயர் முதலியோர் வழிபட்டுச் சாவாவரம்பெற்றதலம்; "இறவாத்தா னத்தி லிருந்தருளா

சுச. காடுசாத் தேசங் கயிலாயங் கற்கீசம்
ஆடகே சஞ்சீ ரமரேசம் - நாடும்

னந்தர்" (சகூஎ) என்பர் பின்; பெரிய. திருக்குறிப்பு. 77; ஏ. உலா, 26; கந்த. நகர. 92; கா. இறவாத்.

சுரகரேசம் - சுராக்கனென்னும் அசுரனைச் சிவபெருமான் சங்காரம் செய்ததலம். இங்கே தேவர்கள் பூசித்துத் தங்களுக்கிருந்த வெப்பு நோயைத் தீர்த்துக் கொண்டனர்; கா. சுரகரீச.

தீர்த்தேசம் - தீர்த்தராசமெனவும் வழங்கும். இஃது அம்பிகையின் பூசையை அழித்தற்காக வந்த எல்லாத் தீர்த்தங்களும் பூசித்ததலம்; கா. சருவ. 8 - 11.

பிறவாத்தானம் - வாமதேவரென்னுமுனிவர் பூசித்துப் பிறவாவரம் பெற்றதலம்; ஏ. உலா, 26; கந்த. நகர. 92; கா. பிறவாத்.

கச்சபேசம் - கூர்மாவதாரமெடுத்த திருமால் வழிபட்டதலம்; "வலந்தொழுத, கச்சபத்துக் கீந்தார்" (உகக - உ) என்பர் பின்; கா. கச்சபேச. அந்தரு. 44.

சுரு - ச. நெறிக்காரைக்காடு - திருநெறிக்காரைக்காடு; இது காரைத்தருக்கள் செறிந்திருந்தமையால் இப்பேர் பெற்றது; சத்தியவிரதமென்வும் வழங்கும். சிவியென்னு மிந்திரனும் புதனும் பூசித்துப் பேறு பெற்றதலம். இந்திரன் பூசித்தமையால் இந்திரேசமெனவும் கூறப்படும்; கா. திருநெறி. இது தேவாரம் பெற்றதலம்.

சாத்தேசம் - மாசாத்தன் தளியென வழங்கும்; ஐயனார் பூசித்து வரம்பெற்ற தலம்; கா. மாசாத்தன்.

கயிலாயம் - திருமாலும் நாரதரும் திரிபுராதியரை மயக்கிய பாவத்தை நீக்கிக் கொள்வதற்குப் பூசித்ததலம்; "தொக்கதமக், கன்பரைப் பாழ்மதத்தி லாழ்த்தினோர் நண்ணுதலும், கொன்பெரும் பாவங் குறைத்திட்டார்" (ருOடு - சு) என்பர் பின்; கா. கைலாயப்.

கற்கீசம் - திருமால் கற்கி (குதிரை) வடிவமெடுத்த பொழுது பூசித்ததலம்; கா. வீரராக. 31.

ஆடகேசம் - இரணீசம்; இரணியன் பூசித்து வரம் பெற்றதலம்; "இரணியன்பூ சிப்பவர மீந்தார்" (உஅஅ) என்பர் பின்; கா. இரணீச.

அமரேசம் - ஒவ்வொரு தேவரும் தாம் தாம் முதலென்று அகங்கரித்தபொழுது சிவபெருமான் ஒரு துரும்பினால் அவர்கள் செருக்கினைப் போக்கிய பின்பு, அவர்கள் பூசித்த தலம்; கா. அமரேச; "செம்மாந்து தற்புகழுந் தேவர்குழு வும்மருள, எம்மான் பிறன்போ லிருந்தோர் துரும்புநிறீஇ, அம்மாதன் செய்கை யனைத்துமெனக் காட்டினனே" (கந்த. காமதகனப். சக); கண்ணி. ருகக - ஐப் பார்க்க.

௬௫. இரேணுகே சஞ்சவுன கேசங்கா மேசம்
பராசரே சம்பாண்ட வேசம் - வராக

௬௬. புரமணிகண் டேச்சுரநற் புண்ணிய கோடீச்
சுரஞ்சத்த தானஞ்சோ மேசம் - பரவுமிட்ட

௬௭. சித்தி யயிராப தேசமோ ணன்காந்தன்
பத்திபுரி சூழல்பகர் முத்தீசம் - சுத்த

---

௬௫. இரேணுகேசம்-பரசுராமருடைய அன்னையாகிய இரேணுகா தேவி தான் தெய்வமாக வேண்டுமென்று பூசித்து வரம் பெற்றதலம்; கா. இரேணு.

சவுனகேசம் - சவுனகமுனிவர் பூசித்து வீடு பெற்றதலம்; கா. சகோதர. 10.

காமேசம்-காமன் பூசித்துப் பேறு பெற்றதலம்; "நான்முறையில், வேட்டடியிற் பூசை விளைத்துவரம் - ஈட்டியநற், காமனை யிங்குக் கழ்வரோ" (உஎகூ - அ) என்பர்பின்; கா. சருவ. 2 - 6.

பராசரேசம் - பராசரமுனிவர் பூசித்துத் தம் தந்தையாரைக் கொன்ற அரக்கர் கூட்டத்தை அழித்தற்கு வரம் பெற்றதலம்; கா. பராச.

பாண்டவேசம் - பாண்டவர்கள் தனித்தனியே சிவலிங்கங்களைப் பிரதிட்டித்துப் பூசித்த தலங்கள்; கா. பாண்ட.

௬௫ - ௬. வராகபுரம் - வராகேச்சரமெனவும் வழங்கும்; திருமால் வராகாவதார மெடுத்த பொழுது பூசித்ததலம்; "வியக்கவரம், வன்றிக் களித்தார்" (உ௬௩ - ௪) என்பர்பின்; கா நாரசிங்கீச. 14 - 5; அந்தரு. 6.

மணிகண்டேச்சுரம் - சிவபெருமானை விடமுண்ணும்படி செய்த பாவத்தைப் போக்கிக் கொள்ளுதற்குத் தேவர்கள் பூசித்ததலம்; "பிரிந்தவுளத்,தாழிகடைந் துங்கடுவை யாரக் கொடுத்துமுற்ற, பீழை யமரர்க்குப் பிரித்திட்டார்" (௩௦அ - ௯) என்பர்பின்; கா. மணிகண்டீச.

புண்ணியகோடீச்சுரம் - திருமால் பூசித்துப் பிரமனையும் உலகையும் படைத்தற்கு வரம் பெற்றதலம்; "அரிதாழ்ந் தயனேண் டளிப்ப" (உஅ௬) என்பர்பின்; கா. புண்ணிய.

சத்ததானம் - முத்தியை விரும்பி அத்திரி முதலிய ஏழுமுனிவர்களும் தனித்தனியே சிவலிங்கங்களைப் பிரதிட்டித்துப் பூசித்ததலம்; கா. சத்ததான.

சோமேசம் - சந்திரன் பூசித்துப் பேறு பெற்றதலம்; "பூசைபுரி, சோமனைக் காதத் துணிவரோ" (உஅ௦) என்பர்பின்; கா. அந்தரு. 12.

௬௬ - ௭. இட்டசித்தி - ததீசிமுனிவரும் பிரமன் முதலியோரும்

சஅ. அநேகதங் காவதம்வா ணீசமந்த கேசம்
இறைத லறுஞ்சலந்த ரேசம்-பணாதரே

சகூ. சம்பணம ணீசஞ்சார்ந் தாசயந் தக்கேசம்
வம்பில்சித் தீச மதங்கேசம் - நம்புமரி

---

பூசித்துப் பேறு பெற்றதலம்; சுக்கிரனுக்கு அமிர்தசஞ்சீவியும் ததீசி முனிவர்க்கு வச்சிரயர்க்கையும் சிவபெருமான் வழங்கியதலம்; "ஈங்கென்றும், இட்டசித்தி நாத ரெனவிருப்பார்", "போக்கி, லமிர்தசஞ் சீவி யவிர்வெள்ளிக் கீந்து, துமியுடற திசியெனுந் தொல்லோற் கிமிழ்கொளீஇ, வச்சிர யாக்கை வழங்குமிட்ட சித்தீசர்" (உகூஅ - கூ, சகூ - கூ) என்பர்பின்; கா. இட்டசித்; அந்தரு. 45.

அயிராபதேசம் - ஐராவதம் பூசித்து இந்திரனுக்கு வாகனமாதற்கு வரம் பெற்றதலம்; கா. அரிசாப. 23.

ஓணன்காந்தன் பத்திபுரி சூழல் - திருவோணகாந்தன்றளி; வாணசுரனுடைய சேனைத்தலைவர்களாகிய ஓணனும் காந்தனும் பூசித்துப் பேறு பெற்றதலம்; கா. திருவோணகாந்தன். ; இதுதேவாரம் பெற்றது.

முத்தீசம் - கருடன் பூசித்துத் தாயின் சிறையை நீக்கிப் பாம்புகளை அலைத்தற்கு வரம்பெற்றதலம்; "கருட, னிகலோ டரவலைத்தா னேத்தி" (உஅகூ - எ) என்பர்பின்; கா. முத்தீசப். முத்தம் - விடுபடுதல்.

சஅ. அநேகதங்காவதம் - அநேகபேசமெனவும் வழங்கும்; இது விநாயகர் பூசித்த தலம்; தேவாரம்பெற்றது; கா. அநேகதங். இருபத்தெண். 9

வாணீசம் - வாணசுரன் பூசித்துச் சிவபெருமானைத் தன்னுடைய மதிலின் வாசலைக் காத்தருளும் வரத்தையும் பின்பு சிவகணத் தலைமையையும் பெற்றதலம்; "வாணன்பூ சிப்பநொச்சி வாயில் காத்தார்", "தோளிணைகள், கண்டேதி நீவ வறைகூவுங் காழவுணன், தொண்டேற் மீட்டுநலந் தோற்றினார்" (உஅகூ, நகஉ); கா. வாணீசப்.

அந்தகேசம் - இரணியாட்சன் மகனாகிய அந்தகாசுரன் பூசித்து உலகையாண்டு கடைமுறை அருள் பெற்றதலம்; "மாணவர, மந்தகன் பூசைக்களித்தார்" (உஅகூ-கூ0); கா. அந்தகேசப். இறைதலறும் - இறைதல் அறும்; இன்றைது அலறு மெனினுமாம்.

சலந்தரேசம் - சலந்தராசுரன் வழிபட்டுப் பேறு பெற்றதலம்; "சலந்தரன்பூ சிப்பத் தகவளித்தார்" (உகூக); கா. சலந்தரீசப்.

சஅ - கூ. பணாதரேசம் - நாகங்கள் பூசித்துச் சிவபெருமானுக்கு ஆபரணமாகி அந்த மகிழ்ச்சியால் கருடனைச் சுகமாவென்று கேட்கும் வன்மை பெற்றதலம்; "அரவேத்திச், சுகமே கருடவென்ச் சொற்றது" (உஅஎ); கா. பணாதரேசப்; இருபத்தெண் 8.

எ0. சாப பயந்தீர்த்த தானமா லிங்கமா
தீபதே சம்விடுவச் சேனேசம் - தாபமறு

பணமணீசம் - தன்னுடைய படத்திலிருந்த மணிகளால் வாசுகி பூசித்துப் பேறுபெற்றதலம்; இது மணீசமெனவும் வழங்கும்; கா. இருபத்தெண். 235 - 45.

சார்ந்தாசயம் - இங்கேயுள்ள சிவபெருமான் சார்ந்தார் சார்பினுனென்னும் திருநாமம் பூண்டவர்; இது வேதவியாசர் சிவபரத்துவத்தை மறுத்த குற்றந்தீரப் பூசித்ததலம்; கா. சார்ந்தாசயப். இத்தலசம்பந்தமான இச்சரிதையை, " மேவுதலும், பொய்யழிய வேதவியா சன்மையல் போக்கினுர் " (உசுக - எ0) என்று குறிப்பிடுவர்பின்.

தக்கேசம் - தக்கன் பூசித்துத் தன் பாவந்தீர்ந்து கணநாதனுகும் பேறு பெற்றதலம்; " தக்கனிங்குச் சாரத் தவறு தவிர்த்தவற்கு, மிக்க தலைமை விளைத்திட்டார் " (ҧ0ரு); கா. தக்கேச.

சித்தீசம் - உமாதேவியார் நீராடுகையில் ஓடிய மஞ்சள் நீரிடை எழுந்த மஞ்சணீர்க்கூத்தர் கோயில் கொண்டருளியதலம்; சித்தர்கள் பலர் இறைவனைப் பூசித்துச் சித்திகளைப் பெற்றமையால் இஃது இப்பெயர் பெற்றது; கா. சித்தீசப்.

மதங்கேசம் - மதங்கமுனிவர் ஐம்புலன்களையும் அடக்கியாள்வதற்குப் பூசித்ததலம்; கா. அரிசாப. 22.

சுக - எ0. அரிசாப பயந்தீர்த்த தானம் - திருமால் பூசித்துப் பிருகு முனிவர் இட்ட சாபத்தைத் தீர்த்துக் கொண்டதலம்; கா. அரிசாப.

மாலிங்கம் - மகாலிங்கம்; திருமாலும் பிரமனும் தாம் தாம் முதன்மையெனத் தருக்கி நின்றபொழுது, சோதிலிங்கமாக எழுந்த சிவபெருமானுல் மயக்கம் போக்கப் பெற்றுத் தாபித்துப் பூசித்ததலம்; " முன்பிருவர், யான்முதன்மை யான்முதன்மை யென்றிகந்தா ரெய்துதலும், தான்முதன்மை யென்னத் தவறழித்தார் " (ҧ0சு - எ); கா. மகாலிங்கப்.

ஆதீபதேசம் - கலைமகள் பிரமதேவர் செய்த யாகத்தைத் தடுத்தற்கு நதியாக வந்த பொழுது அந்நதியைத் தடுக்கும் வன்மைபெறும் பொருட்டுத் திருமால் விளக்கொளியாகிச் சிவலிங்கப்பிரதிட்டை செய்து பூசித்ததலம்; கா. ஆதீபதேசப்.

விடுவச்சேனேசம் - திருமாலுடைய சக்கராயுதத்தை வீரபத்திரக் கடவுளிடமிருந்து பெறவேண்டி விஷ்வக்ஸேனர் பூசித்ததலம்; கா. விடுவச்; இதனை விண்டுசேனீசமென்பர்; ப. கா. சிவாலய. 321.

எக. வன்னீச் சுரநார சிங்கீச் சுரமாண்டு
கன்னீச் சுரமாகா ளேச்சுரம் - வன்மீக

எஉ. நாதம் பலபத் திரராம நாதமச்ச
நாதமுயர் முக்கால ஞானேசம் - காதம்பம்

எங. ஓத்தூர் சதுரா னனசங் கரமும்பர்
ஏத்துமறை நூபுரங்கண் ணீச்சுரம் - தோத்திரிக்கும்

---

எக. வன்னீச்சுரம் - அக்கினி பூசித்துத் தேவர்களுக்குரிய அவிர்ப் பாகத்தைப் பெறும் வன்மை பெற்றதலம்; கா. சகோதர. 4 - 8.

நாரசிங்கீச்சுரம் - திருமால் இரணியனை அழித்தற்குப் பூசித்து வரம் பெற்று நரசிங்காவதார மெடுத்து இரணியனைக் கொன்று பின்பும் வழி பட்டதலம். "பூசித்த நரமடங்க ரூக்க நயந்தார்", "நாம, நரமடங் கல் போற்றவர நல்கினார்" (உஅஅ, உகூ௫-௬) என்பர்பின்; கா. நார சிங்கீசப்.

மாண்டு கன்னீச்சுரம் - மாண்டுகென்னுமுனிவர் வழிபட்டு ஐந்து தெய்வமங்கையரை யடைந்ததலம்; "மாண்டுகென்னு மாமுனியால் வானை யரம்பையர்கட், கீண்டிய போக மியைவித்தார்" (௬கஉ) என் பர்பின்; கா. சகோதர.

மாகாளேச்சுரம் - மகாகாளனென்னும் நாகம் பூசித்து முத்தி பெற்றதலம்; கா. கண்ணீச. 12.

எக - உ. வன்மீகநாதம் - தேவர்கள் கீர்த்தியைத் திருமால் வௌவிச் செல்ல அதனைப் பெறுதற்காக இந்திரன் ஒரு புற்றில் கரையா னாகி முயன்று தன்னெண்ணம் நிறைவேறப் பெற்றுப் பூசித்ததலம்; கா. வன்மீக. வன்மீகம் - புற்று.

பலபத்திரராமநாதம் - பலபத்திரராமேசம்; இது பலராமன் பூசித்ததலம்; கா. பலபத்திர.

மச்சநாதம் - மச்சீச மெனவும் வழங்கும்; திருமால் மச்சாவதாரம் எடுத்த பொழுது பூசித்ததலம்; "மச்ச நயக்கவர மீந்தார்" (உகூஉ-௩.); கா. மச்சீச. இதனைச் சேலீசமென்பர்; ப. கா. சிவாலய. 463.

முக்கால ஞானேசம் - சில முனிவர்கள் பூசித்து முக்காலங்களையும் அறியும் ஆற்றல் பெற்றதலம்; கா. அரிசாப. 21.

காதம்பம் - கடம்பர் கோயில்; கடம்பையெனவும் வழங்கும்; முரு கக்கடவுள் பூசித்ததலம்; கா. இருபத்தெண். 304.

எங. ஓத்தூர் - திருவோத்தூர்; வேதபுரியெனவும் வழங்கும். சிவ பெருமான் ஆல நீழலில் இருந்து தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் வேதத்தை உபதேசித்த தலம். "ஆலினிற் கீழிருந் தாரண மோதி" (திருநா. தே.) என்பது ஈண்டறியற்பாலது; கா. அந்தரு. 18; இது

எச. வீரரா கேச்சுரநல் வீராட்ட காசஞ்சீர்
பாரளாஞ் சேனு பதீச்சுரம் -ஏரளாம்

எரு. மேற்றளிகா ரோணம் விளங்கு பனங்காட்டூர்
போற்று குரங்கணின்முட் டம்போக்கு - நீற்றும்

---

தேவாரம் பெற்றது. ஓத்து - வேதம். இங்கேதான் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர் ஆண்பனைகளைப் பெண்பனையாக ஆக்கியதும். இச் செய்தியை, "பூவியப்ப, ஆண்பெண்மை யாக்கினு ரப்பெண்ணை வாழன்றில், மாண்பின்மை யாக மதிப்பரோ" (உஅஉ - ந) என்று பின் னர்க் குறிப்பிடுவர்.

சதுரானன சங்கரம் - சிவபெருமான் பிரமதேவருக்கு நான்கு முகங் களினின்றும் மறைவெளிப்பட அருளிய தலம் ; கா. இருபத்தெண். 246-56.

மறைநூபுரம் - வேதங்கள் பூசித்து இறைவனுக்குச் சிலம்பாக அமைந்ததும், பிரமன் பிரளயமுடிவிற் பூசித்து வேதங்களைப் பெற்றது மாகிய தலம் ; கா. அந்தரு. 19 ; இருபத்தெண். 302 ; சிலம்பர் துறை யென்பர், ப. கா. உடையார்.

கண்ணீச்சுரம் - கண்ணீசம் ; திருமால் பூசித்து விடத்தின் வெப்பை நீக்கிக் கொண்ட தலம் ; கண்ணன் - கரிய நிறத்தை யுடையவன் ; கா. கண்ணீசப்.

எச. வீரராகேச்சுரம் - வீரராகவேசம் ; இராமர் வழிபட்டு இரா வணனை அழித்தற்குரிய வீரத்தைப் பெற்ற தலம் ; கா. வீரராக.

வீராட்டகாசம் - இறைவன் திருநடனம் செய்கையில் வீரநகை காட்டியதும், கொங்கணர் பூசித்துச் சித்திகள் பெற்றதும், திருமால் பூசித்துப் பவள நிறத்தை அடைந்ததுமாகியதலம். அட்டகாசம் நகை. கா. வீராட்ட.

சேனுபதீச்சுரம் - முருகக்கடவுள் பூசித்ததலம் ; "தேங்கடப்பந் தாரான் திருவருளி னேவலினை, நீங்கி யணையவரு ணீடினர்" (நகச) என்பர் பின் ; கா. குமர கோட்ட. 22 - 3 ; ஏர் - அழகு. அளாம் அளாவும் - பொருந்திய.

எரு. மேற்றளி ; திருமேற்றளி ; பச்சிமாலயமெனவும் வழங்கும். முருகக்கடவுளுடைய பார்வையால் திருமால் இலிங்கமான தலம் ; கா. அந்தரு. 35. இது தேவாரம்பெற்றது.

காரோணம் - கச்சிக்காரோணம். பிரளயகாலத்தில் பிரமன் திரு மால் இவர்களுடம்பைச் சிவபெருமான் ஏற்றுக்கொண்டதலம் ; திருமகள், பிருகஸ்பதி, யமன் முதலியவர்களாற் பூசிக்கப்பெற்றது ; கா. காரோணப்.

எசு. உருத்திரர் சோலையீ ரொன்பதின்மர்ச் சேர்த்த
உருத்திரர் நூற்றுவர்க ளூற்றுக் - கருத்திசையப்

எஎ. பத்திபுரி நூற்றுப் பதினெண் டளிபிறவாய்
அத்தளிக டோறு மவிர்கின்ற - முத்துமுதற்

ஆனந்த வுருத்திர னளவிலாப் பெருமை.

எஅ. பல்வகைப்பல் வேறு மணியினும் பாய்கதிரோன்
எல்வகைமைக் கேற்ப விலங்கியாங் - கல்கலுறும்

எகூ. வெவ்வே றுருக்கொண்டு வெவ்வேறு பேர்கொண்டு
வெவ்வே றருள்கள் விளைத்தாலும் - எவ்வமறும்

அ0. மானிடரின் வானவர்கள் வானவரின் மாமலரோன்
ஆனவனின் மாயோ னவன்றன்னின் - ஞானமிகு

அக. மாதவர்க ளன்னவரின் மாகணங்க ளன்னவற்றிற்
சாதலறும் பூதத் தலைவர்கள் - ஓதவரிற்

---

முருகவேளும் உமாதேவியும் இறைவன் காயத்தில் ஆரோகணஞ் செய்த தலமெனவுங் கூறுவர்; கா. அந்தரு. 36-8; இது தேவாரம் பெற்றதலம்.

பனங்காட்டூர் - வன்பார்த்தான் பனங்காட்டூர்; தேவாரம் பெற்றது; பனங்காடென வழங்கும்.

குரங்கணில் முட்டம் - குரங்கு, அணில், காக்கை யென்பவை பூசித்ததலம்; முட்டம் - காக்கை; இது தேவாரம் பெற்றது. போக்கு நீற்றும் - குற்றத்தை அழிக்கும்.

எசு. உருத்திரர் சோலை: "தூண்டு சோதியொன் றெழுந்தருள் சுரக்குஞ் சுரர்கள் வந்துசூழ ருத்திர சோலை" (பெரிய. திருக்குறிப்பு. 84); சிவபெருமான் உருத்திரர்களைப் படைத்து அவர்களுக்கு அதிகாரம் நல்கியதலம். கா. இருபத்தெண். 271 - 3. ஈரொன்பதின் மர்ச்சேர்த்த உருத்திரர் நூற்றுவர்கள் - நூற்றுப்பதினெட்டு உருத்திரர்கள்.

எஎ. நூற்றுப்பதி னெண்டளி: கா. திருமேற்றளி. 2 - 3.

எஅ. மணி - இரத்தினங்கள்; பல்வகையென்றது ஒன்பதுவகையைச் சுட்டியது. பல்வேறென்றது ஒவ்வொரு வகையிலும் உள்ள பல வகைகளை. கதிரோன் - சூரியன். எல்வகைமைக்கு - ஒளியின் வேறுபாட்டிற்கு. இலங்கியாங்கு - விளங்கினாற்போல. அல்கல் - நிலைத்தல்.

எகூ. எவ்வம் - துன்பம்.

அ0. மானிடரின் - மானிடரைக் காட்டிலும். மாமலரோன் ஆனவனின் - பிரமனைக்காட்டிலும்.

அஉ. சேயிலைவே லோனவனிற் றிண்களப மற்றதனிற்
பாயமணி மேகலைய பார்ப்பதி - மீயுயர்ந்தாங்

அங. கேனையர்கள் போற்று மிடமூர்த்தந் தம்மினுமம்
மானனைய நோக்கி வழிபட்டுத் - தான்மகிழ்ந்த

அச. தூங்குசினை மாவடியுஞ் சோதிலிங்க முஞ்சிறந்த
ஓங்குருத்தி ரேச முயரிலிங்கம் - ஆங்கவற்றோ

அரு. டொக்கு முமையா ளுருப்பாதி தன்காணி
கைக்கொண்ட வேகன் கதியமுழு - மெய்க்கொண்டு

அசு. நாமமுங் கொண்ட நலத்தகையோர் போற்றுதலிற்
காம ரவற்றுள்ளுங் காழிலோர் - தாமருவும்

அஎ. ஆனந்த ருத்திரே சத்தமல மூர்த்தமே
தானந்த னோடுந் தலையாவ - தானம்

---

அஉ. சேயிலைவேலோன் - செம்மையாகிய இலை வடிவமுள்ள வேலாயுதத்தையுடைய முருகக்கடவுள்; "சேயிலை வென்வேல்" (குறுந். கரு: 5.) திண்களபம் - திண்ணிய யானைமுகத்தையுடைய விநாயகர். மீ உயர்ந்தாங்கு - மேன்மேலே உயர்ந்தாற்போல.

அங. இடம் மூர்த்தம் தம்மினும் - இடங்களையும் மூர்த்தங்களையும் காட்டிலும். மான் அனைய நோக்கி - உமாதேவியார்.

அச. தூங்கு - தொங்கும். மாவடி - மாமரத்தின் அடி. சோதி லிங்கம் - ஸ்ரீ ஏகாம்பரநாதர்; "அங்கதனிற் சோதிலிங்க வடிவாகி யாமென்று மமர்வேம்" (கா. தல. 28.) உருத்திரேசம் உயர் இலிங்கம் - உருத்திரேசங்களும் அங்கேயுள்ள உயர்ந்த இலிங்கங்களும்; உருத்திரேசம் - உருத்திரர் பூசை செய்த சிவலிங்கப் பெருமான்கள் எழுந்தருளியுள்ள தலங்கள்.

அரு. ஏகன் - சிவபெருமான். கதிய = கதுவிய - பற்றிய.

அசு. நாமம் - உருத்திரரென்னும் திருநாமம். காழ் - குற்றம்.

அரு - சு. சிவபெருமானுடைய முழு வடிவத்தையும் அவருக்கே யுரிய உருத்திரரென்னுந் திருநாமத்தையும் பெற்றவர்கள் பூசித்த தலங்களும் சிவலிங்கங்களும் மாவடியையும் சோதிலிங்கத்தையும் ஒக்கும். மிகச்சிறப்புற்ற மாவடியையும் ஏகம்பரையும் இவை ஒக்குமென்பதைப் புலப்படுத்தற்கு இத்துணைக்காரணம் கூறினார்.

போற்றுதலின் (அசு) ஒக்கும் (அரு) என்க.

அஎ. தானம் தன்னோடும் - இடத்தோடும். ஆனந்த ருத்திரேச மூர்த்தமும் அந்தத் தலமும் மற்றவற்றைக் காட்டிலும் சிறந்தன. சிறந்த

அஅ. தவிர்பொருள்கள் பற்பலவுந் தாழ்வில்சுக மற்றும்
அவிர்துறக்க மாதி யவையும் - இவர்கின்ற

அகூ. மேலான வின்ப வினைவுந் தலைமைகளும்
மாலாவ வென்று மதித்தொரீஇச் - சாலாத

கூ0. ஆனந்தத் தானந்த லன்றி யினிதெழூஉம்
ஆனந்த மிக்களிக்கு மாட்சியாற் - றானந்த

கூக. ஆனந்த நாம மளாவலி னத்தகைய
ஆனந்த ருத்திரே சத்தென்றும் - ஆனந்தன்

கூஉ. ஏகம்பம் போல வினிதரசு வீற்றிருந்து
மாகம் பணிய வளங்கொழிப்போன் - மேகம்

## நந்தன வனமும் சந்தநீர் நிலைகளும்.

கூங. படியுமிளந் தெங்கு பயில்கமுகஞ் சூதம்
கடிகொள் வருக்கை கதலி - அடரும்

கூச. முருகு நரந்த முகிழ்தாடி மங்கள்
கருணைமஞ்ச ளிஞ்சி கலந்து - பெருகு

கூரு வளங்கொள் படப்பை மருங்குடுத்துத் தீந்தேன்
துளங்குமலர்ப் பிண்டிதொகு நாகம் - இளங்கணிகள்

---

மைக்குக் காரணம் பின்புகூறப்படுகின்றது. ஆனந்தருத்திரரை உருத்திர கணங்களுள் முதல்வரென்பர்.

அஅ. துறக்கம் - சுவர்க்கலோகம். இவர்கின்ற - விரும்புகின்ற.

அகூ. மாலாவ என்று - மயக்கத்தைச் செய்வனவென்று. ஒரீஇ - நீங்கி. சாலாத - நிரம்பாத.

அகூ - கூ0. சாலாத ஆனந்தம் - சிற்றின்பம். ஆனந்தத்தால் நந்தல் அன்றி. எழூஉம் - எழுகின்ற. தான் : அசைநிலை. நந்த - பெருக.

கூக. அளாவலின் - கலத்தலால். ஆனந்தருத்திரேசத்து - ஆனந்த ருத்திரேசமென்னும் திருப்பதியில். ஆனந்தன் - சிவபெருமான்.

கூஉ. வீற்றிருந்து - ஒப்பற்ற சிறப்புடனிருந்து.

கூங. கமுகம் - பாக்குமரம். சூதம் - மாமரம். கடி - நறுமணம். வருக்கை - பலா.

கூச. முருகு - வாசனை. நரந்தம் - நாரத்தை. தாடிமங்கள் - மாதுளமரங்கள். கருணை - ஒருவகைக் கிழங்கு.

கூரு. படப்பை - தோட்டம். பிண்டி - அசோகமரம். நாகம் - ஒருவகை மரம். கணிகள் - வேங்கைமரங்கள்.

கூசு. ஆர நறுந்தேக் ககில்சரள மாச்சாமந்
தாரமுருக் குத்தா தகிவெள்ளில் - வேரல்

கூஎ. மருதுகுமிழ் போதி மகிழ்வழைபுன் னாகத்
தருவெவையும் வேலியெனச் சார்ந்து - முருகுவிரி

கூஅ. மல்லிகை சாதி மயிலை குருக்கத்தி
முல்லை குளவி முதிர்செருந்தி - வில்லம்

கூகூ. கணவிரங்கூ தாளங் கடுக்கை குடம்பு
மணம்விரிந்த நந்தியா வட்டம் - இணர்விரியும்

க00. பாடல நீள்சண் பகந்தமா லங்கோங்கு
நீடிய நந்த வனநிரந்து - தோடுவிரி

க0க. தேங்கமல மொண்குமுதஞ் செங்கழுநீர் நீலநெய்தல்
ஆங்கமலி பொய்கை யணியோடை - தேங்குபுனல்

க0உ. வாவிநறுங் கூவன் மணற்கேணி வண்புனற்கால்
தேவரும் வீழச் செறிந்தோங்கிப் - பூவைமயில்

க0ங. கிள்ளைபுருச் சேக்குங் கெழுமணிசெய் மாடநிரை
அள்ளுமெழின் மேடை யகன்றெற்றி - ஞெள்ளல்

---

கூசு. ஆரம் - சந்தனமரம். தேக்கு அகில். சரளம் - ஒருவகை மரம். முருக்கு - முள்ளுமுருங்கை. தாதகி - ஆத்தி. வெள்ளில் - விளா. வேரல் - சிறுமூங்கில்

கூஎ. குமிழ் - ஒருவகை மரம். போதி - அரசமரம். வழை - சுர புன்னை. புன்னாகம் - புன்னைமரம்.

கூஅ. மயிலை - இருள் வாசி (இருவாட்சி.) குளவி - மலை மல்லிகை. செருந்தி - செருந்திமரம். வில்லம் - வில்வம்.

கூகூ. கணவிரம் - அலரி. கூதாளம் - வெண்டாளி. கடுக்கை - கொன்றை. இணர் - பூங்கொத்து.

க00. பாடலம் - பாதிரி. தமாலம் - பச்சிலைமரம். நிரந்து - நிரம்பி. தோடு - பூவிதழ்.

க0க. நீலமும் நெய்தலும். ஆங்க : அசை. பொய்கை - மானிட ராக்காத நீர்நிலை.

க0உ. வாவி - குளம். கூவல் - கிணறு. கால் - வாய்க்கால். வீழ - விரும்ப. பூவை - நாகணவாய்ப்புள்.

க0ங. சேக்கும் - தங்கும். எழிலை அள்ளுமென மாறுக. தெற்றி - ஒருவகைத்திண்ணை. ஞெள்ளல் - தெரு.

க0ச. தலைப்பெய்த வீதி தலைத்தலைநேர் போகி
மலைப்பெய்த யாரு மலிந்து - நிலைப்பெய்தி

போருவில் ஆனந்தன் திருவிழாச் சிறப்பு.

க0ரு. வந்தொழுகும் வேக வதிமருங்கு வீற்றிருந்த
அந்தநெடுஞ் சூழ லதினின்றும் - சுந்தரஞ்சேர

க0சு. வானுலக மேன்மைபெற மண்ணுலகஞ் செம்மாப்ப
ஈனவிடர் முற்று மிரிந்தோட - ஆன

க0எ. அறந்தழைப்ப வன்ப ரகந்தழைப்ப வன்பின்
திறந்தழைப்பச் செல்வந் தழைப்ப - மறந்தழைத்த

க0அ. வேற்கணு ருள்ளம் விடைகொள்ள நல்லுலா
ஏற்குமா கொள்ள வினிதுறீஇ - மாற்குமால்

க0கூ. கொள்ளுந் திருவழகு கொண்டுவெவ் வேறுபல
ஒள்ளிய வூர்தி யுவந்தருளி - நள்ளுறுநாள்

கக0. தெள்ளிதிற் காலந் தெரிப்போர் துயிலெழுப்பப்
பள்ளி யறைதணந்து பாவையொடு - மெள்ளப்

ககக. புறம்போந் தருளிப் பொழிகதிர்மா ணிக்கத்
திறம்பூண்டு விண்ணோங்கு செல்வ - நிறம்பூண்டு

ககஉ. பன்மணி மாலைகளும் பல்கனி மாலைகளும்
பன்மலர் மாலைகளும் பைம்பொன்னின் - வின்மலிய

---

க0ச. யாரும் மலைப்பு எய்த. நிலைப்பு - நிலைத்தல்.

க0ரு. வேகவதி - ஒருநதி. சூழல் - இடம்.

க0சு. செம்மாப்ப - இறுமாப்ப. இரிந்தோட - கெட்டோட. ஆன - ஆகிய.

க0எ. திறம் - கூறுபாடு. அன்பின்திறம் - அன்பு, ஆர்வம், காதல், ஆதரம் என்பவைகள். மறம் - வீரம்.

க0அ. விடை - விடுத்தல். நல் உலா - நல்லபவனி. ஏற்குமா - பொருந்துமாறு. உறீஇ - உற்று. மாற்கும் - திருமாலுக்கும். மால் - மயக்கம்.

க0கூ. ஊர்தி - வாகனங்கள். நள்ளுறுநாள் - இடையாமத்தில்.

கக0. காலம் தெரிப்போர் - துயிலெழுப்புவோர். தணந்து - நீங்கி. பாவையொடு - அம்பிகையொடு.

ககஉ. பன்மணிமாலைகள் - நவரத்னமாலைகள். கனிமாலை - பழங்களாற்றொடுக்கப்பட்ட மாலை. வில்மலிய - ஒளிமிக.

ககங. ஆக்கிய பூந்தொடையு மாடிகளுஞ் சாமரையும்
தூக்கியகஞ் சுற்றிற் றுயல்கிற்பப் - பூக்கணமும்

ககச. மிக்க மருக்கொழுந்தும் வெய்யமரு வும்வேரும்
தொக்க படலை சுடர்ப்பட்டும் - தக்கவெலாம்

ககரு. சித்திரித்த பட்டுஞ் செறிய விதானித்துப்
பைத்த மணிக்கம் பலம்படுத்துப் - பித்தியெலாம்

ககசு. கண்ணடியும் பாவைகளுங் காமர் மணிவிளக்கும்
வண்ணமலர்ப் பட்டும் வதிவித்துத் - திண்ணியதூண்

ககஎ. வாருறைகள் சேர்த்து மருங்குமலி பூம்பந்தர்
ஆருமணித் தூண்க ளவைதோறும் - நேரும்

ககஅ. கதலிமடற் பூகங் கனிபலவும் யாத்து
மதவுவண்ணத் தூசு வயக்கிக் - கதிர்பசும்பொற்

ககக. சுண்ணமுந் தாதுந் தொகுவிரையும் பன்மணியும்
கண்ணகு பூவுங் கமழ்சாந்தும் - வெண்ணிறத்த

கஉ0. வான்பொரியு மச்சுதமும் வண்கடுகுங் குங்குமமும்
நானநறு நீரு நனிசிந்திக் - கானமென

---

ககங. பூந்தொடை - பூமாலை. ஆடிகள் - கண்ணடிகள். தூக்கி - தொங்கும்படி கட்டப்பட்டு. அகத்திலும் சுற்றிலும். துயல்கிற்ப - அசையாநிற்க.

ககச. வெய்ய - விரும்புதற்குரிய; வெம்மை - விருப்பம். வேர் - வெட்டிவேர். படலை - தழை விரவிய மாலை.

ககரு. விதானித்து - மேலேகட்டி. பைத்த - ஒளிமிக்க. மணிக்கம்பலம் - ரத்னகம்பலத்தை. படுத்து - கீழேவிரித்து. பித்தி - சுவர்.

ககசு. மணி விளக்கு - மாணிக்கத்தீபம். மலர்ப்பட்டு - பூத்தொழிலமைந்தபட்டு. வதிவித்து - தங்கச்செய்து. தூண் - தூண்களுக்கு.

ககஅ. யாத்து - கட்டி. மதவு - அழகு. வண்ணம் - நிறம். கதிர் - ஒளி.

ககக. சுண்ணம் - பொடி. தாது - பூந்தாது. கள் நகு - தேன் பெருகுகின்ற.

கஉ0. பொரி - நெற்பொரி. அச்சுதம் - அறுகும் அரிசியும். கடுகு - சிறுகடுகு. நானம் - புழுகு. நறுநீர் - பனிநீர். கானம் - காடு,

கஉக. நீண்ட கொடிநிறுவி நித்திலப்பொற் றோரணங்கள்
காண்டகைய சுற்றிற் கதிர்ப்பித்துப் - பூண்டகைய

கஉஉ. பாவை நடமாடப் பல்லோ வியப்படங்கள்
கோவைபட வாங்காங்குக் கொள்வித்துப் - பாவு

கஉஙு. படம்விரித்து நான்முகத்தோன் பார்த்தயிர்ப்பச் சீர்த்த
தடவுமணி மண்டபத்தைச் சார்ந்து - கடவுள்

கஉச. மடங்கலணை யேறி வதிந்து பழைய
விடங்கவணி முற்றும் விலக்கி - உடங்கமர்ந்த

## செஞ்சடை உருத்திரன் மஞ்சனம் ஆடல்.

கஉரு. பாவைமகி ழெண்ணெய் பயினெல்லி மாமஞ்சள்
ஆவின்வரு மைந்து மளாவியது - தாவினறும்

கஉசு. பாறயிர்நெய் தேன்வேழப் பைஞ்சாறு பல்லமிர்தம்
வீறு பலவிரத மென்கனிகள் - ஊறுமிள

கஉஎ. நீர்சந் தனக்குழம்பு நீவில் விரைநறுநீர்
கூர்சந்த வேதக் குருக்கலநீர் - சீர்தந்த

---

கஉக. நிறுவி - நிறுத்தி. சுற்றில் - நாற்புறத்திலும். கதிர்ப்பித்து - ஒளி விளங்கச்செய்து.

கஉஉ. பாவை - யந்திரப்பாவை. ஓவியப்படங்கள் - சித்திரமெழுதியபடங்கள். கோவை - கோத்தல்.

கஉஙு. படம்விரித்து - நடைப் பாவாடையை விரித்து. அயிர்ப்ப - சந்தேகிக்க. சீர்த்த - சிறப்புற்ற; அழகுபெற்ற. தடவு - பெரிய.

கஉச. மடங்கல் அணை - சிங்காதனம். பழைய விடங்க அணி - முன்பிருந்த பேரழகைச் செய்யும் அலங்காரங்கள். உடங்கு - கூட.

கஉரு. பாவை - உமாதேவியார். நெல்லி - நெல்லிக்காய் விழுது. மா - அரிசிமா. மஞ்சள் - மஞ்சட்காப்பு. ஆவின் வரும் ஐந்து - பஞ்சகவ்வியம். தா இல் நறுமை.

கஉசு. வேழப்பைஞ்சாறு - கருப்பஞ்சாறு. பல் அமிர்தம் - பஞ்சாமிர்தம். பல இரதம் - பல சுவையையுடைய ; பல வென்பது கனிகளுக்கு அடை ; பழங்களின் சாறுமாம்.

கஉஎ. நீவில் - நீக்குதலில்லாத. கூர் சந்தம் - மிக்க சந்தங்களையுடைய ; சந்தம் வேதத்திற்கு அடை. வேதக்குருக்கலநீர் - ஸ்நபன கலசங்களிலுள்ள தீர்த்தங்கள் ; குரு - நிறம்.

கஉஅ. எல்லா முறையி னினிதாடி மெய்யீரம்
நல்லா யிழைப்பட்டி னன்கொற்றி - வில்லார்

## துப்பனை யவன்கோள் ஒப்பனை வகைகள்.

கஉகூ. மணித்தலைநாண் கொண்டு வயங்கரையின் முற்றும்
மணிக்குயின்ற பொன்னாண் வயக்கித் - தனக்குமிச்சில்

கஙo. நாப்பட்ட கோவணமு னண்ணிடத்தி லொண்கிரணத்
தூப்பட்டுக் கோவணத்தைச் சூழ்வித்து - நீப்புறுவர்

கஙக. கொம்பனையார்க் கன்றிவறங் கூரா வுறுப்பனைத்தும்
செம்பட் டுடையாற் றிகழ்வித்து - வம்புடைமேற்

கஙஉ. செம்பொற் கிரணச் செழுந்தூ சிருபாலும்
பம்புற்ற தொங்கல்பயி லச்சாத்தி - நம்புற்ற

கஙங. குங்குமங் கோரோ சனைபுழுகு கத்தூரி
பொங்குகருப் பூரம் புதுப்பனிநீர் - எங்கும்

கஙச. விரைக்கக் குழைத்தெடுத்த மென்னறும்பூஞ் சாந்தம்
வரைக்குநிகர் மார்ப மெழுகித் - திரைக்கும்

---

கஉஅ. மெய் ஈரம் - திருமேனியிலுள்ள ஈரத்தை. ஆய் இழை பட்டின் - ஆராய்ந்த நூல் இழையாலாகிய திருவொற்றுடையால்.

கஉகூ. மணித்தலைநாண் - மாணிக்கத்லைதத் தலையிலே மட்டுங் கொண்ட பாம்பாகிய அரைஞாண். முற்றும் மணி குயின்ற பொன் நாண் - முழுவதும் மாணிக்கங்கள் பதித்த பொன்னாலாகிய அரைஞாணை. பழைய நாணுக்கும் இதற்கும் உள்ள வேறுபாடு கூறியபடி. மிச்சில் - எச்சிலையுடைய.

கஙo. நாப்பட்ட கோவணம் - பிரமன் நாவில் ஒலிக்கும் வேதமாகிய கோவணம்; "மறைக்கோ வணத்தான்" (சகூள) என்பர் பின். தூ - பரிசுத்தம். நீப்பு உறுவர் - துறத்தலையுடைய தாருகாவனத்து முனிவர்.

கஙo - ஙக. உறுவர் கொம்பு அனையார்க்கு அன்றி - முனிவர்களுடைய பத்தினிமார்க்கல்லாமல். வறம் - வறுமை; அஃதாவது ஆடையின்மை. வம்பு - புதுமை, வாசனை.

கஙஉ. பொற்றூசு - பொன்னுடையை. தொங்கல் - தொங்குதல். நம்பு - விருப்பம்.

கஙச. விரைக்க - மணம்வீச. மெழுகி - பூசி. திரைக்கும் - அலையை வீசுகின்ற.

கரு௫. மதுமலர்ப்பூந் தாது மணிதகர்த்த சுண்ணம்
அதிகவிரைத் தூளியுமே லட்டிக் - கதுவுபுனல்

கருசு. ஈரம் வறள வியம்பு புகையைந்தும்
சாரன் மழையிற் றவழ்வித்துப் - பாரக்

கருஎ. கருநீற வாருயிர்க்குக் காசற்ற கற்பத்
திருநீறு நெற்றி திருத்திக் - குருநீ

கருஅ. றழியாது பாங்க ரடியருளந் தோறும்
ஒழியாத் திலக முறுத்துப் - பொழிசீதக்

கருகூ. கங்கைமக ளோடு கலைமதியஞ் சேர்ந்திருத்தல்
தங்கு மிடமுறையிற் சான்றாலும் - அங்கே

கச0. விதிர்க்கு முலகர் விழிக்கொளிப்பான் போலக்
கதிர்க்குமணி மோலி கவித்துக் - கொதிக்குமொரு

கசக. கொக்கிறகோ வென்னக் குருவயிரங் கைசெய்த
தொக்ககதிர்ச் சூட்டுச் சுடர்வித்துத் - தக்கதந்தை

கசஉ. தாயுந் தளரச் சரந்தொடுக்குந் தீக்கடவுட்
காயுங் கடவுள் கதிர்ப்பெய்தல் - ஏயுமஃ

---

கரு௫. மணி தகர்த்த சுண்ணம் - மாணிக்கத்தை உடைத்து உண்டாக்கின பொடி; "நவமணிகளும், பொன்னும், சந்தனமும் கருப்பூர முதலியனவும் புழுகிலும் பனிநீரிலும் நனையவைத்திடித்தலின்" (மதுரை. 399, ந.) அதிக விரைத்தூளி - கதம்பப்பொடி. மேல் அட்டி - சந்தனப் பூச்சின்மேற் சொரிந்து.

கருசு. புகை ஐந்தும் - சந்தனம் முதலிய ஐந்து உறுப்புக்களாலாகிய ஐவகைப் புகைகளையும். மழையின் - மேகம்போலவே.

கருஎ. கரு நீற - பிறவி சாம்பராக. ஆருயிர்க்குக் கருநீற வென்க. கற்பம் - திருநீற்று வகையுள் ஒன்று. இக்கண்ணி, "தொழுதெழுவார் வினைவள நீறெழ நீறணியம்பலவன்" (திருச்சிற். 118) என்பதைத் தழுவி வந்தது.

கருகூ. இடமுறையிற் சான்றாலும் - ஆகாயம் சிவபெருமானுக்குக் கேசமாதலின், பிறையும் கங்கையும் ஓரிடத்தில் இருத்தல் சால்புடைத்தாயினும்.

கச0. விதிர்க்கும் - நடுங்கும். மோலி - கிரீடம்.

கசக. கொக்கிறகு - கொக்கு வடிவங்கொண்டு வந்த அசுரனைக் கொன்று அவனைக் கொன்றதற்கு அறிகுறியாக அணியப்பட்ட அதன் இறகு. கை செய்த - பதித்த. சூட்டு - நெற்றிச்சூட்டென்னும் அணி

கசக - உ. தந்தைதாய் - திருமாலும் திருமகளும். சரம் - அம்பு.

கசரு. தென்றாலுந் தீயார்க் கிடங்கொடா ரென்பதுற
வென்றாலும் பட்ட மிளிர்வித்து - நன்றே

கசச. களிக்குமுடன் மாயுங் கரிசடுத்தா ரேனும்
அளிக்குணத்தா ரங்கமழி யாமை - தெளிக்குதல்போல்

கசரு. வெற்றி மதனுயர்த்த வெய்யகொடி வீற்றிருந்த
கொற்ற மகரக் குழையணிந்து - பெற்றசுகம்

கசசு. நல்லா ரிடத்திற் பிறந்தாலு நல்லார்தாம்
செல்லா விடத்திற் செறித்தாலும் - பொல்லாதார்

கசஎ. பண்பிற் றிரியாப் பரிசேபோ லாலாலம்
கண்பொத்து நீலக் கறைமிடற்றுத் - திண்புலத்தார்

கசஅ. மீட்டுமொரு சூழ்ச்சியினவ் வெய்யோரை மாய்ப்பதுபோல்
ஈட்டுமணிக் கட்டுவட மேய்வித்து - வேட்டுழல்சிற்

கசகூ. றின்பினர்க ளின்ப விளைவேயென் றேமாப்ப
அன்பினர்க ளாரா வருளென்னும் - கொன்பல்

கரு0. வளைத்தழும்புங் கொங்கை மணிச்சுவடுங் கண்கள்
திளைப்ப வெளிச்சிறப்ப வேனும் - அளிப்பின்

தீக்கடவுள் - தீயசெயலையுடைய மன்மதனை. காயும் கடவுள் - எரித்த நெற்றிக்கண்ணாகிய அக்கினிதேவன். கதிர்ப்பு - ஒளிவீசுதல். அஃது வயும் - அது பொருந்தும்.

கசரு. தீயார் - அக்கினிதேவன், கொடியவர். வென்று ஆலும் பட்டம் - பிற அணிகளை வென்று ஒளிவீசும் நெற்றிப்பட்டத்தை.

கசச. அளிக்குணத்தார் - வண்டாகிய நாணையுடையார்; அன்பாகிய குணத்தையுடையாரென்பது மற்றொரு பொருள்.

கசரு. கொடி - மன்மதனுடைய கொடியின்கண். மகரக் குழை - மகரமீன் வடிவமாகிய குண்டலத்தை. சுகம் பெற்ற.

கசசு. நல்லாரிடமென்றது பாற்கடலை. செல்லா இடமென்றது திருமிடற்றை.

கசஎ. கண் பொத்தும் - கண்டோருடைய கண்களை ஒளிமழுங்கச் செய்யும். திண்புலத்தார் - வலிய அறிவையுடையவர்கள்.

கசஅ. சூழ்ச்சி - ஆலோசனை. மாய்ப்பது - கொல்லுவது, மறையச்செய்வது. கட்டுவடம் - கழுத்திலணியும் ஒருவகை அணி. வேட்டு - புலன்களை விரும்பி.

கசகூ. ஆரா - தெவிட்டாத.

கரு0. வளைத்தழும்பும் கொங்கைச்சுவடும் அம்பிகை தழுவினமையாலுண்டானவை.

கருக. திருவர்பா லெய்தார்க ளென்னவெண்ணி யாங்குக்
குருமணிக்கே யூரந்தோட் கோத்து - மருமத்துப்

கருஉ. பொன்னரி மாலைகளும் பூவினறுந் தொங்கல்களும்
மின்னகு மொன்பான் வியன்றொடையும் - நன்னர்

கருந. இலைமுகப்பைம் பூணு மிருங்கண் ணித் தாரும்
குலவுசெழுங் கொன்றையொடுங் கூர்த்திட் - டுலக்மெலாம்

கருச. காப்புக் கமைந்ததற்கோர் காப்பின்றே யாதலிற்பொற்
காப்புக்குங் காப்புக் கரமாக்கி - நீப்பிலொற்றை

கருரு. ஆழி யுருட்டு மகங்கை விரறேறும்
ஆழி பலபூண் டவிர்வித்துப் - பீழை

கருசா. கழல வினைகள் கழல மலங்கள்
கழலக் கழல்கழற்கால் வீக்கிக் - கழலமுன்னர்ப்

கருஎ. போதந் தொளித்த புரையோனைக் கொன்றுபுவி
மீது தனைவிளங்கு வித்ததிறல் - மாதவனைத்

கருஅ. தாட்கவைஇக் காணவினிச் சாரென் றழைப்பனபோல்
ஆர்க்கு மறைநூ புரமணிந்திட் - டேற்கவின்னும்

கருக. இருவர் - விநாயகரும் முருகக்கடவுளும். கேயூரம் - வாகு வலயம். மருமம் - மார்பு.

கருஉ. ஒன்பான் வியன்தொடை - நவமணிமாலை.

கருந. இலைமுகப்பைம்பூண் - ஒருவகை ஆபரணம்; "விற் குணமே யிலைமுகப்பைம் பூணெனமார் பிடைக்கிடத்தும் விடங்கன் றன்னை" (ஆனந்த. பதிற். 8.); "இலைமுகப் பைம்பூ ணிறை" (நீதிநெறி.) கண்ணித்தார் - ஒருவகை மாலை; "தண்டிற் கட்டுங் கண்ணிகளும்" (பெரிய. முருக. 9.) கூர்த்திட்டு - மிக அணிந்து.

கருந - ச. உலகம் எல்லாம் காப்புக்கு அமைந்த தற்கு - உலகங்களை எல்லாம் காத்தற்கு அமைந்த தனக்கு. காப்பென்னும் பூணுக்குக் கைகள் காப்பென்பது யாவரும் அறிந்ததே. காப்பைக் கை நழுவாமற் செய்யும். நீப்பு இல் - நீத்தல் இல்லாத.

கருச - ரு. ஒற்றை ஆழி உருட்டும் அகங்கை - ஓர் ஆஞ்ஞாசக் கரத்தைச் செலுத்தும் அகங்கை; "ஒருதனி யாழி யுருட்டுவோ னெனவே" (சிலப். க : 68.) ஆழிபல - மோதிரங்கள் பலவற்றை. பீழை - துன்பங்கள்.

கருசா. வீக்கி - கட்டி.

கருஎ - அ. புரையோனை - குற்றமுடைய சோமுகாசுரனை. அவ

கடுகூ. வேண்டு மணிபலவு மெய்ப்படுத்து வெங்கதிரோன்
காண்டகு மண்டிலத்துக் கண்ணுற்று - மாண்டதன
ஏற்றுறு பரனுக் காற்றுறு முகமன்.
கசுO. தேர்விளக்கி யாங்கரவுண் டனுமதி போலுறைபோய்ச்
சீர்விளங்கு மாடி தெரிந்தருளிப் - பார்துளங்கப்
கசுக. பல்லியங்க ளார்ப்பவிரு பாற்கவரி துள்ளமணி
வில்லுமிழ் வெண்கவிகை மேனிழற்ற - மெல்லமெல்ல
கசுஉ. வேத்திரத்திண் கையர் மிடைசனநீக் கக்கொடுபோய்
யாத்த வெழினி யிடம்வீழ்த்து - மூத்தவன்பின்
கசுங. வைத்தநறும் பாளிதமும் வண்டயிர்நெ யக்காரம்
மெத்து சுவைப்பயறு மென்கடுகு - பொத்து
கசுச. புளிமுதல்வெவ் வேறுவிராய்ப் போக்கின் றமைத்த
மிளிரமுதும் வெற்ற வமுதும் - ஒளிர்கருணை

---

னைக்கொன்று திருமால் வேதங்களைப் புவியிற் கொணர்ந்த செய்தி இங்கே அறிதற்பாலது. மாதவனை - திருமாலை. தாள் கவைஇ - திருவடியைச் சூழ்ந்து. மறைநூபுரம் - வேதமாகிய சிலம்பு; "மறைச்சிலம்பான்" (சகூஎ); "மறையே நமது நூபுரமாம்" (திருவிளை. ௩க: 9.) வேதமாகிய சிலம்பினொலி திருவடியைத் தரிசிக்க வருகவென்று திருமாலை அழைப்பதுபோன்று உள்ளது. இக்காஞ்சியிலுள்ள வேதநூபுரமென்னும் ஒருதலத்தின் பெயரும் இங்கே அறிதற்பாலது.

கடுகூ - கசுO. மெய்ப்படுத்து - திருமேனியில் அணிந்து. வெங்கதிரோன் மண்டிலம் - சூரியமண்டிலம். சூரியமண்டிலத்திற் சிவபெருமான் இருத்தல், "இரவி மண்டிலத் துறையு நாயகன்" (கா. வயிர. 17) என்பதனாலும் அறியப்படும். கண்ணடிக்கு மதியும் அதன் உறைக்கு மதியை விழுங்கிய பாம்பும் உவமை; கண்ணடிக்கு மதி உவமை: "கற்றை வெண்மதி சாளரத் தாடியிற் காட்டும்" (நைட. நகரப். 3.) ஆடிதெரிந்தருளி - கண்ணடியைப்பார்த்து. துளங்க - நடுங்க.

கசுக. கவிகை - குடை.

கசுஉ. வேத்திரம் - பிரம்பு. யாத்த எழினி - கட்டிய திரைச்சீலையை. மூத்த அன்பு - முதிர்ந்த அன்பு; "மூத்த வன்பினன் விழியிடந்து" கா. இருபத்தெண். 300.

கசுங. பாளிதம் - பாற்சோறு; தொல். உயிர்மயங்கு. சூ. 43, ந. அக்காரம் - சருக்கரை. மெத்து - நிரம்பிய.

கசுச. விராய் - கலந்து. போக்கு - குற்றம். வெற்ற அமுது - சுத்தான்னம்; இதனைப் பெருந்திருவமுதென்பர். கருணை - பொரிக்கறி.

௧௬௫. பாகு துவையல் பலவறைய லாதிகளும்
பாகமுற வூறும் பலகாயும் - மாகமுஞ்சென்

௧௬௬. றூர்கடிய நோலை யடைநெய்க் களிமிதவை
வார்கழையின் பாகு மணற்பாகு - சீர்கலவும்

௧௬௭. சிற்றுண்டி பற்பலவுந் தேநீ ரிளநீர்வார்
உற்ற கழைநீ ருறுநீர்மோர் - பொற்ற

௧௬௮. பலகனியின் சாறுநறும் பாறயிர்தேன் மற்றும்
கலவு மருளாற் கரந்தொட் - டிலகு

௧௬௯. கலங்கழித்துக் கைபூசிக் காமர் கவுளின்
அலங்குபஞ்ச வாச மடுத்துத் - துலங்குபட்டின்

௧௭0. ஆனன நீவி யரும்புகைபஃ றீபவகை
ஊனமினீ றாடி யொளிர்கவிகை - பானிறத்த

௧௭௧. சாமரை யாலவட்டஞ் சாந்தாற்றி பற்பலவும்
ஏம முறவினிது கொண்டருளி - நான்மறையும்

---

௧௬௨ - ௫. தயிரும் அக்காரமும் பயறும் கடுகும் புளியும் பிறவும் விரவி வேறு வேறாக அமைத்த அமுதுகள்; என்றது தயிரன்னம் முதலியவற்றை. நெய்யும் அக்காரமும் விரவிய அமுது - சருக்கரைப் பொங்கல்; இஃது அக்காரடலையென வழங்கும். பாகு - குழம்பு. வறையல் - வறுத்தவைகள்; வறுவலென மருவி வழங்கும். ஊறும்பலகாய் - ஊறுகாய்.

௧௬௬. கடிய - மணமுள்ள. நோலை - எள்ளுருண்டை; எட்கசிவென்பர், பு. வெ. உரையாசிரியர். நெய்க்களி - நெய்விரவியகளி. மிதவை - கூழ். கழையின் பாகு - தேம்பாகு. கலவும் - கலக்கும்.

௧௬௭. தேநீர் - பானகம்; தேம் - தித்திப்பு. கழைநீர் - கருப்பஞ்சாறு. பொற்ற - பொலிவுபெற்ற.

௧௬௮. கரந்தொட்டு - அமுது செய்தருளி.

௧௬௯. கலம் - உண்கலங்களை. கைபூசி - கைகழுவி. கவுள் - கன்னம். பஞ்சவாசம் - கிராம்பு, ஏலம், பச்சைக்கருப்பூரம், சாதிக்காய், தக்கோலமென்பன.

௧௭0. ஆனனம் நீவி - முகத்தைத் துடைத்து. பஃறீபம் - பல் தீபம். நீறு ஆடி - திருநீறும் கண்ணாடியும். பால் நிறத்த - வெள்ளை நிறத்தையுடைய.

௧௭௧. ஆலவட்டம் = தாலவிருத்தம் - பனைமடலால் வட்டமாகச் செய்த விசிறி. சாந்தாற்றி - பூசிய சந்தனத்தின் ஈரத்தை உலர்த்தும் ஒருவகை விசிறி; ௧௮0. ஏமம் - இன்பம்.

கஎ௨. அன்பர் தொடுத்த வருந்துதியும் பல்லியமும்
முன்பு தொடங்க முறையாற்கேட் - டின்பக்

கஎ௩. குலமுருக்கொண் டாலன்ன கோதையர்நேர் நேரே
கலவி நடமாடல் கண்டு - சுலவியெழும்

கஎ௪ கற்பூர தீபமெதிர் கண்டடுத்தோர் யாவர்க்கும்
பொற்பூரு நீறு புரிந்தருளி - அற்பூரும்

நிலாச்சடை நிமலன் உலாப்போ தருதல்.

கஎ௫. காமன் குடைக்குக் கலைநிரப்புஞ் சென்னிமதி
வாமக் கலைகண் மலிந்தெழுந்து - சேமக்

கஎ௬. குளிர்நிரப்பிற் றென்னக் குருமணிகால் யாத்த
ஒளிநிரப்பும் வெண்கவிகை யோங்கத் - துளிநிரப்பிக்

கஎஎ. கங்கை நதியைக் கரந்த பெரும்பகையால்
துங்கக் கடற்றலைவன் றாண்டுதலும் - பொங்கிப்

கஎ௮. பொரவெழுந்த வெண்டரங்கம் போன்மெனவெப் பாலும்
சுரர்மகிழ்ந்த சாமரைக டுள்ள - வருதரங்கம்

கஎ௯. கண்டு பொரனுமக்குக் காரியமன் றென்றாக்கம்
கொண்டு விலக்குங் குறிப்பேபோல் - ஒண்டரளம்,

க௮0. சுற்றி னழுத்திச் சுடர்விரிக்குஞ் சாந்தாற்றி
பொற்றமணி யாலவட்டம் போந்தசைய - வெற்றி

---

கஎ௨. அருந்துதி - தேவார முதலியவை.

கஎ௩. கோதையர் - உருத்திரகணிகையர். கலவி - கலந்து. சுலவி - சுற்றி.

கஎ௪. நீறு புரிந்தருளி - விபூதியை விரும்பியளித்து. அற்பு - அன்பு.

கஎ௫. வாமம் - அழகு. சேமம் - இன்பம்.

கஎ௬. குருமணி - முத்து. கால்யாத்த - பதித்த.

கஎ௫ - ௬. மதி நிரப்பிற்றென்னவெனக் கூட்டுக.

கஎஎ. கரந்த - சடையில்ஒளித்த. கடற்றலைவன்-வருணன்; கஎ௯.

கஎ௮. பொர - போர்செய்தற்கு. சாமரைகளுக்குக் கடலலைகள் உவமை. போன்மென - ஒக்குமென்று சொல்லும்படி.

கஎ௯. பொரல் - போர்செய்தல்.

க௮0. சுற்றின் - சுற்றுப்புறத்தில்,

க௪௧. விருது பலமுழங்க வெண்சங்க மார்ப்ப
இருபுறமுந் தாரை யிரங்கக் - கருவிநிறை

க௪௨. பாவலர்க ணாவலர்கள் பல்கவிதை யேத்தெடுப்பப்
பாவலர்க டங்கள் பணிசெய்யக் - காவலர்கள்

க௪௩. நீதி பிறழாமை நின்றே வலரேவல்
ஆதி நடத்தி யருகுவரப் - போதுசொரிந்

க௪௪. தாவலங் கொட்டி யடியார் குலங்களிப்ப
நாவலந் தீவு நனிசிறப்பப் - பூவலயம்

க௪௫. மெத்திய வெய்யோன் விழுக்கிரணம் பாவாமல்
நித்தில வூர்தி நிழல்செய்ய - நித்திலத்த

க௪௬. மாலைக் கவிகை மழகதிரோ னேர்கவிகை
சாலக் கதிர்க்குந் தனிப்பிச்சம் - கோலக்

க௪௭. கொடிநிரையும் பல்காடு கூர்ந்தவென வாலக்
கடிநிரைத்த காவணத்தி னின்றும் - நெடிதெழுந்து

க௪௮. பல்லுறுப்பு முற்றிப் பசும்பொன் குயின்றமணி
அல்லிறுக்குங் கோயி லகத்துலாய்ச் - செல்லிறுக்கும்

---

க௪௧. விருது - வெற்றியைப் புலப்படுத்தும் பேரி முதலியவை. தாரை - ஊதும் வாத்தியங்களுள் ஒருவகை.

க௪௧ - ௨. கருவி நிறைபாவலர் - யாழ்வாசிப்போர்; கருவி - யாழ்; "கருவி மாக்கள்" (பு. வெ. 31.) நாவலர் - பிரசங்கம்செய்வோர், பாவலர்கள் - கவிஞர். காவலர்கள் - அரசர்.

க௪௩. ஏவலர் ஏவல் ஆதி - கோயிற்பணிசெய்வோர்களை ஏவுதல் முதலியவற்றை.

க௪௪. ஆவலங் கொட்டல் - வாயைப் பொத்திக்கொண்டு ஆரவாரித்தல்; "ஆனதங் கைவாய் சேர்த்தி யாவலங் கொட்டி யார்த்தார்" **வி. பா.** நிவாதகவச. 95.

க௪௫ - ௬. நித்திலவூர்தி - முத்துப்பந்தர்; "நீந்து நித்திலவூர்தி - மாந்தர்நெருக்கத்தைக் கடந்து போகின்ற முத்தின்பந்தர்" (சீவக. 858, ந.) நித்திலத்தமாலைக்கவிகை - வெண்குடை. மழகதிரோன் - பாலசூரியன். மழகதிரோன் நேர்கவிகை - சிவப்புக்குடை. கதிர்க்கும் - ஒளியைவீசும். பிச்சம் - மயிலிறகாற் செய்தகுடை.

க௪௭. கூர்ந்த - மிக்கன. ஆல - அசைய. கடி - வாசனையையுடைய பொருள்கள். காவணம் - பந்தர்.

க௪௮. முற்றி - முற்றுப்பெற்று. அல் இறுக்கும் - இருளை அழியச்செய்யும். உலாய் - உலாவி. செல்இறுக்கும் - மேகம் தங்கும்.

கஅகூ. கோபுர வாயிற் குழாங்கண் டுளங்களிப்ப
மாபுர வீதி மருங்கெய்தி - ஆபுரத்தில்

ககூ௦. ஏவுற்ற பொற்சிலைநே ரெய்துவதோ வென்னநனி
மூவுற்ற செம்பொன் முழுத்தேரில் - பூவுற்ற

ககூக. சிங்கத் தவிசிற் றிகழ்ந்தேறி யைங்கரன்முன்
துங்கக் குலத்தேர் துனைந்தூர - மங்கையுமை

ககூஉ. நன்னார்க் கடம்ப னவையில் விறற்சண்டன்
பின்னர்ப் பொலந்தேர் பெரிதூர - முன்னர்

ககூந. வரத்தி னருள்பெற்ற மத்தளமா யோன்றன்
கரத்தினனி யொத்திக் களிப்ப - நரைத்தலையோன்

ககூச. தாளம் பிடிக்கத் தனிவிசும்பு காவலோன்
வாளம் பிடித்து மருங்கணைய - வேளம்

ககூரு. பிடித்தறியார் செங்கைதிரை யீந்து தனதன்
பொடித்தநறும் பாகடைப்பை பூணக் - கடித்தேன்

ககூசு. துளிமலர்மெல் வாசந் துதைந்துகுளிர் கொண்டு
வளியிளங்கா லாய்மருங்கு வாவ - நளிகொள்

ககூஎ. தனிநீர்க் கடற்றலைவன் சார்ந்திறைவர் மெய்யில்
பனிநீர்த் திவலை பனிப்பக் - கனிதே

---

கஅகூ - கூ௦. மா புரம் - பெரியநகரம். ஆ : வியப்பின்கட் குறிப் பிடைச்சொல். புரத்தில் - முப்புரங்களோடு போர்செய்கையில். ஏவு - அம்பு. பொற்சிலை - வில்லாகியமேருமலை. மூ உற்ற - மூத்தலுற்ற. தேருக்கு மேரு உவமை.

ககூக. சிங்கத்தவிசு - சிங்காதனம். துனைந்து - விரைந்து. ஐங் கரன் முன்னூரவென இயைக்க.

ககூஉ. கடம்பன் - முருகக்கடவுள். சண்டன் - சண்டேசர்.

ககூந. மத்தளமாயோன் : கண்ணி, ருஅ - கூ, குறிப்பைப்பார்க்க. நரைத்தலையோன் - பிரமன்.

ககூச - ரு. வாளம் - கத்தி. வேள் அம்பு இடித்தறியார் - பரம சிவன். திரை - வெற்றிலைச்சுருள். தனதன் - குபேரன். பாகு - பாக்கு. அடைப்பை - வெற்றிலைப்பை.

ககூசு. தென்றற்குரிய சைத்தியம், ஸௌரப்பியம், மாந்திய மென்னும் மூன்று நடையும் இதிற் கூறப்பட்டன. நளி - பெருமை, குளிர்ச்சி.

ககூஎ. கடற்றலைவன் - வருணன்.

கக௮. மதுபருக்கம் பான்மற்றும் வந்தடியா ருய்ப்பக்
கதுமென வெய்யோன் கனலி - விதுமூவர்

ககக. சுத்தி புரிந்து துணைக்கை யிடையேந்தி
அத்த நுகர்கென் றளித்துவர - எத்திசையும்

உ00. போற்றுயரீ சானன் புனிதனருள் பெற்றெய்தி
ஏற்றுமிசை யேற்றுக் கொடியுயர்ப்ப - ஆற்றுபணி

உ0க. நீக்கிக் கழியு நிலையினரை நன்னெறியில்
தாக்கி யியமன் றலைநிறுவப் - போக்கின்றி

உ0உ. மற்றை யமரர்களு மாநகரி ளுட்சியரும்
உற்ற தொழின்மை யுஞற்றிவர - முற்றும்

உ0ந. இரவுபகல் காட்டு மெறுழுருளை மான்றேர்
வரதன் மணிவீதி வந்தான் - புரவளிக்கும்

உ0ச. அத்திர சாலை யமுதடு சாலையா
வைத்த தனிச்சேவகன்வந்தான் - பைத்தமணி

உ0ரு. நாகமுநீள் கோட்டு நாகமுஞ் சூழ்ந்திருப்ப
மாகரும் போற்றுமுடை யான்வந்தான் - ஆகும்

கக௮. மதுபருக்கம் - பால் பழம் சருக்கரை நெய் கலந்தமைத்த ஒருவகையுணவு; "கொங்கலர் மாலை சூட்டிக் குளிர்மது பருக்க மூட்டி" (திருவிளை. கஉ. 47.) வெய்யோன் - சூரியன். கனலி - அக்கினி. விது - சந்திரன்.

ககக. அத்த : விளி.

உ00. ஈசானன் இடபக்கொடியை உயர்த்த. பணி-கைங்கரியங்கள்.

உ0க. நிறுவ - நிறுத்த. போக்கு - குற்றம்.

உ0உ. உஞற்றி - செய்து.

உ0ந. இரவையும் பகலையும் காட்டும் உருளை என்றது சந்திர சூரியராகிய சக்கரங்களை. புரவு - பாதுகாத்தல்.

உ0ச. பாற்கடல், திருமால்துயிலுதற்கும் விடமுண்டாதற்கும் இடமாக இருந்ததுபற்றி அத்திரசாலையெனவும் அமுதடுசாலையெனவும் கூறப்பட்டது. அத்திரசாலையை அமுதடுசாலையாக வைத்த. அத்திரமென்றது திருமாலை. பைத்த - படம் விரித்த.

உ0ச - ரு. மணி நாகம் - திசையிலுள்ள எட்டுப் பாம்புகள். கோட்டு நாகம் - திக்குயானைகள்; கோடு - கொம்பு. உடையென்றது இங்கே திக்கை. திக்கே சிவபெருமானுக்கு உடை யென்பதைத் திகம்பரனென்னுந் திருநாமத்தாலுமுணர்க.

உ0௬. பரிசமுருக் காண்டல் பகர்கேள்வி யோர்பால்
மருவுமணிப் பூணினன் வந்தான் - பரவை

உ0௭. அலைத்தும் புவிபெயர்த்திட் டந்தரத் தோங்கி
மலைத்த விடைக்கொடியான் வந்தான் - நிலைத்த

உ0அ. கடவுளர்தம் மாதர் களம்வறங்கூ ராது
மிடல்படைத்த நன்மிடற்றன் வந்தான் - படர்கருமம்

உ0௯. ஈட்டா ருயிர்விழிக ளெல்லா முருக்காணக்
காட்டாகு முக்கண்ணி னன்வந்தான் - வேட்டதருள்

உக0. ஆனந்த ருத்திரத்தெம் மண்ணல்வந்தா னென்றோதை
வானுந்து சின்ன மலிந்தூத - ஞான

உகக. உறுவ ருவவும் பனவ ருவவும்
மறைக ளொலியின் மலியச் - செறியும்

உக௨. மதலை நிரையின் வரிசை யெனத்திண்
மதமைக் களிறு மருவப் - பிதிரும்

---

உ0௬. பரிசம் - ஸ்பரிசம். பரிசத்தையும் காண்டலையும் கேட்டலையும் ஒருருப்பிற் பெற்ற பூணென்றது நாகத்தை; "கண்ணுற்பன் மொழிகேட்கு மணிப்பூணேய்" (திருவானைக்கா. கடவுள். 9) என்பர்.

உ0௬ - ௭. பரவையை அலைத்தலும், புவியைப் பெயர்த்தலும், விண்ணில் ஓங்கி நிற்றலும் திருமாலின்செயல்; விடை திருமால் ஆதலால் இங்ஙனங் கூறினர்.

உ0அ. களம் - கழுத்து. வறம் - வறுமை. சிவபெருமான் நஞ்சை யுண்டருளினமையின், விண்ணோர்கள் பிழைத்தனர். களம்வறங்கூராமை - கண்டம் மாங்கலியத்தோடு கூடியிருத்தல். கருமம் - நல்வினை தீவினைகளை.

உ0௯. ஈட்டும் ஆருயிர்கள். முக்கண்ணினன் : சோமசூரியாக்கினிகள் கண்களாக இருத்தலின் இவ்வாறு கூறினர்; "இமையாத முக்கண் மூவரிற் பெற்றவர்" (திருச்சிற். 14.) வேட்டது - விரும்பியதை.

உ0௯ - க0. வேட்டதருள்......அண்ணல் : "வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்" (தே. திருநா.) ஓதை - ஓசை. சின்னம் - ஊதப்படும் வாத்தியங்களுள் ஒன்று.

உகக. உறுவர் - முனிவர். உவவு - கடல். பனவர் - பிராமணர்.

உக௨. மதலை - மரக்கலம். களிற்றுக்கு மரக்கலம் உவமை. மைக்களிறு - மைபூசியகளிறு; "மையணி யானை மறப்போர்ச் செழியன்" அகநா. கக௬ : 13.

உகந. திரையி னிரைக டிரள்வ தெனப்பல்
பரியி னிரைகள் படரப் - பெரிய

உகச. பகடு கடவிப் பரவு மரையர்
மகுட நிரைகள் வயங்கப் - புகரில்

உகரு. கடவுண் மகளிர் கலவி முறையின்
நடன வகைக ணவிலப் - படகம்

உகசு. பதலை முருடு பணவ முழவம்
முதல பலவு முழங்க - மதிவெல்

உகஎ. வளைகள் குழல்கள் வயிர்க ணரம்பின்
கிளைக வினிது கிளர - ஒளிசெய்

உகஅ. மடல்கொ டருவின் மலரி னமரர்
படியிற் றிடறு படுப்ப - அடியர்

உகக. உதவு கனக மழையொ டுதவும்
உதக மதனை யொழிப்ப - மதவொண்

உஉ0. பொழில்கண் மழைகள் பொருவ தெனப்பொன்
செழிபன் மணிகள் சிதறப் - பொழியும்

உஉக. துணிகள் கழையின் றுணிகள் பொரிகள்
சனமெய்த் தலையிற் றதையக் - கனக

---

உகந. திரையின் நிரைகள் - அலையின் வரிசைகள். பரிகளுக்குத்திரையின் நிரைகள் உவமை. "பொங்குந் திரையும் பொருகடலும்......வெம்பரியும், போர்க்களமும் போலும் பொலிந்து" (கிளவித் தெளிவு); "பரிநிரை திரையாய்த் துள்ள" திருவிளை. கு : 16.

உகச. பகடு - யானை. அரையர் - அரசர்.

உகரு. கலவி - கலந்து ; கண்ணி, கஎந.

உகரு - சு. படக முதலிய ஐந்தும் வாத்திய விசேடங்கள். மதி - சந்திரனை. வெல் : உவமவுருபு.

உகஎ. வளைகள் - சங்குகள். வயிர்கள் - ஊதுகொம்புகள். நரம்பின் கிளைகள் - யாழின் வகைகள் ; நரம்பு : ஆகுபெயர்.

உகஅ. மடல் - பூவிதழ். திடறு - திடல், மேடு ; "திடரேட்டம்" கம்ப. குலமுறை. 8.

உகக. உதகம் - தாரைவார்க்குமநீர். அதனை - அத்திடரை. மத - அழகு ; தொல். உரி. கூ. 80.

உஉக. கழையின் துணிகள் - கருப்பந்துண்டங்கள். பொரிகள் -

உஉஉ. தருவுங் கொடியுந் ததையப் பதண
நிரையு மெவரு நெருங்க - விரவு

உஉங. மனிதர் குலமு மலர்வ தெனப்பல்
புனித மரமும் பொலிய - இனிய

உஉச. புகைவிண் பொதியப் பொழிசெங் கிரணப்
பகல்செ லிரவிற் பயில - நிகழும்

உஉரு. இருளை யிழையி னொளியு மிரத
உருவி னொளியு மொறுப்பத் - தரையின்

மிடைதரு மகளிர் அடைவுறு நிலைமை.

உஉசு. வணங்கிடை மங்கையர் வண்ட லிகந்து
சுணங்கிவர் கொங்கை துளங்க - இணங்கி

உஉஎ. மணந்தவழ் தொங்கன் மணந்து குழன்று
வணர்ந்து சரிந்து மலிந்து - தணிந்து

உஉஅ. பொருந்தள கங்கள் சரிந்து சரிந்து
வெரிந்தலை யொன்றி விளங்கப் - பரந்து

உஉகூ. நெருங்கிய கொங்கை நிலந்திவள் வம்பு
மருங்கொளி யுந்து வடங்கள் - ஒருங்கு

---

நெற்பொரிகள். சனம் மெய்த்தலையில் - மனிதர்களுடைய உடம்பினிடத்தே. ததைய - நெருங்க.

உஉக-உ. கனகதரு - கற்பக தரு. கொடி - காமவல்லி. பதணம் - மதிலுள் மேடை.

உஉங. மனிதர்கள் மரங்களின் மேல் ஏறி நிற்கின்றமையின் இங்ஙனம் கூறினர்.

உஉங-ச. இனியபுகை - நறும்புகை. பகல் செல் இரவில் - சூரியன் அத்தமித்த இரவைப்போல. புகை பொதிதலாற் பகல் இரவு போன்றது.

உஉரு. உரு - வடிவம். இருளை ஆபரணங்களின் ஒளியும் தேரினொளியும் நீக்க.

உஉசு. வண்டல் இகந்து - விளையாட்டை விட்டு. சுணங்கு இவர் - தேமல் பரந்த.

உஉஎ. தொங்கல் - மாலை. குழன்று - கடை வளைந்து. வணர்ந்து - வளைந்து. சரிந்து - சுழித்து.

உஉஅ. அளகங்கள் - கூந்தல்கள். வெரிந் தலை - முதுகினிடத்தே.

உஉகூ. நிலம் - இடம். திவள்வம்பு - விளங்குகின்ற கச்சு. உந்துதல் - செலுத்துதல்.

உ௫0. செழுந்தொடை யொன்றனொ டொன்று செறிந்து
விழுந்து தவழ்ந்து விலங்க - எழுந்து

உ௫க. பணிந்த நிதம்ப மணிந்த வடங்கள்
பிணைந்து தழங்கல் பிறங்க - நிணந்து

உ௫உ. கிடந்த சிலம்பு சதங்கை கிளர்ந்து
நுடங்கிடை நொந்தது நொந்த - திடங்கண்

உ௫௩. டிருந்தெழு கென்று விளம்புவ தென்னத்
திருந்தடி நின்று சிலம்ப - விரைந்து

உ௫ச. நடந்து தொடர்ந்து நனந்தலை ஞெள்ளல்
மிடைந்து சனங்கள் விலங்கப் - படர்ந்து

உ௫௫. புகுந்தெதிர் நின்று பொழிந்தலர் செங்கை
முகிழ்ந்து சிரங்கொடு முந்தி - நெகிழ்ந்த

உ௫௬. உளங்கொ டிறைஞ்சி யுவந்து நிமிர்ந்து
துளங்கி மருங்கு துவன்ற - வளங்கொள்

உ௫௭. விசும்பர மங்கையர் விண்ணிட மெங்கும்
அசைந்தலர் சிந்தி யணங்கக் - கசிந்தெவரும்

உ௫௮. போற்ற நெடுங்கொடியும் பூந்தோ ரணத்திரளும்
தோற்றிய மாடந் தொறுந்தீபம் - ஏற்றிநறும்

உ௫௯. பூரண கும்பம் பொருத்திநறு நீர்தெளித்துக்
காரணவ வோங்குநடைக் காவணமிட் - டோரணவும்

---

உ௫0. தொடை - பூமாலை.

உ௫க. வடங்கள் - மேகலை வகைகள். பிணைந்து - பின்னி. தழங்கல் - ஒலித்தல். நிணந்து - பிணித்து.

உ௫உ. சிலம்பு சதங்கை - சிலம்பும் சதங்கையும். இடம் கண்டு - தங்குமிடத்தை யறிந்து ; சமயமறிந்தெனலுமாம்.

உ௫ச. நனந்தலை - அகற்சியையுடைய இடம். ஞெள்ளல் - தெரு. விலங்க - விலக, குறுக்கிட. படர்ந்து - சென்று.

உ௫௫. அலர் பொழிந்து. முகிழ்ந்து - குவித்து.

மங்கையர் (உஎ௬) துவன்ற (உ௫௬) என்க.

உ௫௭. அரமங்கையர் - தெய்வப்பெண்கள். அணங்க - வருந்த.

உ௫௯. நறுநீர் - பனிநீர். கார் அணவ - மேகமண்டலத்தைப் பொருந்த. நடைக்காவணம் - வழியில் நீளமாகப் போடப்படும் பந்தல்;

### நேசத் தலைவி ஈசனைக் காண்டல்.

உ௪௦. வீதி யிடைக்கடவி வெய்தெதிரே தோற்றுதலும்
போதுமட மாதரொடு போந்தேனும் - நாதன்

உ௪௧. கருணை பொழிமுகமுங் காதலெலாம் வல்லே
அருள வலர்ந்த விழியும் - பருதிபல

உ௪௨. கோடி யொருங்கு குழீஇயனைய செக்கரொளி
நீடு முருவினிறை கோலமும் - பீடும்

உ௪௩. மழுமான் றரித்து வயங்குமிரு கையும்
முழுவான் பயத்தை முனிந்து - செழுவான்

உ௪௪. வரம்வழங்க வைத்த மலர்ந்தவிரு கையும்
பரம்வழங்கு பாதத் துணையும் - உரங்கிடந்த

உ௪௫. கேழில் பிரணவம்போற் கேசரங்கொண் டேமலர்ந்த
கேழிதழித் தாரின் கெழுதகையும் - வாழிநனி

உ௪௬. கண்டேன் புரிமுறைமை காணேன் கதழ்வினுளம்
விண்டேன் விதும்பி மெலிந்தனேன் - தண்டாப்

---

இக்காலத்து இச்சொல் நடைவானமென்று வழங்கும். ஏர் அணவும் - அழகு பொருந்திய.

உ௪௦. கடவி - செலுத்தி. வெய்து - விரைவாக. போதும் - சென்ற. போந்தேனென்றது தலைவியின்கூற்று.

உ௪௧. வல்லே - விரைவாக.

உ௪௨. குழீஇ அனைய - கூடினாலொத்த. பீடு - பெருமை.

உ௪௩. வான்பயம் - பெரிய அச்சம்.

உ௪௩ - ௪. அபயக்கையும் வரதக்கையும். பரம் - முத்தி. உரம் - மார்பு.

உ௪௫. கேழ் இல் - ஒப்பில்லாத. கேசரம் - பூவினுள்ளேயுள்ள பொற்கம்பி போன்று வளைந்த உறுப்பு. கேழ் - நிறம். இதழி - கொன்றை. கெழுதகை - உரிமை.

உ௪௪ - ௫. உரங்கிடந்த இதழித்தார்: "வண்ண மார்பிற் றாருங் கொன்றை" (புறநா. கடவுள். உ.) கொன்றையை இவ்வாறே பின்னுங் கூறுவர்; ௩௫உ-௩.

உ௪௬. புரிமுறைமை - செய்யுங் கடமைகளை. கதழ்வின் - விரைவில்.

உசஎ. புகுமுகம்யான் வீழப் பொழிகருணை காட்டி
நகுநயமு நல்கினு னேனும் - தொகுதவத்துள்

உசஅ. ஏது குறையுளதோ வெம்பெருமான் றுன்கருதும்
நீதி றிருவிளையாட் டோவறியேன் - மாதவற்குச்

மயலுறுந் தலைவி செயலழிந் தியம்பல்.

உசகூ. சங்காழி முன்னிங்குத் தந்தாரென் பார்கவர்ந்த
சங்காழி யென்கைத் தரவிரையார் - இங்கே

உருo. கலையொருவர்க் குய்த்தளித்தா ரென்பார் பறித்த
கலையெனக்கு நல்கக் கடுகார் - விலகவிங்கு

உருக. வேகவதி நீர்தடுத்தா ரென்பா ரெனதுவிழி
வேகவதி நீரை விலக்கிலார் - மாகளங்க

---

உசஎ. புகுமுகம் யான்வீழ - புகு முகத்தை யான் விரும்ப ; புகு முகம் - தலைவன் நோக்கத்திற்குத் தான் எதிர்ப்படுதல் ; "அணங்கு மாயிடைப் புகுமுகம் புரிந்தே யார்வ மீக்கொளக் கட்கடைவிடுத்தாள்" (கா. பன்னிரு. 136.) நகுநயம் - புன்முறுவலை ; தோல். மெய்ப். சூ. 13, பார்க்க.

உசஅ. மாதவற்கு - திருமாலுக்கு.

உசகூ. சங்கு - சங்கம், வளையல். ஆழி - சக்கரம், மோதிரம். இத்தலத்தில் திருமால் பரமசிவனிடத்துச் சங்கத்தையும் சக்கரத்தையும் பெற்றனர் ; கா. வலம்புரி. 45 ; ஷை திருமாற். 12-3.

உருo. கலை - வித்தை, ஆடை. ஒருவர் - அகத்தியமுனிவர் ; அவருக்குக் கலையளித்தனர் ; கா. தழுவ. 245 - 6. கடுகார் - விரையார்.

உருக. வேகவதி - ஓராறு ; பிரமன்செய்த யாகத்தை அழித்தற்கு வந்த அவ்வாற்று வெள்ளத்தைத் திருமாலைக்கொண்டு தடுப்பித்தார் ; கா. ஆதிபதீச. சிவாத்தான. விழி வேக வதி நீரை - கண்கள் வேகும் படி உள்ளே தங்கிப் பெருகுகின்ற கண்ணீரை ; துயரக் கண்ணீர் வெம்மையை யுடையது ; "மதரரி நெடுங்கண் வேற்கடை கான்ற, புள்ளி வெம்பனி", "கருந்தடங் கண்ணி ணிமைநீர் வெம்பனி", "வடுப்போழ்ந் தன்ன வாளரி நெடுங்கண், குமிழ்த்தெழு வெம்பனி", "தண்டா மரைக் கண் வெம்பனி வீழ", "ஓடரி சிதரிய வொள்ளரி மழைக்கண்........ உருத்தரி வெம்பனி யூழூழ் சிதறி", "உள்ளழல் வெம்பனி யுகுத்தரு கண்ணீர்த், துன்பமோ டிறைஞ்சிய தம்பியர்", "கண்ணி, னழறிரண் டன்ன வாலி", "தம்பியர் தாமரைத் தடங்கண் சொரியும், வெம்பனி

உருஉ. மேனிப் பசப்பரிக்கு வீத்தாரென் பர்ரெனது
மேனிப் பசப்பரிக்க மேவிலார் - ஊனவிட

உருஙு. வெப்பொழிய விண்டுவைத்தம் பானிறுவி னாரெனது
வெப்பொழியப் பானிறுவ மேவிலார் - ஒப்பனையாட்

உருச. காகங் குழைந்தா ரளியேன்றன் பாற்குறுகும்
ஆகங் குழையு மருளிலார் - சாகரத்தைத்

உருரு. தாக்கியன்று காஞ்சி தனைக்காத்தா ரின்றுமது
தாக்கியெனைக் காப்பத் தயவிலார் - ஒக்கியசெங்

உருசா. கல்லெறிக்குத் தம்பாதங் காணிகொடுத் தாரென்கண்
நல்லெறிக்குத் தந்திணிதோ ணல்கிலார் - வல்லி

உருஎ. அறமுழுது மாக்க வமைத்தாரிக் காம
அறமொன்றுந் தாமாக்க வண்ணார் - உறுவெப்புக்

---

துடைத்து" (பெருங். க. 33: 123-4, 40: 191-2, 46: 223-4; உ. 10: 124, 16: 16-20; ங. 24: 101-2, 103-4, 126-7); "இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி" (குறுந். ச: 2); "தனத்துக் கமைந்தகண் வெந்நீர்க் குளியும்" (மயிலையந். 60) "வெதும்பி விழும் நீளரிக் கண்ணீர்" (ஙகங) என்பர் பின்னும்; "கணவ ரெய்தாப், புலம்புறு மாதரார்க்கும் புணர் விழி வெந்நீ ராட்டி" கா. கழுவாய். 371.

உருஉ. பசப்பு - பச்சைநிறத்தை. அரிக்கு - திருமாலுக்கு; கா. வீராட்ட. 25 - 6; ஷ அந்தரு. 41.

உருஉ - ங. விடவெப்பு - விடத்தா லுண்டான வெம்மையானது. விண்டுவைத் தம்பால் நிறுவினர் - திருமாலைத் தம்முடைய பக்கத்தே நிறுத்தினர்; கா. கண்ணீச. 4 - 9; அந்தரு 42 - 3. ஒப்பனையாட்கு - உமாதேவியார்க்கு.

உருச. ஆகம் - உடம்பு, நெஞ்சு. குழையும் - மெலியாநிற்கும். உமைக்குத் திருமேனி குழைந்தனர்; கா. தழுவ.

உருச - ரு. சாகரத்தை - கடலை. காஞ்சிதனை - காஞ்சீபுரத்தை. கடல் பொங்கி யெழுந்து வந்தபொழுது காளியைக்கொண்டு அதனை அடக்குவித்தார்; "காளிக்குப், பொங்குகட லுருக்கும் பொலிவளித்தார்" (சoஅ) என்பர் பின்னும்; கா. கழுவாய். 418 - 21. ஒக்கிய - ஓங்கி யெறிந்த.

உருசா. கல்லெறிக்கு - சாக்கிய நாயனாரெறிந்த கல்லெறிக்கு; கா. முத்தீச. 17. கண் நல்லெறி - கண்களின் நல்லபார்வை. வல்லி - உமாதேவியார்.

உருஎ. அறமுழுதும் - முப்பத்திரண்டு தருமங்களையும்; காம்வறம்

உருஅ. கண்ணனுக்கிங் கானந்தங் காட்டினார் காதலித்தேற்
கெண்ணனுக்கு மானந்த மேய்த்திலார் - கண்ணனயன்

உருகூ. பூமகளிர் தம்மைப் புணரவளித் தாரிங்கிப்
பூமகளே னைத்தாம் புணர்கிலார் - தோமிலாக்

உசுO. காப்பு நடனமிங்குக் கைக்கொண்டா ரென்னுவி
காப்பவுளஞ் சற்றுங் கடைப்பிடியார் - யாப்பு

உசுக. மறைபுறத்தே செல்லாமை மீட்டுவளர்த் தாரென்
மறைபுறத்தே செல்லாமை வையார் - குறுகொருவன்

உசுஉ. புண்ணுருவ மாற்றிப் புரவளித்தா ரிங்கெனது
புண்ணுளத்தை மாற்றிப் புரவளியார் - எண்ணில்

உசுங. இடர்துமித்தன் மூத்தபிள்ளைக் கேய்த்தா ரெனக்கோர்
இடர்துமிக்கத் தாமிங் கிசையார் - படருமிரு

உசுச. மாலாரைத் தம்முருவா வைகுவித்தா ரிங்கடுத்த
மாலேனைத் தம்முருவா வைகுவியார் - மாலோ

---

அம்முப்பத்திரண்டனுள் ஒன்று; கண்ணி, ருO - ருக; கா. தழுவ. 137 - 41; கழுவாய். 238 - 70.

உருஎ - அ. வெப்புக் கண்ணனுக்கு - சுராக்கனென்னும் அசுரனுக்கு. • ஆனந்தம் - மரணம், முத்தி, இன்பம்; கா. சுரகரீச. 39. எண்ணுக்கும் - அளவைக்கடந்த. கண்ணனயன் - கண்ணனும் அயனும்.

உருகூ. பூமகளிர் தம்மை - திருமகளையும் கலைமகளையும். பூமகளேனை - பூமியிலுள்ள மகளாகிய என்னை.

உசுO. காப்பு நடனம் - ரக்ஷாநடனம்; கா. தழுவ. 300 - 312. என் ஆவிகாப்ப - என்னுயிரைக்காத்தற்கு. யாப்பு - செய்யுட்களுக்குரிய பந்தம்.

உசுக. மறை - வேதம். வேதத்தைக் கைக்கொண்டு சென்ற சோமுகாசுரனைத் திருமாலைக்கொண்டு கொல்லுவித்து அவ்வேதத்தைக் கொண்டுவரச் செய்து வளர்த்தார்; கா. மச்சீச. என் மறை - எனது மந்தணச் செய்திகள்.

உசுக - உ. புரவு - பாதுகாப்பு. உச்சயினி நகரத்திலிருந்த ஒருவனுக்கு உண்டாகிய குட்டவியாதிப் புண்ணை இட்ட சித்தித்தீர்த்தம் நீக்கிய தென்பார்; கா. தீர்த்த. 75 - 95.

உசுங. மூத்தபிள்ளைக்கு - விநாயகருக்கு; கா. வலம்புரி. 14.

உசுங - ச. இருமாலாரை - இரண்டு திருமால் வடிவங்களை. தம்முருவம் - சிவலிங்கவடிவம்; கா. திருமேற். 9 - 10; அந்தரு. 35.

உசுரு. டலருடையா னைத்தோ ளணைத்தார்மா லோடிங்
கலருடையே னைத்தோ ளணையார் - குலவுகற்ப

வீறுறு தலைவிதன் வேறுபா டுரைத்தல்.

உசுசு. காலத்துங் காஞ்சி யழியாமை காட்டினரிக்
காலத்தென் காஞ்சிதனைக் கட்டழித்தார் - கோலத்தம்

உசுஎ. கைப்பட்ட மென்றுரும்பாற் காமருவிண் ணோர்தூண்டு
மொய்ப்பட்ட வெம்படைகண் மொத்தினார் - மெய்ப்பட்ட

உசுஅ. வெல்லுருவ முற்றும் விராய்நிறைத்த வென்னுள்ள
வல்லிரும்பைப் பூவின் மலக்கினார் - வெல்லெரியின்

உசுகூ. மூவ ருடல்குளிர்ப்ப முன்னினார் தண்மதிக்கென்
ஒவி லுயிர்வெதும்ப வுன்னினார் - மேவுதலும்

உஎ0. பொய்யழிய வேதவியா சன்மையல் போக்கினார்
மெய்யழிய வென்கண்மயல் வீக்கினார் - வெய்யவுறு

---

பார்க்க. திருமால் சிவலிங்கப் பெருமானாகியபொழுது ஓதவுருகிய பெருமானெனப்படுவரென்பர்; ப. கா. சிவாலய. 270. மாலேனை - மயக்கமுடைய என்னை.

உசுச - ரு. திருமாலையும் பிரமனையும் தோளில் அணைத்தனர்; கா. காரோணப். மாலோடு அலருடையேனை - மயக்கத்தையும் பழி மொழியையும் உடைய என்னை.

உசுரு - சு. கற்பகாலத்திலும் காஞ்சிநகரம் அழியாதிருக்கும்படி செய்வித்தனர்; இதனாற் காஞ்சிநகரத்திற்குப் பிரளயசித்தென்று ஒரு பெயருண்டு; கா. கழுவாய். 227. என் காஞ்சிதனை - எனது காஞ்சி யென்னும் ஆபரணத்தை.

உசுஎ. மொய் - வலி. ஒரு துரும்பினால் தேவர்களுடைய ஆயுதங்களை அடக்கினார்; அமரீசம் (சுச) என்பதன் குறிப்பைப்பார்க்க.

உசுஅ. விராய் - கலந்து. பூவின் மலக்கினார் - மன்மதபாணத்தால் மயங்கச் செய்தார். மலக்கு: மலங்கு என்பதன் பிறவினை; "செம் மலங் கயல்கள் செங்கமலத்தண் பூமலங்க வெதிர்பாய்வன" (பெரிய. தடுத்தாட். 92); "மலங்கிற்றே தன்னுடைய வான்கிளையைத் தேடி" நள. சுயம்வர.

உசுகூ. மூவர் - திரிபுரத்துத் தலைவர்களான மூன்றசுரர்; கா. முப்புராரிகோட்டப்.

உஎ0. மையல் - மயக்கம். மெய் அழிய - என் உடம்புகெட. வேத வியாசன் மையல்போக்கியதை, கா. சார்ந்தாசயப் படலத்தாலறியலாகும்.

௨௭௧. சாப மவரவர்க்குச் சாய்த்தார் கழையாய
சாப மெனக்குத் தகவைத்தார் - கோப

௨௭௨. மகர வலிதொலைத்தா ரம்மகர மைந்தன்
மகர வலிவளர வைத்தார் - புகழவையம்

௨௭௩. சுத்தி யொருதடத்துத் தோற்றினார் யான்சுத்தி
முத்த மிகழு முறைவைத்தார் - ஒத்த

௨௭௪. அயிரா பதத்தி னருள்வைத்தார் யாரும்
அயிரா பதத்தினருள் வையார் - அயராமைப்

௨௭௫. பாலுததி யோர்முனிக்குப் பாலித்தா ரிங்கெனக்குப்
பாலுணவு வேண்டாப் பகைசெய்தார் - சால

௨௭௬. இரவு தமக்குரிமை யாக்கினா ரென்பால்
இரவிகல்வ தாக விசைத்தார் - பரவும்

௨௭௭. அதிசயித்த வைந்தடத்தோ டாருமெனை யெண்ணி
அதிசயித்த வாறுதட மென்ன - வதனார

௨௭௧. சாபம் - பிருகுமுனிவர் முதலியோருடைய சாபங்களை. கழையாய சாபம் - கரும்பாகியவில்.

௨௭௨. மகரவலி - திருமாலாகிய மகரமீனின் வலியை. அம்மகர மைந்தன் - மன்மதனுடைய. மகரவலி - மீனக்கொடியின்வலியை; கண்ணி, ௨௬௨-௩; கா. மச்சீச. வையம் புகழ.

௨௭௩. சுத்தி - சிப்பி: "சுத்தி - பிறர்க்குத் திருநீறு கொடுத்தற்கு இப்பி வடிவாகத் தலையோட்டா னமைக்கப்படுவ தொன்று" (திருச்சிற். 242, பேர்.) ஒருதடம் - சிப்பி தீர்த்தம்; கா. மச்சீச. 2.

௨௭௪. அயிராபதம் - வெள்ளையானை; கா. அரிசாப. 23. அயிர் ஆபதத்தின் - சந்தேகிக்கும் ஆபத்தில்.

௨௭௫. ஓர்முனிக்கு - உபமன்னியு முனிவர்க்கு; இவருக்குப் பாற்கடலளித்தனர்; கா. தான்றோன்றீச. 3 - 12. பாலுணவு வேண்டாமை பசியட நிற்றலென்னும் மெய்ப்பாட்டின் பாற்படும்.

௨௭௬. தமக்கு இரவை உரிமையாக்கினார்; இரவு - யாசகம், இராத்திரி.

௨௭௭. ஐந்தடம் - இரவில் தாமரை பூக்குந் தடம் முதலிய ஐந்து; ௪௧ - ஆம் கண்ணி முதலியவற்றைப் பார்க்க.

உளஅ. விந்தம் விழிக்குவளை மென்முகையும் பூவிரிவும்
அந்தி பகலுமுற வாக்கினர் - இந்தமுறைக்

உளகூ. கோட்டிபுரி கின்றார்முன் கோதற்ற நூன்முறையின்
வேட்டடியிற் பூசை விளைத்துவரம் - ஈட்டியநற்

அருளுவ ரோவென் றவள்ஐ யுறுதல்.

உஅ0. காமனை யிங்குக் கடிவரோ பூசைபுரி
சோமனைக் காதத் துணிவரோ - பூமலியக்

உஅக. காலிறைவன் றாவிக் களித்தலான் மெல்லவரும்
காலினை யிங்கே கழிப்பரோ - கோலவிமிற்

உஅஉ. சேவினிது பூசைபுரி செய்கையான் மற்றிங்குச்
சேவின் மணியைச் சிதர்ப்பரோ - பூவியப்ப

உஅங. ஆண்பெண்மை யாக்கினா ரப்பெண்ணை வாழன்றில்
மாண்பின்மை யாக மதிப்பரோ - காண்பினிய

---

உளஎ - அ. வதனமாகிய தாமரையும் கண்ணாகிய குவளையும் இரண்டு காலத்தும் முறையே குவிந்தும் விரிந்துமே இருக்கின்றன வென்பது இவற்றின் கருத்து; என்றது பொலிவற்ற முகமும் துயிலற்ற விழியும் உடையேனாயினேனென்றபடி.

உளகூ. கோட்டி - துன்பம்; "சிறிய, மங்கைதனைக் கோட்டி கொளல் வல்லமையோ" (தமிழ்விடு. 256.) நூல் - ஆகமநூல். அடி - திருவடி.

உஅ0. காமனை - மன்மதனை. காமன் பூசித்தது: காமீசம் (கண்ணி, கூரு) என்பதன் குறிப்பைப் பார்க்க. சோமன் - சந்திரன். சோமன் பூசித்தது: சோமீசம் (கூகூ) என்பதன் குறிப்பைப் பார்க்க.

உஅ0 - அக. காலிறைவன் - வாயுதேவன். மலியப்பூவைத்தூவி. வாயுபூசித்தது: செவ்வந்தீசம் (ருகூ) என்பதன் குறிப்பைப் பார்க்க. மெல்ல வரும் காலினை - தென்றலை. இமில் - விடையின் முதுகிலுள்ள ஒருவகைப் புடைப்பு.

உஅஉ. சே - ரிஷபம். இடபம் பூசித்துப் பேறுபெற்றது; கா. தழுவ. 105 - 7. சேவின்மணி - ஏற்றின் மணியை. பூ - பூமி.

உஅங. ஆண்பெண்மை ஆக்கினார் - ஆண்பனையைப் பெண்பனை யாகச் செய்வித்தார். ஆக்கிய இடம் திருவோத்தூர். ஓத்தூர் (எங) என்பதன் குறிப்பைப் பார்க்க. அப்பெண்ணை - அந்தப்பனையில்; அ: நெஞ்சறிசுட்டு. பனைமரம் அன்றிற்குரியது. காண்பு - காணுதற்கு. இக்கண்ணியோடு, "மன்றிற் பனைவடிவ மாற்றினா யப்பனைமே, லன்றிற்

உ௮௪. மாவடியின் வாழ்க்கை மருவிஞ ரம்மாவிற்
கூவு குயிலைக் குமைப்பரோ - ஆவதிவண்

உ௮௫. என்னேயென் றெண்ணத் திரங்கினே னங்ஙனே
கொன்னே யுறுதி குறிக்கொண்டேன் - முன்னே

அருள்புரி குவரேன் றவள்உளம் துணிதல்.

உ௮௬. அரிதாழ்ந் தயனோ டளிப்பவுல கேத்தி
அரியோ டுலகயனு மீன்றான் - கருடன்

உ௮௭. இகலோ டரவலைத்தா னேத்தியர வேத்திச்
சுகமே கருடவெனச் சொற்ற - திகவின்

உ௮௮. றிரணியன்பூ சிப்பவர மீந்தார்பூ சித்த
நரமடங்க ருக்க நயந்தார் - பரவியொரு

புள் வேறொருபுள் ளாக்காயோ" (தமிழ்விடு. 162) என்பது ஒப்பு நோக்கற்பாலது.

உ௮௪. மா அடியில் - மாமரத்தடியில். மாமரம் குயிற்குரியது; 'மாங்குயில்' என்பது வழக்கு.

உ௮௬. அரி தாழ்ந்து அயனோடு உலகு அளிப்ப - அரிவணங்கி அயனையும் உலகையும் அளிக்க; புண்ணிய கோடீசம் (௬௬) என்பதன் குறிப்பைப் பார்க்க. அயனும் ஏத்தி அரியோடு உலகை ஈன்றான்; சிவாத்தானம் (௬௧ - உ) என்பதன் குறிப்பைப் பார்க்க.

உ௮௬ - ௭. கருடன் ஏத்தி அரவு அலைத்தான் - கருடன் பூசித்துப் பாம்பை வருத்தினன்; முத்தீசம் (௬௭) என்பதன் குறிப்பைப் பார்க்க. அரவு ஏத்திச் சொற்றது; அரவு அருள்பெற்றது; பணாதரீசம் (௬௮ - ௯) என்பதன் குறிப்பைப் பார்க்க; 'ஏன் கருடா சுகமா' என்பது ஒரு பழமொழியாகவும் வழங்குகின்றது; "பன்ன கங்களை யணியெனத் தாங்கினன் பன்னகா பரணன்ற, னின்ன ருட்பெறு மதுகையான் மற்றவை யெந்தைபா லரியோடும், துன்னு வெம்பகைக் கலுழனைக் கலுழனே சுகங்கொலென் றஞ்சாமே, பன்னி மேன்மையின் விஞயின விம்மொழி பாரெலா மெடுத்தோதும்" (கா. பணாதரீச. 5); "பலியேல், கடவுளவிர்சடைமேற் கட்செவியஞ் சாதே, படர்சிறைய புள்ளரசைப் பார்த்து" (நன்னெறி, 9.) இகவு இன்று - பிரிவில்லாமல்.

உ௮௮. இரணியன் பூசித்து வரம் பெற்றனன்; ஆடகேசம் (௬௪) என்பதன் குறிப்பைப் பார்க்க. நரமடங்கல் - நரசிங்கம். தாக்க - இரணியனை வருத்த. நரமடங்கல் தாக்க வரம்பெற்றது: நாரசிங்கீசம் (௭௧) என்பதன் குறிப்பைப் பார்க்க.

உஅகூ. வாணன்பூ சிப்பநொச்சி வாயில்காத் தார்நேமிப்
பாணிபூ சிப்பவவன் பாடழித்தார் - மாணவரம்

உகூo. அந்தகன் பூசைக் களித்தா ரவனையொரு
மைந்தனைவிட் டாருயிரை வாங்கினார் - மைந்து

உகூக. சலந்தரன்பூ சிப்பத் தகவளித்தார் தாமே
சலந்தகவன் னுயிரைச் சாய்த்தார் - வலந்தொழுத

உகூஉ. கச்சபத்துக் கீந்தார் கடலலைப்ப வைங்கரற்கு
வெச்செனத் தாக்கும் விடைகொடுத்தார் - மச்சம்

உகூரு. நயக்கவர மீந்தார் நவைகண்டு வாட்கண்
புயக்கவொரு மைந்தனைப்போ வித்தார் - வியக்கவரம்

---

உஅகூ. வாணன் - வாணாசுரன். நொச்சி - மதில். வாணன் பூசித்து வாயில் காக்க வரம்பெற்றனன்; வாணீசம் (கூஅ) என்பதன் குறிப்பைப் பார்க்க. நேமிப்பாணி - சக்கரபாணியாகிய திருமால். அவன் பாடு - அந்த வாணாசுரன் பெருமையை. திருமால் வாணனை வென்றனர்; கா. வாணீசப். 75 - 6.

உகூ೦. அந்தகன் - அந்தகாசுரன். அந்தகன் பூசைக்கு வரமளித்தார்; அந்தகேசம் (கூஅ) என்பதன் குறிப்பைப் பார்க்க. ஒரு மைந்தனை - வைரவக் கடவுளை. வைரவக்கடவுள் அந்தகனைத் தடிந்தனர்; கா. அந்தகேசப். 28 - 30.

உகூ0 - கூக. மைந்து - வலியை. சலந்தரன் - சலந்தராசுரன். சலந்தரன் பூசித்து வலிபெற்றனன்; சலந்தரேசம் (கூஅ) என்பதன் குறிப்பைப் பார்க்க. சலம் தக - தணியாக் கோபம் பொருந்த. அன்னோன் - சலந்தராசுரன். சலந்தரனைச் சிவபிரான் தடிந்தனர்; கா. சலந்தரீசப். 23.

உகூக - உ. வலம் ஈந்தார் - வெற்றியை ஈந்தார். கச்சபம் - அவதார கூர்மம். கச்சபம் தொழ வலம் ஈந்தனர்; கச்சபேசம் (சுரு) என்பதன் குறிப்பைப் பார்க்க. ஐங்கரற்கு - விநாயகக் கடவுளுக்கு. வெச்சென - விரைவாக. தாக்கும் - கூர்மத்தைத் தாக்கும். விநாயகக் கடவுள் கச்சபத்தை வென்றனர்; கா. கச்சபேச. 5 - 6. மச்சம் - அவதார மீனம்.

உகூஉ - ரு. மச்சம் நயக்க வரம் ஈந்தனர்; மச்சநாதம் (எஉ) என்பதன் குறிப்பைப் பார்க்க. நவைகண்டு - அதன் குற்றத்தைக்கண்டு. புயக்க - பெயர்க்க; "புயக்கரிதோ வுலகமெனுஞ் சேற்றிடைப்போ யழுந்தியபுல் லறிவை யம்மா" (ஆனந்த. பதிற். 6); இச்சொல்லின்

உகூச. வன்றிக் களித்தார் மறலமருப் புப்பறித்தல்
வென்றிக் குமரற்கு மேவித்தார் - ஒன்றுவரம்

உகூரு. வாமனனுக் கீந்தார் வயக்கவயந் தண்டவனோர்
மாமகனுக் காக மகிழ்சிறந்தார் - நாம

உகூசா. நரமடங்கல் போற்றவர நல்கினார் மைந்தன்
சரபமெனத் தாக்கமகிழ் சார்ந்தார் - விரகவர்பால்

உகூஎ. இவ்வா றிருத்தலா லெண்ணி லடுத்தயர்ப்பின்
ஒவ்வாது சேட்படுத லுண்மையால் - எவ்வாறும்

உகூஅ. தீங்குபுரி மாரன் செழுந்திங்க ளாதியொரீஇப்
பாங்கெனக்கு நல்கப் படர்வரே - ஈங்கென்றும்

உகூகூ. இட்டசித்தி நாத ரெனவிருப்பார் மற்றெனக்கும்
இட்டசித்தி யாக்க விசைவரே - விட்டவொரு

---

பகுதி புய்யென்று பழைய நூல்களிற் காணப்படுகிறது. ஒருமகன் - ஐயனார். போவித்தார் - செலுத்தினார்; "போவிப்பம்" நல்வழி.

உகூங - ச. வன்றி - அவதார வராகம்; வன்றி - பன்றி; "வென்றி படர்நெடுங்கண் வேய்த்தோளீர் கூறீரோ, வன்றி படர்ந்த வழி" (தொல். களவு. சூ. 11, ந. மேற்.) வரம் அளித்தார். வரம் அளித்தது: வராகபுரம் (சுரு - சு) என்பதன் குறிப்பைப் பார்க்க. மறல - விரோதிப்ப. மருப்பு - அந்த வராகத்தின் கொம்பை. குமரற்கு - முருகக் கடவுளுக்கு. மேவித்தார் - மேவுவித்தார்; இடைக்குறை. ஒன்றுவரம் - ஒருவரத்தை; "ஒன்று தேரினால்" சீவக. 417.

உகூரு. வாமனனுக்கு வரம் ஈந்தனர்; அபிராமேச்சுரம் (சுக) என்பதன் குறிப்பைப் பார்க்க. அவன் கவசமும் தண்டமுமாக. மாமகன் - பைரவர்.

உகூசா. நரமடங்கல் - நரசிங்கம். மைந்தன் - வீரபத்திரக் கடவுள். நரமடங்கலுக்கு வரம் நல்கினர்; நாரசிங்கீச்சுரம் (எக) என்பதன் குறிப்பைப் பார்க்க. நரமடங்கலை வீரபத்திரர் வென்றனர். விரகு - தந்திரம்.

உகூஎ. சேட்படுதல் - நெடுந்தூரமாதல். தியானிப்பவர்களை அடுத்தலும் மறந்தவர்களைவிட்டு நீங்கியே போதலும் இறைவனுக்கு இயல்பு.

உகூஅ. ஒரீஇ - நீக்கி. பாங்கு - இன்பம். படர்வர் - நினைப்பார்; வருவாரெனலுமாம்.

உகூகூ. இட்டசித்தி - ஒருதலம்; சுசு - எ. இட்டசித்தி ஆக்க - விருப்பத்தை நிறைவேற்ற.

௩00. பூவுக்குங் கண்வாங்கும் புண்ணியனார் நொந்தவென
தாவிக்குங் காவ லமைப்பரே - மேவியிங்குப்

௩0க. பன்னாளும் வைகும் பயனூற்றம் மோடொன்று
எந்நாளும் வாழ்க்கை யிசைப்பரே - பன்னாளும்

என்பிழை காணார் என்றவள் கூறல்.

௩0௨. தீதிரண்டி னுமிங்குச் செய்திருந்தே னயிடினும்
தீதெவர்க்கு மிங்குத் திருப்பணியாய் - மேதகுமா

௩0௩. ருக்குவார் தம்மையுளத் தாக்கு மளியேற்கும்
ஆக்கி யணைய வமைவரே - போக்கென்

௩0௪. றறியாப் பருவத் தடிபிழைத்தே னேனும்
பிறியாக் கருணைப் பெருமான் - குறியாத

௩0௫. தக்கனிங்குச் சாரத் தவறு தவிர்த்தவற்கு
மிக்க தலைமை விளைத்திட்டார் - தொக்கதமக்

௩0௬. கன்பரைப் பாழ்மதத்தி லாழ்த்தினோர் நண்ணுதலும்
கொன்பெரும் பாவங் குறைத்திட்டார் - முன்பிருவர்

---

உகக - ௩00. விட்ட ஒரு பூவுக்கும் - அருச்சனையில் விடுபட்ட ஒரு தாமரைப்பூவுக்கு ஈடாக. கண் - திருமால் விழியை இங்கே கூறப்பட்ட செய்தி திருமாற்பேறு என்னுந்தலத்தில் நடைபெற்றது; ௫க. இங்கு - இக்காஞ்சித்தலத்தில்.

௩0க. காஞ்சியில் வைகுவோர் சிவத்தோடொன்றுவரென்பது புராண வரலாறு.

௩0௨. இரண்டு - புத்தி பூர்வம், அபுத்தி பூர்வம். தீதினைச் செய் திருந்தே னயிடினு மெனக் கூட்டுக; "மறந்து மறம்பிறழாக் காஞ்சி வளம்பதியின், அறிந்துசெய் தீவினையு மன்றி யெழுந்தனவும், பிறிந்து தவப்பயனென் றெண்ணில வாய்ப்பெருகி, அறம்பொரு ளின்பமெலா மாகவு நீயருள்வாய்" கா. தழுவ. 415.

௩0௩. போக்கு - குற்றம்.

௩0௪. பிறியா - பிரியாத.

௩0௫. தம்மை நீக்கி யாகஞ் செய்த குற்றத்தைப் போக்கித் தக்கனுக்கு அருள் செய்தனர்; தக்கேசம் (௬௧) என்பதைப் பார்க்க.

௩0௬. பாழ்மதத்தில் - பௌத்த மதத்தில். ஆழ்த்தினோர் - திருமாலும் நாரதரும்; கயிலாயம் (௬௪) என்பதைப் பார்க்க. கொன் - அச்சம். இருவர் - அயனும் அரியும்.

௩௦௭. யான்முதன்மை யான்முதன்மை யென்றிகந்தா ரெய்துதலும்,
தான்முதன்மை யென்னத் தவறழித்தார் - பான்மை

௩௦௮. திரிந்தொட் டகவடிவாய்ச் சேர்சனற்கு மாரற்
கரிந்துபிழை யெவ்வரமு மார்த்தார் - பிரிந்தவுளத்

௩௦௯. தாழிகடைந் துங்கடுவை யாரக் கொடுத்துமுற்ற
பீழையம ரர்க்குப் பிரித்திட்டார் - வாழிமுன்னர்த்

௩௧௦. தக்கனொடு கூடித் தவறிழைத்த விண்ணோர்கள்
தொக்கடைய நன்மைச் சுரப்பளித்தார் - மிக்கமர்த்த

௩௧௧. வாளவுணர்த் தாம்வெல்ல யாம்வென்று மென்றிகலி
ஆளமரர் சார வருள்கொழித்தார் - தோளிணைகள்

௩௧௨. கண்டுதீ நீவ வறைகூவுங் காழவுணன்
தொண்டூற மீட்டுநலந் தோற்றினார் - பண்டேவல்

௩௧௩. கண்டூ றுவணற்குக் காட்டாப் பிழையண்மி
விண்டேறு வாழவருள் வீக்கினார் - வண்டேதும்

---

௩௦௬ - ௭. இகந்தார் - வரம்பு கடந்தார். பான்மை - தன்மை. இருவர் இகந்தாராய் எய்தத் தவறழித்தார். மாலிங்கம் (௭௦) என்பதன் குறிப்பைப் பார்க்க.

௩௦௮. பிழை அரிந்து - பிழையை நீக்கி. ஆர்த்தார் - நிரப்பினார். பிரிந்த - தம்மை மறந்த.

௩௦௭ - ௮. சனற்குமாரற்கு ஒட்டகவடிவத்தைமாற்றினர்; கா. சனற்குமார.

௩௦௯. கடுவை - விடத்தை. பீழை - குற்றம். இக்கதையின் விரிவை மணிகண்டேச்சுரம் (௯௯) என்பதன் குறிப்பிற் பார்க்க. வாழி : அசைநிலை.

௩௧௦. தொக்கு அடைய - கூடிவர. தக்கனுடனிருந்த பாவத்தைத் தேவர்களுக்குப் போக்கி யருளினர்; கா. தக்கீச. 72 - 6.

௩௧௧. அவுணர்த்தாம் வெல்ல - அசுரரைத்தாம் (தேவர்) வெல்ல; அமரேசம் (௯௪) என்பதன் குறிப்பைப் பார்க்க.

௩௧௨. கண்டுதீ நீவ - தினவைப் போக்க. அறைகூவும் - போர் செய்தற் கழைத்த. காழ் அவுணன் - குற்றத்தையுடைய வாணாசுரன். தொண்டு ஊற - பணிவிடைகளை மிகுச் செய்ய; வாணீசம் (௯௮) என்பதன் குறிப்பைப் பார்க்க.

௩௧௨ - ௩. உவணற்கு - திருமாலின் ஊர்தியாகிய கருடனுக்கு. ஊறுகாட்டாப்பிழை அண்மி - இடையூற்றைச் செய்யாத குற்றம் முத

௲௧௪. தேங்கடப்பந் தாரான் றிருவருளி னேவலினை
நீங்கி யணையவரு ணீடினார் - ஓங்கல்

௲௧௫. மகள்வாள் விழிபுதைத்து வந்தடிமை செய்யத்
தகவாள் கலப்புத் தரித்தார் - இகவாத

௲௧௬. இத்தகைமை மிக்கார்மற் றென்னையுந் தண்ணருளின்
வைத்தடிமை கொள்ள மதிப்பரென - ஒத்தெழுந்தேன்

௲௧௭. தூதொருவர்க் காகத் துனைந்தார் தமையடுத்த
தூது வறிதாகச் சூழ்கலார் - ஆதலினால்

௲௧௮. தூதுவிடிற் பாணித்தல் சூழா ரெனத்துணிந்தேன்
போதுநெகிழ்த் தூதும் பொறிவண்டே - தாதளாய்ப்

களித்துறு வண்டை விளித்துப் புகழ்தல்.

௲௧௯. பில்குமது வுண்ணும் பிரமரமே மென்மலரின்
மல்கு மமளி மதுகரமே - நல்குமிசைக்

---

விற் செறியப்பட்டு. கட்டளையின்றி ஊறுசெய்தமையாற் குற்றத்தை இடபதேவர் அடைந்தனர். விண்டு - அக்குற்றத்தினின்றும் நீங்கி, தம்முடைய ஏவலாலன்றிக் கருடனை வருத்திய குற்றத்தை இடபதேவருக்குப் போக்கி யருளினர்; இடபதேவர் வழிபட்ட ஸ்தலம் இடபேசுவரமெனப்படும்; கா. தழுவ. 87 - 107.

௲௧௪. கடப்பந்தாரான் - முருகக் கடவுள். ஏவல் - பிரமதேவரைச் சிறையினின்றும் நீக்கும்படி இட்ட கட்டளை; சேனாபதீச்சுரம் (எ௪) என்பதன் குறிப்பைப் பார்க்க.

௲௧௪ - ௫. ஓங்கல் மகள் - உமாதேவியார். ஆள்கலப்பு - ஆளுங் கலப்பு; கா. தழுவ.

௲௧௬. 'என்னையும்' என்பது தலைவி தன்னைச் சுட்டிக் கூறியது.

௲௧௭. ஒருவர்க்கு - சுந்தர மூர்த்தி நாயனார்க்கு. ஒருவர்க்குத் தூதாக விரைந்து சென்றவர் தம்பால் வந்த தூது வீணே மீண்டு செல்ல நினையார்.

௲௧௮. பாணித்தல் - தாமதித்தல். சூழார் - கருதார். நெகிழ்த்து - நெகிழச் செய்து. போது நெகிழ்த்தூதும் பொறிவண்டு: "புதலும் வரிவண் டூதே வாய்நெகிழ்ந் தனவே" (குறுந். ௨௬௦: 1 - 2.) தாது அளாய் - பூந்தாதுக்களைக் கலந்து.

௲௧௯. பிரமரம், மதுகரம் - வண்டு. அமளி - படுக்கை.

௩௨0. கானம் பயிலுங் கருஞ்சுரும்பே பூஞ்சோலைத்
தானம் பயிலுந் தகைஞிமிறே - மானமிகு

௩௨௧. சிம்புளுக்கு மஞ்சாத் திறலரியே சீறிவரும்
வெம்பரிக்கு மஞ்சா விறற்றும்பி - வெம்புலிகள்

௩௨௨. தாக்குதற் கஞ்சாத் தனிமாவே குட்டிதழீஇ
ஊக்குதல்செய் யாத வுயர்மந்தி - ஏக்குலங்கள்

௩௨௩. தாங்கி யுகையாத சாகமே வில்லுதைப்பத்
தீங்கு புரியாச் சிலீமுகமே - ஓங்குரிமை

பிறபொருள் தூதிற் சிறவா வென்றல்.

௩௨௪. நெஞ்சத்தைத் தூண்டுவோ மென்னி னெடுவீதி
மஞ்சன் மணித்தேர் மருங்கெய்தி - என்செய்தி

௩௨ரு. கேட்கவெனத் தாழ்ந்து கிளப்ப முயன்றுபல்கால்
மீட்கப் பதமின்மை மேவலால் - தாட்கமலம்

---

௩௨0. கானம் - இசைப்பாட்டு. தானம் - இடம். ஞிமிறு - வண்டு.

௩௨௧. சிம்புள் - சரபப் பறவை; இது சிங்கத்தை வெல்லும் ஆற்றலையுடையது. அரி - வண்டு; சிங்கமென்பது மற்றொரு பொருள். வெம்பு அரிக்கும் - கோபிக்கின்ற சிங்கத்திற்கும்; அரி - சிங்கம். தும்பி - வண்டு. சிங்கத்திற்கும் அஞ்சாத யானையே யென்பது மற்றொரு பொருள்.

௩௨௧ - ௨. மா - வண்டு, குதிரை. குதிரை புலிக்கு அஞ்சும் இயல்பினது. குட்டிதழீஇ - குட்டியை மார்பில் தழுவிக்கொண்டு. ஊக்குதல் - தாவுதல்; "மகவுடை மந்திபோல, வகனுறத் தழீஇ" (குறுந். ௨௯: 6 - 7.) மந்தி - வண்டு, குரங்கு. ஏக்குலங்கள் - பாணத் தொகுதிகளை.

௩௨௩. உகையாத - செலுத்தாத. சாகம் - வண்டு, வில்; "சாகம் பொன்வரை யாகத் தானவர் மும்மதில் சாயவெய்து" (தே. திருக்கச் சியேகம்பம்.) சிலீமுகம் - வண்டு, அம்பு; "சாகஞ் சிலீமுகமுஞ் சார்ந் தன்றே" (௩௭௧) என்பர்பின்.

௩௨௪. நெஞ்சு தூதாக அனுப்பப்படும் பொருள்களுள் ஒன்று. மஞ்சன் - சிவபெருமான்; "தோணிபுரமேய மஞ்சனே", "கோட்டாற் றின் மஞ்சனே மணியே", "மஞ்சனே மணியுமானாய்" தே.

௩௨ரு. கேட்க என - கேட்டருள்கவென்று விண்ணப்பஞ்செய்து. தாழ்ந்து - தாமதித்து; வணங்கி யெனலுமாம்,

௩உசு. கண்டுகொண்டே யண்ணல் கவின்வீதி தோறுமுலாக்
கொண்டருளிக் கோயில் குறுகிமணி - மண்டும்

௩உஎ. உவளகத்திற் செல்ல வுடன்சென்ற தாங்கும்
இவறியது கூறவிட மின்றிக் - கவலுவதே

௩உஅ. போலுமத னலின்னும் போந்ததில்லை போந்திடினும்
மாலுவது மீட்டும் வழங்காதே - சாலவிங்கு

௩உகூ. நன்றுறுத்தப் போத னயந்தாலும் பல்புலனும்
சென்றுசென்று பற்றுதலுஞ் செய்யுமே - மன்றவங்கே

௩௩௦. பூண்டபெருங் காரியத்தைப் பொச்சாத் தலுங்கூடும்
மாண்டதன்று தூதுக்கு மற்றதுதான் - காண்டகைய

௩௩க. அன்னத்தைத் தூண்டின் மறையன்ன மன்றொருபொய்
சொன்ன பிழையாற் றெருகுமன்னம் - என்னவும்

௩௩உ. நம்பர் திருவுள்ள நாடுவன வல்லவன்றிக்
கொம்பனையாட் கன்னக் குருகன்றே - நம்பனுறும்

---

௩உரு - சு. பதம் - சமயம். தாள் கமலம் கண்டு கொண்டே - திருவடித் தாமரை மலர்களைத் தரிசித்துக் கொண்டே. மலரைக்கண்டு மகிழ்வது வண்டின் இயற்கை.

௩உஎ. உவளகம் - திருப்பள்ளியறை. செல்ல - சிவபெருமான் எழுந்தருள. இவறியது - சொல்ல விரும்பிய செய்தியை. இடம் - சமயம்.

௩உஎ - அ. கவலுவதே போலும் - கவலை யடைந்தது போலே தோற்றுகின்றது. போந்தது இல்லை - வரவில்லை. போந்திடினும் - வந்தாலும். மாலுவது - மயங்குவதாகும். வழங்காது - செல்லாது.

௩உகூ. போதலை நயந்தாலும். பல்புலன் - சத்தமுதலியவற்றை; பல இடங்களிலுமென்பது மற்றொரு பொருள். மன்ற - நிச்சயமாக.

௩௩௦. பொச்சாத்தல் - மறத்தல், சோரவிடுதல். அது தூதுக்கு மாண்டதன்று - அம்மனம் தூதுசெல்லுதற்கு மாட்சிமையுடையதன்று. மற்று, தான்: அசை நிலைகள்.

௩௩க. அன்னத்தை - அன்னப் பறவையை. மறையன்னம் - பிரமதேவராகிய அன்னம். பொய் - பரமசிவன் திருமுடியைக் கண்டதாகக் கூறிய பொய்ச் சொல்லை. "ஒண்கமலத், தன்னந் தனைவிடுப்பே னன்னந்தா னங்கவரை, இன்னந்தான் கண்டறியா தென்பரே" (106 - 7) என்பது தமிழ்விடுதூது. அன்னம் என்னவும் - எவ்வகை அன்னப் பறவைகளும்.

௩௩உ. நம்பர் - சிவபெருமான். கொம்பனையாட்கு - பூங்கொம்பை

௩௩௩. ஊர்தி யஃதிதனை யுய்த்தறியின் முற்றாமை
சார்வதுமுண்டு தகவன்றே - சீர்வதியும்

௩௩௪. கிள்ளையைத் தூண்டிற் கிளந்தவலா லங்குரைக்குக்
கொள்ளக் கிளவாத கொள்கைத்தே - ஒள்ளிழையாள்

௩௩௫. கைக்கிள்ளை யிக்கிள்ளை காணினுங் காரியந்தான்
பொய்க்கு மதுவும் பொருந்ாதே - மெய்க்குமொரு

௩௩௬. பூவையைப் போக்கிலது போநெறியிற் கண்டோர்கள்
மேவினர் பற்றின் விடுதியின்றே - மேவவொரு

௩௩௭. நன்புறவைத் தூண்டினது நாளுந்தூ துண்டொழிக்கும்
என்புறத்துத் தூதாக வெண்ணுமே - துன்பறியா

௩௩௮. அன்றில்குயி றென்ற லவைவிடின்மா றாப்பகையாய்
ஒன்றுவன தூதா யுதவுமே - அன்றியுங்கேள்

---

ஒத்த உமாதேவியாருக்கு. அன்னக்குருகன்றே - அன்னப்பறவை யன்றோ.

௩௩௩. ஊர்தி - வாகனமாகும். அஃது - அந்த அன்னமானது. இதனை - யான்விடும் அன்னத்தை. உய்த்து அறியின் - ஆராய்ந்து வினவி அறியுமாயின். முற்றாமை - காரியம் முடியாமை.

௩௩௪ - ௫. ஒள்ளிழையாள் - உமாதேவியாருடைய. உமாதேவியாரின் திருக்கரத்தில் கிளியிருத்தல்: "நங்கழ லடுத்தவர்க ணன்மை யிது போலத், தங்குவர்க ளென்றுழை தரித்தவரொ டொப்பப், பைங் கிளியை யங்கைகொடு பண்ணுரை பயிற்றுங், குங்கும சவுந்தரிதன் கோலமினை வாமால்" (பூவாளூர்ப். கடவுள். 4); "கதங்கொ ணீலிகைக் கிள்ளை" (தக்க. 608); "களங்கனி யென்றுமை கைக்கிளி பார்க் குங் கறைக் கண்டனே" (காசிக். 61.) கிளி யான் கூறியதையே கூறா நிற்கும். உரைக்கு - வினவிற்கு. பொய்க்கும்-முடிவு பெறாது. அதுவும் - அக்கிளியும். மெய்க்கும் - மெச்சப்படும்.

௩௩௬. பூவையை - நாகணவாய்ப்புள்ளை. மேவினர் - விரும்பி; முற்றெச்சம். விடுதி - விடப்படுதல்.

௩௩௭. புறவை - புறாவை. நாளும் - தினந்தோறும். தூது - பருக்கைக்கல்; "ஒண்டேதை யுண்புறவீர்" (மறைசை. 25); தௌத்திய மென்பது மற்றொரு பொருள்.

௩௩௮. அன்றிற் பறவையும் குயிலும் தென்றலும். பகையா யொன்றுவன - எனக்குப் பகையாக இருப்பவை. கேள் - கேட்பாயாக.

௩௩௯. எண்காற்புள் ளானுர்க் கிருகாற்பு ளெவ்வெவையும்
கண்காணுந் தூதாங் கடனிலவே - ஒண்காரைத்

௩௪0. தூண்டி னதன்செலவு சூழ்ந்துவரப் பாணித்தல்
வேண்டுமெத னுற்பிழையே மேவுமே - ஊண்டிகழும்

௩௪௧. காருவரி சொல்லோ கடுங்குரல் வாய்திறப்பின்
ஆரழலே சிந்து மவையன்றிச் - சீரரையன்

௩௪௨. வாகனமா யன்னுன் வழியேவ லாற்றுவது
வேக வளியெதிரின் மீள்வதே - போகவது

௩௪௩. செந்தமிழைச் செம்பொன்னைச் சேர்ப்பினவை தாஞ்செல்லா
பந்த முறக்கொடுபோம் பாலவே - முந்துய்த்தும்

௩௪௪. வேற்றொருவர் வாய்திறக்க வேண்டுமே யென்செய்கை
வேற்றொருவர் காணு விதியதே - கோற்றொடிக்கைப்

௩௪௫. பாங்கிமுத லோரைப் படர்விக்கப் பல்வழியும்
ஈங்கெனக்குச் சற்று மிசைவின்றே - ஈங்குரைத்த

---

௩௩௯. எண்காற் புள்ளானுர்க்கு - எட்டுக் கால்களையுடைய சரபப் புள் வடிவங்கொண்ட பரமசிவனுக்கு. இருகாற்புள் - மேற்கூறிய அன்னம் முதலியன. தூதாங்கடன் - தூதாதற்குரிய முறைமை. காரை - மேகத்தை.

௩௪0 - ௪௧. செலவு - செல்லுதல். சூழ்ந்து - சுற்றி. பாணித்தல் வேண்டும் - தாமதித்தல் வேண்டும். ஊண் உவரி - மேகத்தின் உணவு உவர்ப்பையுடைய கடல். கடுங்குரலென்றது இடியை; அதன் சொல் இடி. அழலென்றது மின்னலை; "கருங்கொண்மூ வாய்திறந்த மின்னு" (நாலடி. 8.) அரையன் - அரசன்; என்றது இந்திரனை.

௩௪௨. வளி - காற்று. அதுபோக - அதுகிடக்க.

௩௩௯ - ௪௨. மேகத்தாற் பயனில்லையென்றபடி.

௩௪௩. செந்தமிழையும் செம்பொன்னையும் சேர்ப்பின் - தூதாக விடின். அவை தாமே செல்லா; பிறர்கொண்டு போகும் இயல்பை யுடையன வென்றபடி. பந்தம் - தமிழுக்குத்தளையும் பொன்னுக்கு முடிப்புமாம். முந்து உய்த்தும் - திருமுன்பு சேர்ப்பித்தாலும்.

தமிழ்தூதாக விடப்படு மென்பது மதுரைச் சொக்கநாதர் தமிழ் விடு தூதாலும் பொன் தூதாக விடப்படுதல் பலவகைப்பட்ட பணவிடு தூதுகளாலும் அறியப்படும்.

௩௪௫. படர்விக்க - விடுக்க. பல்வழியும் - பலவுததாலும். இசைவு - உடன்பாடு. பாங்கியை அனுப்புதலில் தலைவிக்கு இசை

௩௪௬. பல்வகைய தூதும் பதனறிந்து சேய்நின்று
சொல்வகையி னன்றித் துணிபொருளை - நல்குவகை

அரியே தூதிற் குரிய தென்றல்.

௩௪௭. காட்டுவன வல்லவே கண்ணிய பூங்கடுக்கைத்
தோட்டலர்த் தாரிற் றுணைந்தேறி - வேட்டதிது

௩௪௮. நல்கெனமுன் னத்தி னவின்றருளி நாதனூர்
செல்கென மீள்வதுநின் செய்கையே - புல்குதவம்

௩௪௯. ஆற்றி மறையு மரவு மதியுமற்றும்
ஏற்ற மிருமணியா யேய்ந்திருக்கும் - நீற்றர்

௩௫௦. திருவுருவின் மீது திகழ்தெய்வத் தாரில்
மருவுதவ நீவளரா யேனும் - ஒருவினுயிர்

---

வின்மையின் காரணம், "எற்காகத் தூதர சன்புடை யேகி யிளங்கொடி நீ, அற்கா ரளகங் குலையமெய் வேர்வை யரும்பவந்தோ, பற்கா யமுநகத் தாறு நனியுறப் பட்டுநொந்தாய், நிற்கா முறைசெய்கைம் மாறுமுண் டோவிந்த நீணிலத்தே" என்ற வஞ்சப்புகழ்ச்சியணிச் செய்யுளாலும் உணரப்படும்.

௩௪௬. பதன் அறிந்து - சமயம் தெரிந்து. சேய்நின்று - தூரமான இடத்தில் நின்று. துணிபொருளை யென்றது மாலையை.

௩௪௭. கடுக்கைத் தாரில் - கொன்றை மாலையில். வேட்டது இது - தலைவி விரும்பியது இந்த மாலையைத்தான்.

௩௪௮. முன்னத்தின் - குறிப்பினால். நவின்றருளி யென்றது வண்டை ஊக்குவதற்கு. செல்க என - போவென்று அவர் கட்டளையிட.

௩௪௯. மறை - வேதம். அரவு - பாம்பு. மதி - சந்திரன். அணி - ஆபரணம். வேதங்கள் இத்தலத்தில் வழிபட்டு இறைவனுக்குச் சிலம்பாக அமைந்தன; அந்த இடம் வேதநூபுரமென வழங்கும்; மறைநூபுரம் (எ௩) என்பதன் குறிப்பைப் பார்க்க. அரவு அணியானமை, பணாதரேசம் (௬௮ - ௯) என்பதன் குறிப்பாலும், சந்திரன் வழிபட்டு அணியானமை சோமேசம் (௬௬) என்பதன் குறிப்பாலும் அறியப்படும்.

௩௫௦. தெய்வத்தாரில் - கொன்றை மாலையினிடத்தே. மருவு தவம் நீ வளராயேனும் - மருவுதற்குரிய தவத்தை நீ செய்யாதிருப்பினும்; என்றது தெய்வத்தாரில் வண்டு மொய்யாது என்று குறிப்பித்தபடி.

௫௱௧. ஆக்கைபொருண் மூன்று மளிக்கவென நேர்ந்தேற்கு
நீக்க மறுந்துணையாய் நேர்வதே - போக்கில்

௫௱௨. அரிய தவமா மகத்தீடு முற்றும்
பிரணவ மாகப் பிறங்கி - விரவுமணம்

௫௱௩. எண்டிசையும் போர்ப்ப விறைவரே போனுயர்வு
கொண்டநறுங் கொன்றைக் கொழுந்தாரில் - தண்டுளித்தேன்

௫௱௪. வாய்மடுத்துத் தேக்கெறிந்து மன்னுகளி மிக்குளர்ந்து
தாய்மறிந்து தாதளவித் தங்குநலம் - வேய்மதித்த

௫௱௫. தோளியொரு பாலார்பாற் றுன்னுமங்கே யும்பெறுவை
மீளி புரியினிங்கு மேவுவை - கேளளியே

---

௫௱ - ௧. உயிரும் ஆக்கையும் பொருளும்; 'உடல்பொருளாவி' என்பர். தம்முடைய உடல் முதலிய மூன்றும் அளித்தல் அடியார்களுடைய இயற்கை; "அன்றே யென்ற னாவியு முடலு முடைமை யெல்லாமுங், குன்றே யனையா யென்னையாட் கொண்ட போதே கொண்டிலையோ" (திருவாசகம்); "அம்பல வாண வடியே னுடன் முதலா, மருவிய மூன்றுங்கொண் டொன்றீ வதற்கு வருத்தமென்னே" (அம்பலவாண, கலம்.) போக்கு - குற்றம்; போதலுமாம்.

௫௱௨. அகத்தீடு - எண்ணம். முற்றும் - நிறைவேறும்.

௫௱௮ - ௯௨. நீ தவம் செய்யாதிருப்பினும் உடல் முதலிய மூன்றையும் இறைவனுக்கு உரிமையாக்குதற்குத் துணிந்த எனக்கு உபகாரம் செய்தலே உனக்குத் தவமாகும்.

௫௱௨ - ௫௱. கொன்றைமலர் பிரணவ வடிவமென்பது, "பிரணவத்தி னுரியபொருள் பிறரென்று பேசிடுவார், முரணவித்தற் காகமங்கண் முதலாய வேண்டுபவோ, கரணவிகற் பங்கடப்பாய் காலத்தமெண்ணிலகமமும், திரண்மிகுத்த செழுங்கொன்றை மாலிகைசேர் தாரக்கண்டும்" (நாகைக். புண்டரீக. முதற். 22) என்பதனாலும், அம்மரம் சிவபெருமான் போன்றதென்பது, "மன்றன்மலர்த் துணர்தூக்கி மருங்குதாழ் சடையார்போல், நின்றநறுங் கொன்றையினை" (பெரிய. ஆனாய. 21) என்பதனாலும் அறியலாகும்.

௫௱௪. வாய்மடுத்து - உண்டு. தேக்கெறிந்து - ஏப்பம்விட்டு; "திருந்துபெருஞ் சிவபோகக் கொழுந்தேறல் வாய்மடுத்துத் தேக்கிச் செம்மாந்து" (கா. கடவுள். 13.) தாய் - தாவி.

௫௱௪ - ௫. தங்குநலம் அங்கேயும் பெறுவை. மீளி - மீளுதல்; "மீளி யுரைத்தி வினையே னுரைப்பதென் மெல்லியற்கே" (திருச்சிற்.

நடுசு. தூ துவிடு வார்க டுணிந்தபொரு ளேயிசையும்
தூதுபுரி வார்க்குமெனிற் சொல்லுவதென் - நீதகவில்

நடுஎ. தோற்றுதலா னின்குலத்தைத் தூய்மைபடுத் தாயதுவும்
நோற்றதே நீயதன்பா னேக்குதலின் - ஏற்றுருவாய்

நடுஅ. மாயனணி தாங்கும் வரத னுருக்காணத்
தூயதிரு மேனி தொடநிகரின் - றுய

நடுகூ. அருள்பெரிதுந் தாங்கநின்போ லார்பெற்ருர் பெற்ருர்
மருள்சிறிதுந் தாங்கவா ராரே - தெருளளியே

நசுO. முன்னின்ப நின்னின்ப முற்றிய வென்னின்பம்
பின்னின்ப மன்றிப் பிறிதுண்டே - அன்னைநீ

நசுக. ஆதற் குரிமை யடுத்தலா னிற்றூது
போதற்க ணுக்கப் புகன்றனேன் - போதுற்றி

நசுஉ. வேட்ட பொழுதி னதுவாயே மேவினுய்
ஈட்டமிதன் மேலு மெனக்குண்டோ - பாட்டளியே

---

151.) இங்கும் மேவுவை - இங்கும் அடைவாய். அளியே கேள் - வண்டே கேட்பாயாக.

நடுசு. துணிந்த பொருளென்றது பூமாலையை. தூது புரிவார்க்கும் இசையுமெனிளெனக் கூட்டுக. நீ என்றது வண்டை.

நடுஎ. நீ தோன்றினமையால் உன்குலம் தூய்மையுற்றது. அதுவும் - அக்குலமும். ஏற்று உருவாய் - இடப வடிவமாய்.

நடுஅ. வரதன் - பரமசிவன். காணவும் தொடவும் தாங்கவும் பெற்றுய் நீ. நிகர் இன்று ஆய - ஒப்பில்லாததாகிய.

நடுகூ. பெற்ருர் வாரார். அளியே தெருள் - வண்டே தெளிவாயாக.

நசுO - சுக. தான் விரும்பிய திருமேனி தீண்டுதல் முதலியவற்றை வண்டு முதலிற் பெறுமாதலால், 'முன்னின்பம் நின்னின்பம்' என்ருள். வயிற்றிலிருக்கும் சிசு நுகர்வதற்கு முன்பே, உணவின் சாரத்தைத் தாய்நுகர்வதனுல் அன்னை நீயாதற்கு உரிமையையுடையை என்ருள். புகன்றனேன் - விரும்பினேன். போதுற்றி - நான் விரும்பிய அச்சமயத்தில் வந்தாய்.

நசுஉ. வேட்ட பொழுதின் - விரும்பிய பொழுதில்; "வேட்ட பொழுதி னவையவை போலுமே" (குறள். 1105.) ஈட்டம் - நிமித்தம்.

௩௯௩. தன்பெருமை தானறியாத் தன்மையன்போல் வையகத்து
நின்பெருமை நீயு நினைகலாய் - முன்பொருநாள்

௩௯௪. நின்னுருவங் கோடலா னன்றே நெடுவேலான்
முன்னிய வேத முழுதுணர்ந்தான் - நின்ன

## இலகுறு வண்டின் பலபெயர்ப் பெருமை.

௩௯௫. தரியெனு நாம மணிதலான் மாயன்
இரவி வலாரியிவர் முன்னோர் - பரசுகரத்

௩௯௬. தானந்த ருத்திரனுக் காளாய்ப் பணிபுரிந்து
வானந் தரிக்கும் வரம்பெற்றார் - மான

௩௯௭. மடங்கலும் பார்ப்பதிக்கு வாகனமா வையற்
கிடங்கொளணைக் காலா யியைந்தே - தொடங்கரிய

௩௯௮. எண்ணின்மிரு கக்குலமு மேத்து மரசுரிமை
மண்ணில் விரவி வயங்கிற்றே - கண்ணுதிறல்

௩௯௯. வாசுகி யாதியுநம் மன்ன னடிபோற்றி
ஆசையுல கம்பரித்தின் பார்ந்தனவே - பேசியநின்

---

௩௯௩. தன் பெருமை தானறியாத் தன்மையன் - இறைவன்.

௩௯௪. முருகவேள், வண்டு வடிவங் கொண்டு உமாதேவியின் கூந்தலிலிருந்து இறைவன் உபதேசித்த வேதப்பொருள் முழுவதையும் அறிந்தன ரென்பர்; "எந்தாயின், கொங்கலர் மைக்குழல் வாழ்பொறி வண்டே" முத்துக். செங்கீரை. 10.

௩௯௫ - ௬. அரியென்பது வண்டையன்றித் திருமால், சூரியன், இந்திரன் முதலியோரையும் உணர்த்தும். வலாரி - இந்திரன். பரசு - மழு. மானம் - பெருமை; மானமென்னும் குணமுமாம்.

௩௯௭ - ௮. உன் பெயராகிய அரியென்பதைத் தன் பெயராகப் பெற்ற சிங்கம், உமைக்கு வாகனமாதல் முதலான பயனை யடைந்து சிறப்பைப் பெற்றது; "வன்மா னுகைத்த கொடி" (தக்க. 76) என்பர். ஐயற்கு - இறைவனுக்கு. ஆதனத்தின் கால்கள் சிங்க வடிவமாகச் செய்யப்படும். மிருகராசனென்பது சிங்கத்தின் பெயர்களுளொன்று. கண்ணுதிறல் - கருதப்படும் வலியையுடைய.

௩௯௯. வாசுகி - ஒரு மகாநாகம்; ஆதி - அனந்தனென்னும் நாகம் முதலியவை. அரியென்று பாம்புக்கும் பெயருண்டு. ஆசை - திசைகள். திசையைப் பரிப்பவர் வாசுகி முதலியோர். உலகத்தைப் பரிப்பவன் ஆதிசேடன்.

௩எ௦. மந்தியெனு நாம மரீஇயன்றே நீமருவும்
கொந்தவிழ்கா வானரங்கள் கொண்டவே - உந்துபெயர்ச்

௩எக. சாகஞ் சிலீமுகஞ் சார்ந்தன்றே விற்கணையும்
வேகம் பகைக்கழித்து வீறுவதும் - நீகொள்

௩எ௨. அளியென்னு நாம மணிந்த கருணை
களியெவர்க்கு மாற்றுவது காண்டி - ஒளிர்தருநின்

௩எ௩. வண்டென்னு நாம மணிந்த வளைமகளிர்
தண்டளிர்க்கைச் சீரளிக்குந் தன்மைத்தே - வண்டேநின்

௩எ௪. நாமமே யண்மினர்க்கு நன்மை தருமென்றால்
நாமிநீ நல்கல் வியப்பேயோ - காமருநின்

அளிக்கும் அவட்கும் அமைந்துள உரிமை.

௩எ௫. எங்கும் வழங்கு மியற்பெயர்த்தெங் கையணியும்
நுங்குலமெங் கூந்த லுழைந்துளரும் - எங்கெவர்க்கும்

௩எ௬. கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை யெங்கண்ணின்
வண்ண நினக்குரிய வண்ணமே - கண்ணலமங்

---

௩எ௦. மந்தியென்று வண்டுக்கும் பெயர்; "குட்டிதழீஇ, ஊக்கு தல்செய்யாத வுயர்மந்தி" (௩௨௨) என்றார் முன்னும். மரீஇயன்றே - மருவியல்லவா.

௩எக. சாகம் - வண்டு, வில். சிலீமுகம் - வண்டு, அம்பு; ௩௨௩-ஆம் கண்ணியின் குறிப்பைப் பார்க்க.

௩எ௩. வண்டென்று வளையலுக்கும் பெயர்; "காமருநின், எங்கும் வழங்கு மியற்பெயர்த்தெங் கையணியும்", "நல்லளியே, நின்னியற்பேர் கொண்ட நிரைவளைகள்" (௩எ௪ - ௫, ௩அ௨ - ௩.) வளை: எழுவாய்.

௩எ௪. அண்மினர்க்கு - அடைந்தவர்க்கு. நாமி நீ - பெயரையுடையாயாகிய நீ. நல்கல் - நன்மையை அளித்தல்.

௩௬௪ - எ௪. உன்னுடைய பெயராகிய அரி முதலியவற்றுக்கே இவ்வளவு பெருமை யிருக்கையில், அப்பெயர்களையுடைய உனக்குத் தண்ணளி செய்தல் வியப்பன்று; இயல்பென்றபடி.

௩எ௪ - ௫. நின் இயற்பெயர்த்து - உன்னுடைய இயற்பெயரையுடையது. இயற்பெயர் வண்டென்பது. கையணி - வளை. எம்கையணி நின் இயற்பெயர்த்து.

௩எ௬. "கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை" (நான்மணி. 57); "கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை யாவதுங் காட்டியதே" (தஞ்சை. 4.)

௩எஎ. தாடு தொழிலு னைதேயங் கோடரியும்
கூடியநின் ஞமமெனக் கூறுவதே - பாடகத்தாள்

௩எஅ. எய்திய நூபுரங்க ளேங்க வவற்றுள்ளே
பெய்தது மந்தப் பெயருடைத்தே - ஐதுலகில்

௩எகூ. மிக்குரிமை யிவ்வா று வீறினேன் மிக்குணர்ந்த
தக்கவருஞ் சாற்றத் தகுமிஃதத் - தக்கவெனை

மண்டுதுன் பகற்ற வண்டுரித் தென்றல்.

௩அ௦. வில்லிற் குணமாய் விசித்தேற்றி நுங்குலத்தை
வெல்லத் தொடுத்து மெலிவிக்கும் - வல்லமத

௩அக. மார னுடற்ற வருந்தி யருங்கவலை
சாரவது நீபார்க்கத் தக்கதோ - வாரமென்ப

௩அஉ. தல்ல லடையி னலர்விழிக்கு வாரிமைபோல்
மெல்லுடைக்குக் கைபோல் விரைவதன்றோ - நல்லளியே

௩அ௩. நின்னியற்பேர் கொண்ட நிரைவளைக ளென்கையில்
நின்னையன்றி யாரே நிறுத்துவார் - அன்னோநின்

---

மகளிர் கண்களுக்கு வண்டு உவமமாகக் கூறப்படும்.

௩எகூ - எ. கண் அலமந்து - கண்கள் சுழன்று. ஓடு அரி - ஓடுகின்ற இரேகை. நின் நாமம் அரியென்பது. பாடகம் - மகளிருடைய ஒருவகைக் காலணி.

௩எஅ. நூபுரங்கள் - சிலம்புகள். உள்ளே பெய்தது பரல். அதற்கும் அரியென்ற பெயர் உண்டு.

௩எகூ. உரிமை வீறினேன். அத்தக்க எனை - அங்ஙனம் உரிமையுள்ள என்னை.

௩அ௦. குணமாய் - நாணாகி. நும் குலத்தை வில்லிற் குணமாய் விசித்தேற்றி யென்க. என்னை வெல்லவென ஒருசொல் வருவிக்க.

௩அக. வாரமென்பது - அன்பென்று சொல்லப்படுவது.

௩அஉ. அலர்விழிக்கு இமை பாதுகாப்பென்பது, "மன்னன் மைந்தர்கள், கண்ணினைக் காக்கின்ற விமையிற் காத்தனர்" (கம்ப. வேள்வி. 41) என்பதிலும், உடைக்குக் கை பாதுகாப்பென்பது "உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே, இடுக்கண் களைவதா நட்பு" (குறள். 788) என்பதிலும் அமைந்துள்ளன.

௩அ௩. இயற்பேர் வண்டென்பது. வளையலுக்கும் வண்டென்று ஒரு பெயருண்டு; ௩எ௩, ௩கூக - ஆம் கண்ணிகளைப் பார்க்க. அன்னோ - ஐயோ.

௩௮௪. றன்னுருவம் போலுந் தடங்கண் பொழிபுனனின்
றன்னையன்றி யாவர் தவிர்த்திடுவார் - மின்னனையார்

௩௮௫. மேனி திதலை விழைவவெனப் பூத்தகணி
கானிவர் சண்பகமுங் காலுழக்காய் - ஆன

௩௮௬. உரியைநீ யல்லாலெ ஞெள்ளிய மேனி
நெரிதிதலை யாரே நிறுப்பார் - விரிநீழல்

௩௮௭. மாவிற் பலாசில் வளர்கூ விளத்தினறும்
பூவின் மதுவுண்ணப் புக்குலாய் - மேவுதொறும்

௩௮௮. தன்னை வலம்புரிந்த தென்று தவமாக்கும்
மன்னனைநீ யண்ம மகிழ்வாயே - துன்னி

௩௮௯. இரப்ப தரிதா லிரப்பி னிரந்த
சுரப்பதின்மேற் றேல்லுலகிற் சீர்த்தி - நிரப்பதில்லை

௩௯௦. அத்தகு சீர்த்தி யளிக்கலான் மேவாமை
பைத்த பெரும்பார் பகருமே - எத்திறத்தும்

௩௯௧. வண்டங்கே செல்லின் மதுமலர்த்தார் மன்னவனுர்
வண்டிங்கே நல்க மதிப்பரே - மண்டி

---

௩௮௩ - ௪. கண்ணுக்கு வண்டு உவமை.

௩௮௫. திதலை - தேமல்; அது பொன்னிற முடையது. விழைவ - ஒப்பன. கணி - வேங்கை மரம். மேனியும் திதலையும் ஒப்பன. கான் இவர்-வாசனைமிக்க. வேங்கைப்பூவும் சண்பகப்பூவும் பசலைக்கும் மேனிக்கும் முறையே உவமை. அவ்விரண்டு பூக்களிலும் வண்டுகள் செல்லா.

௩௮௭. மா - மாமரம். பலாசு - புரசமரம். கூவிளம் - வில்வமரம். மா, பலாசு, கூவிளம் ஆகிய இவை முறையே ஏகாம்பரேசருக்கும், கச்சபேசருக்கும், கச்சிக்காரோணநாதருக்கும் நிழலளிப்பவை.

௩௮௮. அண்ம - அடைய.

௩௮௯. இரந்த - யாசித்த பொருள்களை. சுரப்பது - அன்புமிகுந்து அளித்தல்; "உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன், றீவார்மே னிற்கும் புகழ்" (குறள். 232.) சீர்த்தி - மிகுபுகழ். நிரப்பது - பூர்த்தி செய்வது.

௩௯௦. அளி - வண்டு, கருணை. கருணையாலேயே மிகுபுகழ் உண்டாகு மென்றபடி. பைத்த - விரிந்த. பார் - பூமியிலுள்ளவர்கள்.

௩௯௧. இங்கே வண்டு நல்க - எனக்கு வளையலை அளித்தற்கு; இங்கு: தன்மையை யுணர்த்திற்று.

௫௯௨. முருகா ரளியங்கே முன்னிறற் செம்மல்
பெருகா ரளிபெறுவ தூண்டே - மருவுபொறி

௫௯௩. வாளரி யங்கே மருவின் வெதும்பிவிழும்
நீளரிக் கண்ணீர் நிகழாதே - கோளில்

௫௯௪. மதுகர மங்கே வழங்கினுயிர் வேவ
விதுகரம் வெப்புவிளை யாதே - கதுவலுறச்

௫௯௫. சஞ்சரிக மங்கே தலைப்பட்டா லென்கரங்கள்
அஞ்சரி கங்கணங்க ளாருமே - விஞ்சலுறும்

௫௯௬. சஞ்சா யகமங்குச் சார்ந்தாற் றிறன்மாரன்
வெஞ்சா யகமிங்கு மேவாதே - அஞ்சாச்

௫௯௭. சுரும்படரி னங்கே சுரும்பிவர்வார் வில்லின்
பெரும்படரி னங்கம்பீ றாதே - விரும்பி

௫௯௮. ஒருமந்தி யங்கே யுறினழலிற் சீறி
வருமந்தி மாருதம்வாட் டாவே - பொருவில்

---

௫௯௨. முருகு ஆர் - கள்ளை நுகர்கின்ற. செம்மல் பெருகு அளி-தலைவருடைய பெருகிய பெறுதற்கரிய கருணையை.

௫௯௩. வாள் அரி - ஒளியையுடைய வண்டு. துயரக்கண்ணீர் வெப்பமுள்ளதென்பதை, உடுக - ஆம் கண்ணிக்குறிப்பாலுணர்க. கோள் இல் - குற்றமில்லாத.

௫௯௪. மதுகரம் - வண்டு. வழங்கின் - சென்றால். விது கரம் - சந்திரகிரணம்; நிலா. உயிர்வேவ விதுகரம் வெப்பு விளையாதென இயைக்க.

௫௯௫. சஞ்சரிகம் - வண்டு. அம் சரி கங்கணங்கள் - அழகிய சரியும் கங்கணங்களும்; சரி - ஒருவகை வளை.

௫௯௬. சஞ்சாயகம் - வண்டு; இப்பெயர் சஞ்சாளிக மென்று நிகண்டுகளிலுள்ளது. மாரன் வெம் சாயகம் - மன்மதனுடைய வெவ்விய அம்பு.

௫௯௭. அங்கே சுரும்பு அடரின்; சுரும்பு - வண்டு. சுரும்பு இவர் வார் - வண்டு பரவியிருக்கின்ற நாணையுடைய; வார் - கயிறு; இங்கே நாண். படரின் - வில்லாலுண்டாகிய துன்பத்தால்.

௫௯௮. மந்தி - வண்டு; கண்ணி, ௫௭0. அந்தி மாருதம் - அந்திக் காலமும் தென்றற்காற்றும்; 'வாட்டாதே' என்னும் பாடத்திற்கு அந்திக்காலத்தில் வரும் மாருதமென்க.

௩௯௯. பிரமரங்க ணல்கிப் பெயரிஞ னந்தப்
பரமரங்க ணல்குபய னுண்டே - கரிசில்

௪00. வரிஞிமிறு செல்லின் மணிமுலைக்குச் சாந்திங்
குரிஞிமிறு கத்துற்ற தாமே - உரிய

௪0௧. அறுகாற் பறவை யடுப்பினிரண் டென்னப்
பெறுகாற் பறவைபிழை யாவென் - றறுகாதல்

௪0௨. மல்க விரந்தேன் வறங்கூரா மேசேறல்
நல்குகட னென்று நயப்பாயே - நல்கி

மங்கையர் பால்அருள் சங்கரற் குண்டெனல்.

௪0௩. இலளிதைக்கு மூவரையு மீனவர மீந்தார்
பலருடனும் புக்கமரும் பண்டன் - உலையப்

௪0௪. புரியமர்மிக் காற்றிப் புகல்காம நல்கல்
திரிபுர சுந்தரிக்குச் செய்தார் - வரைமாதின்

---

௩௯௯. பிரமரங்கள் - வண்டுகள். நல்கி - தண்ணளி செய்து. ஆனந்தப் பரமர் - ஆனந்த ருத்திரேசர். அங்கண் நல்குபயன்.

௪00. ஞிமிறு - வண்டு. சாந்து இங்கு உரிஞி - சந்தனக் குழம்பு என்பாற் பூசப்பெற்று. மிறுகத்துற்றது - கஸ்தூரி; மிறுகம் - மான்; வடமொழி ஏழாமுயிராகிய ருவென்பதும், மெய்யாகிய ரகரமும் தமிழில் றகரமாக வருமென்பது தக்கயாகப்பரணி உரையாசிரியர் கொள்கை.

௪0௧. அறுகாற் பறவை - வண்டு; "அறுகாற் பறவை யளவில மொய்த்தலின்" (நற். ௫௫ : 5.) இரண்டென்னப் பெறுகாற் பறவை - குயில், அன்றில் முதலியவை. இருகாற் பறவை என்னை வருத்தா என்றபடி.

௪0௨. வறம் கூராமே - வறுமை மிகாமல். சேறல் நல்கு கடன் - நாம் செல்லுதலே உதவி செய்யுங் கடப்பாடு ஆகும். நல்கி - தண்ணளி செய்து.

**இனிப் பெண்பாலார்க்கு இறைவன் அருள் புரிந்தமை கூறப்படுகின்றது.**

௪0௩. இலளிதைக்கு - லளிதாதேவிக்கு. மூவரையும் - பிரமன் முதலான மூன்று மூர்த்திகளையும். கா. திருவேகம்ப. 6 - ஆம் பாடல் முதலியவற்றைப் பார்க்க.

௪0௩ - ௪. பண்டனென்னும் அசுரன் உலையும்படி. புகல்காமம் - விரும்பிய பொருளை. ௪௯௨ - ஆம் கண்ணி முதலியவற்றையும், கா. கச்சிமயானப் படலத்தையும் பார்க்க.

சOரு. பூங்கரத்துக் காப்புக் கடகம் புணர்த்தினர்
ஆங்கவள்வீழ்ந் தேததழுவ வாக்கினர் - பாங்கவடான்

சOசு. மஞ்சணீ ராடவது வார்ந்தொழுக வக்கரையில்
மஞ்சணீர்க் கூத்தரென வைகினர் - வஞ்சியவள்

சOஎ. நீக்கிய கோசமென நின்றகன்னி தன்னையுமில்
ஆக்கிநகர் காவ லருளினர் - மாக்கருங்கண்

சOஅ. மங்களை வேட்ட வரமளித்தார் காளிக்குப்
பொங்குகட ருக்கும் பொலிவளித்தார் - மங்கைசிறை

சOகூ. மீள விராமற்கு வீரமளித் தாரணங்காய்
ஆள விரேணுகைக்கன் பாக்கினர் - நீளும்

சகO. சிறைகருடன் றாய்க்கொழிப்பச் செய்தார்சா பத்தின்
மிறைதிருமா துக்குமையால் வீத்தார் - மறையவனே

சOச - ரு. வரைமாதின் - உமாதேவியாருடைய. காப்புக் கடகம் - காப்பையும் கடகத்தையும். புணர்த்தினர் - சேர்த்தார்; கா. தழுவ. 132 - 3 - ஆங்கவிகளைப் பார்க்க. வீழ்ந்து - விரும்பி. அவள் தான் - உமாதேவியார்.

சOசு. அது - அம்மஞ்சள் நீர். அக்கரையில் - மஞ்சள் நீர் நதிக் கரையில். மஞ்சள் நீர்க்கூத்தர், சித்தர்களாற் பூசிக்கப் பெற்றமையின் சித்தீசரெனவும் வழங்கப் பெற்றனர்; கா. சித்தீச. 2 - 3.

சOஎ. கோசம் - சட்டை. கன்னி - கௌசிகை. இல்லாக்கி - மனைவியாகச் செய்து; கா. கண்ணீசப். 10-11 - ஆம் செய்யுட்களையும், திருமண. 80 - ஆம் செய்யுளையும் பார்க்க. காவல் - காஞ்சி நகரத்தைக் காத்துக் கொண்டிருத்தல். அவள் வழிபட்டதலம் கவுசிகேச்சரமெனப்படும்; அதனைத் தொக்கீசமென்பர், பழைய காஞ்சிப்புராணமுடையார்.

சOஅ. மங்களை-உமாதேவியாரின் பாங்கி. அவள் வழிபட்டதலம் மங்களீசமென்று கூறப்படும்; கா. மாசாத்தன். 35 - ஆம் செய்யுளைப் பார்க்க. காளிக்குக் கடல்தாக்கும் பொலிவளித்த செய்தி உருச - ரு - ஆங் கண்ணிகளாலும், கா. கழுவாய். 418 - 21 - ஆம் செய்யுட்களாலும் அறியலாகும். மங்கை சிறை - சீதையின் சிறையை.

சOஅ - கூ. இராமனுக்கு வீரமளித்தனர்; கா. வீர. இரேணுகை - இரேணுகாதேவி; இரேணுகைக்கு அருள் செய்தமை: கா. இரேணு.

சகO. கருடன் தாய் - வினதை. அவளுக்குச் சிறையை யொழித்ததை, கா. முத்தீசப்படத்தாலுணர்க. சாபத்தின் மிறை - சாபத்தால்

சகக. டேிய வாணி யுறவாக்கி ணர்பெண்மை
கூடிய மாலேக் குறித்தணைந்தார் - நாடிய

சகஉ. மாண்டுகன்னு மாமுனியால் வானை யரம்பையர்கட்
கீண்டிய போக மியைவித்தார் - நீண்டவருள்

சகந. கண்டு றுரையார்க்கே கைகொடுப்பா ரன்னவர்பாற்
பெண்டு செல்லவெவர் பெட்கலார் - வண்டே

சகச. மிஞிறே யளியே விளரியரி யேநின்
மிஞிறுஞிமி றுக விளங்க - இமிழ்கின்ற

களிக்கும் முகமன் அளிக்குக் கூறல்.

சகரு. வைசாகி வைகாசி வாய்ந்த பறையலகே
ஐதாம் பலகறையென் றுனவே - மைதீரும்

---

உண்டாகிய நடுக்கம். திருமாதின் சாபத்தை நீக்கியது, கா. வீராட்ட. 46-ஆம் செய்யுளாலுணரப்படும். வீத்தார்-நீக்கினர். மறையவனோடு-பிரமதேவனோடு.

சக0 - கக. மறையவனோடு வாணியை உறவாக்கினர்; கா. ஆதீப. சிவாத்தானப். பெண்மை கூடிய மாலே - பெண் வடிவங் கொண்ட திருமாலே; என்றது மோகினியை; கா. மாசாத்தன்.

சகஉ. வான் ஐ அரம்பையர்க்கு - வானுலகிலுள்ள ஐந்து அரம்பையர்களுக்கு; கண்ணி, எக; கா. சகோதர. 2 - 6.

சகஉ - ந. கண்டு - தரிசித்து. கண்டு ஊறு உரையார்க்கே அருள் கொடுப்பார். எவர் பெட்கலார் - யார் விரும்பார். தம்முடைய குறைகளை விண்ணப்பியாதவர்களுக்கே அவற்றைப் போக்கி அருள் செய்யும் ஆனந்தருத்திரேசர் தூது வாயிலாகத் தம் குறையைத் தெரிவிப்பின் அருள் புரிவது நிச்சய மென்றாள்.

சகச. இது முதல் சஉக - ஆம் கண்ணி வரையில் ஒரு தொடர். வண்டைப் புனைந்து கூறுகின்றவள் அதன் ஒரு பெயரிலுள்ள எழுத்துக்கள் நிலைமாறினமையாற் பிறபொருள்களின் பெயர்களிலுள்ள எழுத்துக்கள் முதலியனவும் அங்ஙனமே மாறின வென்கிறாள்.

விளரி - இரங்கற்பண்; "விளரியெடுத் தோது" (சருஉ) என்பர் பின். உன் பெயராகிய மிஞிறென்பதிலுள்ள எழுத்துக்கள் நிலைமாறி ஞிமிறென்று வந்தமையால் பிறபொருட் பெயர்களும் அங்ஙனமே மாறுதலுற்றன.

சகரு. வைசாகி - விசாக நட்சத்திர சம்பந்தமுடையதாகிய இரண்டாவது மாதம். பறையலகு - சோழி; "பறையல கன்ன வெண்

சகசு. நீர்க்கீழ் நகர்ப்புறங்கீழ் நீரே புறநகரே
சேர்க்குமின்முன் முன்றிலெனச் சேர்ந்தவே - பார்க்கண்

சகஎ. இருந்தா னிருந்தானே பார்க்க ணெழுந்து
திரிந்தான் றிரிந்தா னெழுந்தென் - றிருந்தனவே

சகஅ. தத்தந் திணைக்குரிமை சாற்றுகரு வும்பொழுதும்
ஒத்து முறழ்ந்து முறுவனவே - வைத்தபொருள்

சகசு. வெண்பா முதனான்கும் வேதியர்முன் னோர்நால்வர்
ஒண்பாவென் றோத லுறழ்ந்தனவே - ஒண்பாத்

சஉ௦. தளைமுதலுந் தம்மு ளுறழ்ந்தனவே காவி
ஒளிர்மதியொண் காம விதியே - வளரும்

---

பற் பசுங்கழற் குண்டு பைங்கண், உறுதுயர் நரகர்" (சீவக. 2773) என்பதும், 'பறையலகு இக்காலத்துப் பலகறையென மருவிற்று' என்னும் அதனுரையும் இங்கே அறியற்பாலன.

இவை எழுத்து மாறல்.

சகசு. நீர்க்கீழென்பது கீழ்நீரெனவும், நகர்ப்புற மென்பது புறநகரெனவும், இல்முனென்பது முன்றிலெனவும் நிலைமாறின; "கீழ்நீர்ச் செவ்வரும்பு" முருகு. 29.

இவை சொல் மாறல்.

சகசு - எ. இவற்றிலுள்ள வாக்கியங்களிரண்டும் இலக்கண நூல்களின் உரைகளிற் காணப்படுகின்றன.

சகஅ. உறழ்ந்து - மாறுபட்டு. ஒரு திணைக்குரிய கருப்பொருளும் பொழுதும், ஏனைத்திணைக்கு முரியனவாய் மயங்கி வருதல், "எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்" (தொல். அகத்திணை. சூ. 19) என்பதனாலும் அதனுரைகளாலும் அறியலாகும்.

இவை பொருள் நிலைமாறல்.

பொருள் வைத்த வென மாறுக.

சகசு. வெண்பா முதலிய நான்கும் அந்தணர் முதலிய நால்வர்க்கும் உரியவென்பர்; இதனை "வெண்பா முதலாக வேதிய ராதியா", "வெண்பா முதலா நால்வகைப் பாவும், எஞ்சா நால்வகை வருணம் போல" (யா. வி. மேற்.) என்பவற்றால் அறியலாகும். உறழ்ந்தன - மாறி வந்தன.

சகசு - உ௦. ஒரு பாவிற்கே உரிய சீர்தளை முதலியனவும் வேறு பாக்களில் விரவி வந்துள்ளன வென்பது இங்கே அறியற்பாலது

இவை யாப்பு நிலைமாறல்.

சஉக. துடிகனியே தோமி றுகடினியே யான
படியேநீ யெத்தொழிலைப் பார்த்துப் - பிடிசெயினும்

சஉஉ. அண்ண லருளு மதுவே நெறியாக
நண்ணுமது போனலக்கு மாயினும் - மண்ணவர்க்குக்

சஉங. கீழாக வைத்த கிளர்தொழில்சற் றும்புரியாய்
வீழாக மேற்றொழிலு மேவாயே - வாழாகப்

சஉச. பூவிலிருந் தூது முறைபுரித லேயன்றி
மேவு மரசுரிமை மேவாயே - தாவிலாச்

சஉரு. சந்திசைவ தல்லாற் றகுபயனுண் டாமேனும்
கொந்துபடு மத்தியிவர் கோளிலாய் - எந்திடத்தும்

---

சஉ0 - உக. காவிமதி யென்பன காமவிதி யென்றும், துடிகனி யென்பன துகடினி யென்றும் வந்தன ; இவை அணியிலக்கணத்துள்ள ஒருவகை நிரனிறை ; "காமவிதி கண்முக மென்மருங்குற் செய்ய வாய், தோமி றுகடினி சொல்லமிர்தம்" யா - வி. சூ. 95. மேற்.

இவை அணியிலுள்ள நிலைமாறல்.

சஉஉ. நலக்குமாயினும் - நன்மையைச் செய்யுமாயினும்.

சஉக - உ. வண்டே! நீ எத்தொழிலைக் கைப்பற்றினும் அண்ணலுடைய அருளும் அதுவாகவே நண்ணும்.

சஉங. வீழாக - விருப்பமாக ; வீழ் - விருப்பம். வாழாக - வாழுமிடமாக.

இனி வண்டை நோக்கிச் சமநிலையுடையா யென்கிறாள்.

சஉச. பூவில் இருந்தூது முறை புரிதல் - மலர்களிலிருந்து ஊதும் முறைமையைச் செய்தல்; பூமியின் கண்ணே யிருந்து தூது செல்லு முறைமையைச் செய்த லென்பது மற்றொரு பொருள். அரசுரிமை - அரசாட்சி ; அரச மரத்தினுரிமை யென்பது மற்றொரு பொருள். மேவாய் - விரும்பாய், அடையாய். அரசு பூவில்லா மரமாத லால், அதன்பால் வண்டு செல்லா தென்பது.

சஉரு. சந்து இசைவ தல்லால் - இருவரைச் சமாதானம் செய் வித்தற்கு உடன்படுவாயே யல்லாமல் ; சந்தன மரத்தின் கண்ணே பொருந்துவதல்லாம லென்பது மற்றொரு பொருள். பயன் - பிரயோச னம், பால். கொந்து படும் அத்தி இவர் கோள் இலாய் - அங்குசத்தாற் கொத்தப்படும் யானையின் மேலேறும் கொள்கை யில்லாய் ; காய்க் கொத்துக்கள் தோன்றும் அத்தி மரத்திலேறுங் கொள்கை யில்லா யென்பது மற்றொரு பொருள். அத்தி மரம் பூவில்லாததாகலின், வண்டு அதனிடம் செல்லாது. எந்திடத்தும் - எந்த இடத்தும் ;

சஉசு. வாசந்தி யென்பாரை யன்றிநீ போதியென்பார்
பேசுந் திருவேதும் பேணிலாய் - ஆசில்

சஉஎ. கரவீரங் கொண்டு கதழ்வாய்மற் றுங்கே
விரவாக் கணியோர்ந்து மேவாய் - பரவாம்பல்

சஉஅ. அம்போ ருகத்தா ரமர்வா யுயர்வேனும்
வம்போடு கோளி மருவுகிலாய் - நம்பும்

சஉகூ. குவலயநீ வேண்டிற் குறிக்குமுனந் தாட்கீழ்
அவலமற வாவதே யன்றோ - கவலையற

சநூ0. நாகம் புகுவாயந் நாகந் துறந்துரிய
சோகம் படர்வாய் துறையனைத்தும் - நீகண்டு

---

"பொய்குன்ற வேதிய ரோதிட முந்நிடம்" (திருச்சிற். 223) என்பது போல வந்தது.

சஉசு. வா - வருவாய். சந்தி - சந்திப்பாய். என்பாரையன்றி - என்பவரைப் பேணுவாயே யல்லாமல். வாசந்தி - ஒருமரம். போதி யென்பார் - போவென்று சொல்லுபவர்; போதி - அரசமரம். அரச மரத்தினிடம் வண்டு செல்லாதென்பது இங்கே அறியத் தக்கது.

சஉச - சு. வண்டு தூது சென்று காரியத்தை முடித்துக்கொண்டு வருதலில் ஆற்றலுடைய தென்பது இக்கண்ணிகளால் விளக்கப்பட்டது.

சஉஎ. கரவீரம் கொண்டு - கை வீரத்தைக் கொண்டு; கரவீரம் - அலரிப்பூ. கணி - சோதிடன்; வேங்கைமரம். இதில் வண்டு செல்லாது.

சஉஎ - அ. ஆம்பல் அம்போருகத்தார் அமர்வாய் - யானையின் அழகிய போர் கெடும்படி முன் படையில் தங்குவாய்; ஆம்பல் தாமரை யென்பவற்றின் பூக்களில் அமர்வாய்; தார் - பூ; "தார்மாலை மார்ப" யா. கா. மேற்.

சஉஅ. வம்போடு கோளி மருவுகிலாய் - வம்பும் கோளும் உடைய வனை அடையாய். வம்பு ஓடு கோளி - வாசனை ஒழிந்த ஆலமரம்; இது பூவாது காய்க்கும் மரமாதலின் இதில் வண்டு செல்லாது.

சஉகூ. குவலயத்தை நீ விரும்பினால் அஃது உன் அடிக் கீழ தாகும்; குவலயம் - பூமி, நீலோற்பலம்.

சநூ0. நாகம் - தேவலோகம், ஒருவகை மலர் மரம். துறந்துரிய சோகம் - துறவுற்று உரிமையுள்ள சோகமின்மையை; அசோக மரத்தி லென்பது மற்றொரு பொருள். உரிய: யகரம் தொகுத்தல். படர்தல் - நினைத்தல், செல்லல், துறை - அகப்பொருட்டுறை, நீர்த்துறை.

சஙக. நீத்தவே யன்றோ நிகர்ப்பாரார் நின்னையினி
ஆத்தனுக்கு நின்போ லடுத்தாரார் - மூத்தபெரும்
சஙஉ. தேவரு நின்னைச் சிரமேற்கொள் வாரென்னின்
யாவரே நின்னை யிகப்புறுவார் - போவதுசெய்

சாற்றுறும் வண்டை ஆற்றுப் படுத்தல்.

சஙங. தங்கங்கே பல்பொழிலு மங்கங்கே பல்கயமும்
அங்கங் கமரர்கள்பூங் கோயிலும் - அங்கங்கே
சஙச. விம்மிதப் போதுகளு மெய்த்தருவு முள்ளவற்றுள் [போய்த்
இம்மெனுங் காலமுஞ்சென் றெய்தாமைக் - கொம்மெனப்
சஙரு. தூதிதுவா லென்றுரிமை சூழ்ந்தவிட மாதுமுடி
மாது மறியா மரபெய்திச் - சோதிதிகழ்
சஙசா. ஆனந்த ருத்திரனா ரஞ்செழுத்து நெஞ்சாக்கி
ஊனந் தபும்பணிவு முள்ளாக்கிக் - கானம்
சஙஎ. தழைத்தமலர்க் கொன்றைத் தனித்தா ரிவர்ந்து
மழைத்தமது வுண்டு மகிழ்ந்து - செழித்ததற்பின்

இசைவகை பாடின் இரங்குவார் என்றல்.

சஙஅ.* காந்தாரம் பாடு கனலிற் றழல்கின்ற
காந்தாரங் கொங்கை கலப்பிப்பார் - சேந்திடநாச்

---

சஙக. ஆத்தன் = ஆப்தன் - இறைவன்; "ஆத்தியொடு மாத்தனைக் கண்டு" திருப்பெருந்துறைப். கடவுள்.

சஙக - உ. மூத்த பெருந்தேவர் - திருமால் முதலியோர். 'சிர மேற் கொள்வார்' என்றது, அவர்கள் தலைகளிலுள்ள மாலைகளில் வண்டு இருத்தல்பற்றி. போவது செய்து - போய்.

சஙங. கயம் - ஆழமான நீர் நிலை.

சஙச. விம்மிதம் - ஆச்சரியம்; விம்மித மென்பதைத் தருவிற்குங் கூட்டுக; கா. விம்மிதப் படலம் பார்க்க. இம்மெனுங் காலம்-அற்பகாலம்; "இம்மென்னு முன்னே" (காளமேக.) கொம்மென - விரைவாக.

சஙரு. உரிமை சூழ்ந்த - உரிமை கருதிய. இடமாதும் முடி மாதும் - உமையும் கங்கையும். 'இந்த வண்டு தூதாக வந்தது' என்று அவ்விருவரும் அறியாதபடி நீ எய்தி.

சஙஎ. இவர்ந்து - ஏறி. மழைத்த - மிகத்துளித்த.

இதுமுதற் பண்கள் சமற்காரமுறக் கூறப்படும்.

சஙஅ. காந்தாரத்தைப்பாடு; காந்தாரம் - ஒருவகைப்பண், கன

சந்க. சாதாரி யோது தமியே னிறையோடும்
சாதாரி யின்னே தவிர்த்தருள்வார் - மீதான

சச0. தாண்டகம் பாடு தமியேனை விட்டங்கே
தாண்டகங் கொண்டு தரவருவார் - ஈண்டும்

சசக. இராகங்கண் முற்று மியம்பிங் கிருவேம்
இராகங்க ளொற்றித் திணைவார் - பராவும்

சசஉ. கவுசிகம் பாடு கடிதடமே னில்லாக்
கவுசிக நிற்கும்வகை காண்பார் - இவறுசுவை

சசந. ஆர்நட்ட பாடை யறைதி யெனக்கிங்காம்
வார்நட்ட பாடை மருவியார் - பார்நட்ட

சசச. சீகா மரம்பாடு தேம்பு மெனையிணர்த்த
சீகா மரம்புரையச் செய்தருள்வார் - பாகாச்

சசரு. சிகண்டி தனைப் பாடு தெரிவருமா னந்தச்
சிகண்டிதமை வேட்டதெனத் தேர்வார் - புகன்றவிசைக்

---

லின் - தீயைப் போல. காந்து ஆரம் - இப்போது சூடுகின்ற முத்த மாலையை. நா சேந்திட - நாக்குச் சிவப்ப.

சந்க. சாதாரி - ஒருபண்; இஃது இப்பொழுது தேவகாந்தாரி யென வழங்கும். சாதாரி - இறக்கும் வழியை; தாரி - வழி. இன்னே - இப்போதே.

சச0. தாண்டகம் - ஒரு பண்; ஒருவகைச் செய்யுளுமாம். தாண்டு அகம் - தாண்டுகின்ற மனத்தை.

சசக. இருவேம் இரு ஆகங்கள் - இருவேமுடைய உடம்புக ளிரண்டும்; "இருவேமுள் ளிருவே மிருந்திலேம்" (கம்ப. வாலி.) ஒற்றித்து - ஒன்றுபடச் செய்து; "ஒற்றிப்ப வைம்பூ வுறுத்தானை" என்பர் பின்னும் (சகூந); "ஒற்றிக்கு மாரனை யான்முனஞ் சேர வுழலுவரே" பழமலையந்தாதி, 8.

சசஉ. கவுசிகம் - ஒருபண், பட்டாடை. இவறு - விரும்புகின்ற.

சசந. நட்டபாடை - ஒருபண். வார் நட்ட - கயிறு கட்டிய. பாடை - இறந்தாரை எடுத்துச் செல்லுதற்குரிய ஒரு கருவி. மருவியார் - மருவுவியார்; அடையச் செய்யார்; இறவாமற் காப்பாரென்றபடி. பார் நட்ட - பூமி விரும்பிய.

சசச. சீகாமரம் - ஒருபண். இணர்த்த சீ கா மரம் புரைய - கொத்துவிட்ட அழகையுடைய சோலையின்கணுள்ள மரத்தை யொப்ப. பாகு - தேம்பாகு.

சசரு. சிகண்டி - ஒருபண்; அஃது ஆசானென்னும் பண்ணைச்

சசசு. காம்போதி பாடுநெடுங் காம்போதி வில்லினர்
காம்போதிக் கென்னைக் கவல்வியார் - தேம்பாமை

சசஎ. நைவளம் பாடு நனிதேவ நாயகரென்
நைவளம் பார்த்து நலந்தருவார் - நைவில்

சசஅ. புறநீர்மை பாடு புகழ்தருமே கம்பர்
புறநீர்மை யென்பாற் புகுத்தார் - செறிநீர்மைப்

சசகூ. பஞ்சுரம் பாடு படர்கூர்ந்த வென்னுடற்குப்
பஞ்சுர மென்னும் பரிசுணர்வார் - எஞ்சலின்றிச்

சரு௦. செவ்வழி பாடு செறிந்திருக்கை யாங்குணர்ந்து
செவ்வழியே யாக்குந் திறநினைவார் - எவ்வழியும்

சருக. கொல்லி முழுதுங் குறித்தோ திதுவுமுயிர்
கொல்லியவட் கென்னக் குறிக்கொள்வார் - மெல்ல

சருஉ. விளரியெடுத் தோது விரவிரக்க மிக்கு
விளரியவென் மேனிவிழி யுய்ப்பார் - வளருமிசை

சருங. நேர்திறம் பாடொழியா நீரினளென் றேயருட்கண்
நேர்திற மல்லா நிலையருளார் - சீர்திகழப்

---

சார்ந்தது; சிலப். கங: 110 - 12, அடியார். பார்க்க. இப்பண் சிகண்டிகை யெனவும் வழங்கும்; "கால மருத வராளி சிகண்டிகை" (பூதவேதாள.) ஆனந்தச் சிகண்டி - ஆனந்த ருத்திரேசர். சிகண்டி - சிவபெருமான்; மயிலின் தோகையை யணிந்தவ ரென்றுபொருள்.

சசசு. காம்போதி - ஓர் இராகம். நெடு காம்பு ஓதி வில் - நெடிய மூங்கிலையுடைய மலையாகிய வில். காம்பு ஓதிக்கு - வேய்ங்குழலால் ஓதப்படும் இசைக்கு.

சசஎ. நைவளம் - ஒருபண், வருத்தமிகுதி; வளம் - மிகுதி; "வினைவள நீறெழ நீறணி யம்பலவன்" திருச்சிற். 118.

சசஅ. புறநீர்மை - ஒருபண், வேரும் தன்மை.

சசகூ. பஞ்சுரம் - ஒருபண். பஞ்சு உரமென்னும் பரிசு - பஞ்சு வலியை யுடைய தென்னும் தன்மையை.

சரு௦. செவ்வழி - ஒருபண், நல்லவழி.

சருக. கொல்லி - ஒருபண். இது உயிர் கொல்லி - இப்பண்ணானது உயிரைக் கொல்வது.

சருஉ. விளரி - இரங்கற்பண். விளரிய - வெளுத்த.

சருங. நேர்திறம் - ஒருபண்; இது நோதிறமெனவும் வழங்கும்.

சருச. பாலை முழுதும் பயிறந் தவறுணர்ந்து
பாலை யுரிப்பொருளைப் பாற்றுவார் - சாலக்

சருரு. குறிஞ்சி யனைத்துங் குழைந்துபல்கா லோது
குறிஞ்சி யுரிப்பொருளுட் கொள்வார் - உறுஞ்சுரும்பே

வண்டின் ஐயம் கொண்டவள் கூறல்.

சருசா. எல்லா முரைத்தாங் கிசையெழுப்பிப் பாடுவல்யான்
நல்லா யவர்செழுந்தார் நல்குவார் - வல்லையான்

சருஎ. போய்வரினு மவ்வளவும் போற்றரிது நீயுயிரை
மாய்வதிடை போலும் வதிந்தாலும் - ஆய்மலர்த்தார்

சருஅ. தந்தளிப்ப தண்மித் தழுமளவு மாற்றுதற்கே
அந்தநலந் தாரி னமையாதே - எந்தவழி

சருகூ. மாதர் பிரியாமை வாழுமா னந்தேசர்
போதுவரென் றையுறவு பூணுதியேல் - ஓதுவல்கேள்

உடையவன் செயலை விடையாப் புகறல்.

சசா0. ஈங்கிடையே யாவி யிறந்தாலு மாவடியில்
ஓங்கிய வைந்தொழில்செ யுத்தமனர் - பாங்குபெறத் .

---

நேர்திறம் அல்லா நிலை அருளார் - நேர்மையான திறத்தையே அருள் வார்.

சருச. பாலை முழுதும் பயில் - பாலைப் பண்கள் முழுவதையும் பாடுவாயாக; பாலைப் பண்கள் பலவாதலின், முழுது மென்றாள். தம் தவறு - தம்முடைய குற்றத்தை. பாலை உரிப்பொருள் - பிரிவு. பாற்று வார் - நீக்குவார்.

சருரு. குறிஞ்சி அனைத்தும் ஓது - குறிஞ்சிப் பண்ணின் திறங்க ளெல்லாவற்றையும் பாடு. குறிஞ்சி உரிப்பொருள் - கலத்தல்.

சருசா - கூ. இவற்றில் வண்டின் கருத்து தலைவியாற் கொண்டு கூறப்படுகின்றது:—'யான் பாடுவேன்; அவர் மாலையை அளிப்பார்; யானும் விரைந்து கொண்டு வருவேன்; அதுவரையில் உயிரைப் பாது காத்துக் கொண்டு நீ இருத்தல் அரிது; இருந்தாலும் அவரைத் தழுவு மளவும் நீ ஆற்றி உயிருடனிருத்தற்கு அத்தார் அமையாது; இரண்டு மாதருட னிருக்குமவர் எங்ஙனம் வருவார்' என்று, வண்டே! நீ ஐயங்கொள்வாயாயின்.

சசா0 - சுக. தந்தாள் - தம்தாள், தந்து ஆள். இங்கே யான் இறந் தாலும் தம்முடைய திருவடிகளையே நினைத்துத் தங்கிய எனக்கு உட

சகூக. தந்தாள் குறித்துத் தவிர்ந்தேற் குடலியக்கம்
தந்தாண் முறையவர்க்குச் சத்தியமே - அந்தோமுன்

சகூஉ. மாயன்முத லோருடலை மாய்த்தெதிர்ந்த பண்டனுயிர்
சாய வழித்துத் தகமுன்போற் - காயம்

சகூங. கொடுத்தருளுங் கச்சி மயானத்தெங் கூத்தர்
அடுத்த வினையுடலீ தாகி - விடுத்திடினும்

சகூச. ஆக்கை யிதுபோ லளித்துப் பெருங்கருணை
வீக்க லவர்க்கு விளையாட்டே - போக்கில்

சகூரு. அமிர்தசஞ் சீவி யவிர்வெள்ளிக் கீந்து
துமியுடற தீசியெனுந் தொல்லோற் - கிமிழ்கொளீஇ

சகூசு. வச்சிர யாக்கை வழங்குமிட்ட சித்தீசர்
மெச்சவுயிர் நல்கல் வியப்பேயோ - அச்சோ

சகூஎ. இறவாத்தா னத்தி லிருந்தருளா னந்தர்
இறவாமை நல்கலெளி தன்றே - குறிமாவே

சகூஅ. பெண்ணுருவி னீங்காப் பெருந்தகைமை யானந்த
அண்ண லியற்கை யறியாய்நீ - எண்ணில்

---

லியக்கத்தை யளித்து ஆனந்தருத்திரேசர் என்னை ஆண்டருள்வார்; இஃது உண்மையாகும். அந்தோ - ஐயோ.

சகூக - உ. பண்டாசுரனைக் கொன்றது: மயானம் (ருஅ) என்பதைப் பார்க்க. வீக்கல் - பெருகச் செய்தல். போக்கு இல் - போக்குதலில்லாத.

சகூரு - சு. துமியுடல் - துண்டாக்கிய உடம்பை. இமிழ்கொளீஇ - பொருத்தி. சுக்கிரனுக்கு அமிர்த சஞ்சீவினி மந்திரத்தையும் ததீசி முனிவர்க்கு வச்சிர சரீரத்தையும் அருளிச் செய்த இட்டசித்தீசர்க்கு எனக்கு உயிரை யளித்தல் இயல்பே; கா. இட்டசித்தீச. அச்சோ - ஐயோ.

சகூஎ. இறவாத்தானம்: இது காஞ்சியிலுள்ள தலங்களுள் ஒன்று; தன்னை அடைந்தோர்க்கு இறவாமையை யளிப்பது. கா. இறவாத்தான. மாவே (வண்டே) குறிப்பாயாக.

சகூஅ. பெண் உருவின் - உமாதேவியாருடைய வடிவத்தினின்றும். ஆனந்த அண்ணல் - ஆநந்த ருத்திரேசருடைய. எண்ணில் - எள்ளில்.

சசுக. நிறைந்தநெய்போ லெங்கு நிறைந்துலக மெல்லாம்
அறிந்துலக மேதுமறி யாதான் - செறிந்துயிர்க்கு

சஎ0. வெவ்வே றுடலம் விளைத்துத் திருமேனி
வெவ்வே றெடுக்கும் விரகினன் - எவ்வேறும்

சஎக. ஆவானெவ் வோருருவே யாங்காங் குறக்காட்டி
மேவா மலத்தை விளித்திடுவான் - ஓவாது

சஎஉ. வல்லி யொருபான் மகிழ்ந்திருக்க வேயன்றே
மெல்லியன்மான் மாதுநல மேவினன் - நல்லவெழில்

சஎங. தாரு வனத்துத் தருமடவார் தானையெலாம்
பாருக் களித்துப் படர்ந்திட்டான் - ஆர

சஎச. அரவுமதி நீங்கா தமர்வனகா ணமை
இருமடவார்க் கின்பமியைக் கின்றான் - ஒருமதுரை

சஎரு. அங்கயற் கண்ணி யறியாமை மாதர்பலர்
செங்கைவளை யேற்றிநிறை சிந்தினன் - அங்கங்கே

சஎசு. மின்னனையார்க் கையன் விளைத்த திருக்கருணை
இன்னும் பலவா லெனக்கின்னே - தன்னறுந்தார்

சஎஎ. தந்தருளி நீயிங்கே சாருமுன்னே தான்வரினும்
வந்திடுவன் செய்கை மதிப்பாரார் - அந்தில்

---

சசுஅ - க. "எண்ணிறைந்த நெய்யொத்து நின்றானை" பு. வெ. கடவுள்.

சஎ0 - எக. எ வேறும் ஆவான் - எந்த வேறுபாடும் ஆவான்.

சஎஉ. இது முதல், சஎசு - ஆம் கண்ணி வரையில் ஒரு தொடர்; பெண்பாலார்க்கு அருள்புரிந்தமை கூறுவாள்.

மால் மாது - திருமாலாகிய மாது; மோகினி; கா. மாசாத்தன்.

சஎங. தாருவனத்துத் தருமடவார் - தாருகாவனத்து முனிவருடைய பத்தினிமாருடைய. தானையெலாம் பாருக்கு அளித்து - ஆடைகளை யெல்லாம் பூமியில் வீழச் செய்து.

சஎங - ச. ஆர அரவு - ஆரமாகிய பாம்பு; "ஆரம் பாம்பு வாழ்வதாரூ ரொற்றியூரே லும்மதன்று" (தே. சுந்தர.); "ஆரத்தழையராப் பூண்டு" (திருச்சிற். 91.) இருமடவார் - உமையும் கங்கையும்.

சஎரு. திருவிளை. வளையல்விற்ற.

சஎசு. இன்னே - இப்பொழுதே. தார் - மாலை.

சஎஎ. அந்தில் - அவ்விடம்.

சஎஅ. இருந்தருள்வா னுயிடினு மெம்பெருமா னுக்குத்
திருந்துதிரு மேனியெங்கு மன்றே - விரிந்தவுல

சஎகூ. கெங்குந் திருவடிக ளெங்குந் திருக்கரங்கள்
எங்குங் கருணை யெழுமுகங்கள் - எங்கும்

சஅ௦. மலர்ந்த விழிகளெங்கும் வார்செவிக ளெங்கும்
அலர்ந்தவரக் காம்பலன வாய்கள் - இலங்கு

சஅக. மணிநாசி யெங்குமாய் மன்னி யிருப்பன்
பிணியா வருக்கும் பெயர்ப்பான் - பிணியேதும்

சஅஉ. இல்லா னுருதே யுறுவா னிறைஞ்சுநர்பாற்
செல்லாமே செல்வான் செறிவரங்கள் - எல்லாம்

சஅந. கொடாதே யெவர்க்குங் கொடுப்பா னுருவம்
மடாதே விழிக்கண் மடுப்பான் - விடாதுரைகள்

சஅச. கேளாதே கேட்பான் கிளவாதே தான்கிளப்பான்
மூளாதி மோவாதே மோக்கிற்பான் - வாளாங்

சஅரு. குழல்வார் தமையு முறப்பிணிப்பான் விட்டுக்
கழல்வாரை யுங்கழல வொட்டான் - தொழிலனைத்தும்

சஅகூ. செய்யாதே செய்குவான் செய்தொழிற்குத் தக்கபயன்
நையா ருயிர்நுகர நாட்டுவான் - எய்யாமை

சஅஎ. ஆருயிர்கள் பேரின்ப வாழி படிநெறியிற்
சாரும் விரகன்றித் தானினையான் - ஒரும்

---

சஅ௦. எங்கும் செவி: "எங்குஞ் செவியுடையாய் கேளாயோ வென்னுரையே" திருவிளை. பரிநரி. அரக்காம்பல் - செவ்வாம்பல்.

சஅக. யாவருக்கும் பிணியைப் பெயர்ப்பானென்க; பிணி - பந்தம்; "பிணிநீர் மலம்பெயர்க்கும் பெம்மான்" காப்பு.

சஅச. கேளாதே கேட்பான்: "கேளாதே யெல்லாங் கேட்டான்" (திருவா. திருச்சதகம், 28.) வாளாங்கு - சும்மா; "வாளாங் கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே" தே. சுந்த.

சஅகூ. நை ஆர் உயிர் நுகர - நைகின்ற அரிய உயிர்கள் அனுபவிக்கும்படி. எய்யாமை - உயிர்கள் இளையாதபடி; அறியாதபடி யென்றுமாம்.

சஅஎ. ஒரும்: அசைநிலை.

சஅஅ. தனைநோக்கு மாருயிரைத் தானோக்கி மூல
மனைநோக் கறத்தன்பால் வைப்பான் - வினைசாம்ப

சஅகூ. எவ்வளவுந் தன்பா லிசையக் கருதுவார்
அவ்வளவுந் தம்பா லிசைந்தணைவான் - எவ்வெவர்தம்

சகூ௦. கண்ணுக்குங் காணான் கருத்துக்குஞ் சேய்மையான்
வண்ண வுரைக்கும் வளவாதான் - திண்ணிய

சகூக. வாண னறைகூவ வாகுபல வுந்துணித்தான்
ஓணன் பொரக்கருணை யூக்கினான் - பூணும்

சகூஉ. சலந்தரனைத் தேய்த்தான் சமர்த்த விராமற்
கலங்கு பரசொன் றளித்தான் - இலங்குமையோ

சகூங. டொற்றிப்ப வைம்பூ வுறுத்தானை நீற்றினான்
பொற்றவருள் கல்லெறிக்குப் பூண்பித்தான் - முற்றிழையாள்

சகூச. வாட்கண் புதைப்ப மருங்கொழித்தான் மெய்குழையத்
தோட்கொண் டணையநலஞ் சூழ்ந்தணைந்தான்-தாட்பணிய

---

சஅஅ. மூலமனை - ஆணவமலமாகிய இடம். சாம்ப - கெட.

சகூ௦. வளவாதான் - கலவாதான்.

சகூக. வாணன் அறை கூவ - வாணாசுரன் போர்செய்தற்கு அழைக்க. வாகு பலவும் - தோள்கள் பலவற்றையும்; வாணீசம் (கூஅ) என்பதன் குறிப்பைப் பார்க்க. ஓணன் - திருமால்; திருமாலுக்குரிய நாள் ஓணமாதலின் அவர் ஓணனெனப்பட்டார்; "மாயோன் மேய வோண நன்னாள்" (மதுரை. 591); "ஓணத் தானுல காளுமென் பார்களே" தீவ்.

சகூஉ. சலந்தரன் - ஓரசுரன். அவனைத் தேய்த்தது: சலந்தரேசம் (கூஅ) என்பதன் குறிப்பிற் காண்க. சமர்த்த - போர் செய்த. இராமற்கு - பரசுராமனுக்கு. பரசு - மழுவென்னும் ஆயுதத்தை. பரசுராமேச்சுரம் (கூக) என்பதன் குறிப்பைப் பார்க்க.

சகூங. ஒற்றிப்ப - ஒன்றுபடச் செய்யும் பொருட்டு; சசக. ஐம்பூ உறுத்தானை - ஐந்து மலர்களாகிய பாணங்களை எவிய மன்மதனை. நீற்றினான் - சாம்பராகச் செய்தான். கல் எறி - சாக்கிய நாயனா ரெறிந்த கல்லின் எறி.

சகூங - ச. அம்பிகை கண்புதைத்ததும் காஞ்சியில் இறைவனுடைய மெய்யை அவர் குழைத்ததும்,கா. தழுவக்குழைந்த படலத்தால் அறியலாகும். தாள் பணிய - தம்முடைய திருவடியை வணங்கும்படி.

சகூரு. ஏவிய செவ்வேட் கினிததுசெய் தானவன்றன்
ஏவலொழி யக்கழுவா யேலென்றான் - பூவினுக்கு

சகூசா. மாயனொரு கண்ணளிப்ப வாங்கினான் வன்றொண்டற்
கேயவொளிக் கண்ணொன் றினிதளித்தான் - தூய

சகூஎ. மறைக்கோ வணத்தான் மறைச்சிலம்பான் மாவான்
மறைக்கோ வறிவரிய மாண்பான் - நெறிக்கோள்

சகூஅ. உயிருக் குயிரா னுயிரறிவுக் கெட்டான்
பயிலுயிர்க்கே யின்பருளும் பண்பான் - பயிலுநர்க்குக்

சகூகூ. கண்ணுமா னந்தங் கனிவாயு மானந்தம்
வண்ண வதனமு மானந்தம் - தண்ணறல்சேர்

ருOO. வேணியுமா னந்தம் வியன்மார்பு மானந்தம்
பூணுமா னந்தம் புயங்கரந்தாம் - நாணுடையும்

ருOக. ஆனந்த மானந்த மானந்த மானந்தம்
ஆனந்த மெவ்வுறுப்பு மானந்தம் - ஆனந்தன்

---

சகூரு. செவ்வேட்கு - முருகக் கடவுளுக்கு. அது - அப்பணிவை. அவன் தன் ஏவல் ஒழிய - அம்முருகக் கடவுள் தன்னுடைய கட்டளையை மறுக்க; அஃதாவது பிரமனைச் சிறையினின்றும் நீக்குக வென்றது. கழுவாய் - பிராயச் சித்தம். ஏல் - ஏற்றுக்கொள்.

சகூச - ரு. கண்ணி, ௩௧௪, பார்க்க.

சகூசா. மாயன் ஒரு கண்ணளிப்ப வாங்கியது திருமாற்பேற்றில்; கா. திருமாற். 9 - 10, பார்க்க. வன்றொண்டன் - சுந்தரமூர்த்தி நாயனார். ஒளி ஏய - ஒளி பொருந்த. ஏகாம்பரேசர் சுந்தரமூர்த்தி நாயனாருக்கு இடக்கண்ணை அளித்தனர்; "கம்பனெம் மானைக் காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே" (தே. சுந்தர.); "மங்கை தழு வக்குழைந்தார் மறைந்தவிடக் கண்கொடுத்தார்" பெரிய. ஏயர் கோன். 287.

சகூஎ. மறை யென்பதை மாவென்பதனோடுங் கூட்டுக. மா - மாமரம். மறைக்கோ அறிவரிய - பிரமதேவன் அறிதற்கரிய; வேதங்களுக்கும் அறிதற்கரிய வெனலுமாம்.

சகூஅ. பயிலுநர்க்கு - தம்மை இடைவிடாமல் தியானிப்பவர்களுக்கு.

சகூகூ. அறல் - கங்கை நீர்.

ருOO. பூண் - ஆபரணம். புயமும் கரமும் நாணும் உடையும்.

௫௦௨. காஞ்சியுமா னந்தமாய்க் காணநிற்பா னத்தகைய
வாஞ்சையுறு மானந்த வள்ளறன் - காஞ்சனத்த

௫௦௩. கோயிலை முற்றிக் குறுகி முறைமையால்
நீயணவி யான்சொ னெறியுளிநின் - றாயிடையே

௫௦௪. பூங்கொன்றை வாங்கியிங்குப் பொற்பக் கொணர்ந்தென்றும்
ஓங்குபெரு வாழ்க்கை யுதவு.

கச்சி ஆனந்தருத்திரேசர்

வண்டுவிடுதூது

முற்றிற்று.

---

௫௦௨. வாஞ்சை - விருப்பம். வள்ளலென்றது திருவருள் பாலிப்பா ரென்பதைப் புலப்படுத்துகின்றது. காஞ்சனம் - பொன்.

௫௦௩. முற்றி - வலம்வந்து. அணவி - அடைந்து. நெறியுளி - விதிப்படியே.

௫௦௪. கொன்றை சிவபெருமானுக்கு அடையாளப்பூ. பொற்பக் கொணர்ந்து - அழகு பெறக் கொண்டு வந்து. உதவு - தருவாயாக.

# கச்சியப்ப முனிவர் நெஞ்சு விடுதூது.

(இந்நூல் கச்சியப்ப முனிவர் மாணாக்கருள் ஒருவரால் இயற்றப் பெற்றதாகத் தெரிகிறது. இங்கே அதிலிருந்து சில கண்ணிகள் காட்டப்படுகின்றன.)

தீதகற்றுங் காஞ்சித் திருப்புரா ணஞ்சிறப்பின்
ஓதிமுடித் தேற்று முயர்புகழோன் — மீதாகக்

கொண்டு பொழிகவிதை கொண்டாட வற்புதமாய்
மிண்டு பெரும்புலமை மேவிடுவோன் — பொன்றுத்

தணிகைவரை வேலர் தருமருள்கொண் டின்பால்
தணிகையாற் றுப்படை சாற்றும் — தணிகைப்

பதிற்றுப்பத் தந்தாதி பல்பிரபந் தங்கள்
துதித்துறையும் போதருளே தூண்ட — மதித்தாரும்

ஆர்வத் தடியா ரருகணைந்தின் போங்குறவிச்
சீர்வைத் தொளிருந் திருத்தணிகைக் — கோர்வைத்த

சீரார் புராணஞ் சிறந்ததமி ழிற்செய்திங்
கோராகத் தந்தருளா யென்றிரப்பச் — சீராரும்

வேலரரு ளன்பின் விரகீ தெனமகிழ்ந்தங்
கேலுறுமுன் னூலி னியல்புணர்ந்து — கோலம்

சிறந்ததணி கைக்கோர் திகழ்ந்தபுரா ணஞ்சீர்
பிறங்கவுரைத் தீந்தருளும் பெம்மான் — சிறந்தோங்கும்

பேரூர் திருவானைக் காப்பிறங்கும் பூவாளூர்க்
கோராம் புராண மிருந்தமிழின் — சீராகக்

கொண்டுதுதித் தோதிக் குலவும் பெருஞ்சீர்த்தி
மிண்டிடப்பா ரெங்கும் விளங்கிடுவோன் — ஒண்கச்சி

ஆனந்த ருத்திரருக் கன்பாய்க் கழிநெடிலும்
தேனுந்து வண்டுவிடு தீந்தூதும் — மானப்

பதிற்றுப்பத் தந்தாதி பார்புகழ வோதித்
துதித்துமகிழ் வித்தொளிருந் தொல்லோன் — கதித்ததிருத்

தொண்டைவள நன்னாட்டுஞ் சீர்ச்சேரன் சோழனுடன்
எண்டருநற் பாண்டி யெழினாட்டும் — மண்டியொளிர்

ஏராந் தலங்கட் கெழிற்பிரபந் தங்கள்பல
சீரா யுரைத்துச் சிறப்பித்தோன் — ஏரார்நற்

சங்கத் தமிழுந் தளர்ந்து புறங்கொடுப்பப்
பொங்குதமிழ் செய்சீர்ப் புலவர்பிரான் — அங்கையினால்

ஆர்கலியை யுண்டோ னருளுந் தமிழ்விளங்கப்
பாரிற் பெருந்தமிழைப் பாலித்தோன் — சீர்மதுரம்

சித்திரம்வித் தாரமெலாஞ் செய்பணியென் றென்றிரப்பச்
சித்தமகி ழப்பணி செய்விப்போன்.

---

# பிரதி பேதங்கள்.

[எண் - கண்ணியின் எண்.]

௧௩. நீரமுதுமார்த்துவதும்.
௧௮. தோற்றுதுயில் பூவில்
௫௮. விண்டுவீசம். [சுவைப்புளி.
௫௯. மாதவீசம்.
௬௦. அனந்தபத்மநாபேசம்,
காப்பேசம்.
௬௦-௬௧. இராமீச்சுரம், பரசுரா
மீச்சுரம்.
௬௩. சுரகரீசம், தீர்த்தீசம்.
௬௪. அமரீசம்.
௬௫. இரேணுகீசம், சவுனகீசம்,
காமேசம், பராசரீசம்,
பாண்டவீசம்.
௬௬. மணிகண்டேச்சுரம், சோமீ
௬௭. அயிராபதீசம். [சம்.
௬௮. அந்தகீசம், சலந்தரீசம்.
௬௯. தக்கீசம், மதங்கீசம்.
௭௦. ஆதிபதீசம், விடுவச்சேனீ
௮௨. மேகலைப்பார்ப்பதி. [சம்.
௮௪. ஓங்குருத்திரேச வுயரிலிங்
௧௧௮. மதர்வு. [கம்.
௧௩௬. ஈரம்வறல.
௧௪௦. வெதிர்க்கு மூலகர்.
௧௪௫. வெற்ற சுகம்.
௧௮௭. கூர்ந்தவெனவார, கூர்ந்த
வெனவார்ப்ப.
௧௯௮. மதுபக்கம்.
௨௪௬. விண்டேன் வெதும்பி
[மெலிந்தனேன்.

௨௪௭. புகுமுகம்யானவிழ.
௨௫௫. தயையிலார்.
௨௮௩. காண்பினறு.
௨௯௫. அவேனோர்.
௩௦௦. பூவுக்குக் கண்வாங்கும்.
௩௧௫. தகவான்கலப்பு.
௩௧௯. மென்மலரா மல்குமமளி.
௩௨௯. போத நயந்தாலும்.
௩௪௦. சூழ்ந்துலாப் பாணித்தல்.
௩௮௪. யாரே தவிர்க்கிற்பார்.
௩௯௮. மாருதம் வாட்டாதே.
௪௦௦. மிறுகத்த துற்றதாமே.
௪௧௨. மாண்டுகென்னி.
௪௨௧. ஆனபடியெனினீ.
௪௬௮. பெண்ணுருவ நீங்கா.
௪௭௭. தான்வரலும்.
௪௮௩. கொடாமே, மடாமே.
௪௮௬. செய்யாமே செய்வான்
செயுந்தொழிற்கு.
௪௮௯. எவ்வளவுதன்.
௪௯௦. வளவாதான் - தண்ணரு
ளாற், கண்ணுக்குங்
காண்பான் கருத்துக்கு
மண்மையான், வண்ண
வுரைக்கும் வளைப்புண்
பான் - திண்ணிய,
வாணன்.
௫௦௨. அத்தகையின்.

# தலப்பெயர் முதலியவற்றின் அகராதி.

[எண் - கண்ணியைக் குறிப்பது.]


அகத்தீசம், 60.
அஞ்செழுத்து, 436.
அந்தகன், 290.
அந்தகேசம், 68.
அநேகதங்காவதம், 68.
அபிராமேச்சுரம், 61.
அமரேசம், 64.
அயன், 258, 286.
அயிராபதம், 274.
அயிராபதேசம், 67.
அரி, 286, 321, 365, 377, 393, [414.
அரிசாப பயந்தீர்த்த தானம், [69 - 70.
அலருடையான், 265.
அளி, 373, 390, 392, 414.
அறச்சாலைகள், 42.
அறம் முப்பத்திரண்டு, 51.
அறுகாற்பறவை, 401.
அனந்தபற்பநாபேசம், 60.
ஆடகேசம், 64.
ஆதிபதேசம், 70.
ஆனந்தச்சிகண்டி, 445.
ஆனந்தருத்திரத்தண்ணல், 210.
ஆனந்த ருத்திரன், காப். 2, 366, [436.
ஆனந்தருத்திரேசம், 87, 91.
ஆனந்தவண்ணல், 468.
ஆனந்தன், 10, 501.
ஆனந்தேசர், 459.
இட்டசித்தி, 66 - 7.
இட்டசித்திநாதர், 299.
இட்டசித்தீசர், 466.
இடம் மூன்று, 12.
இயமன், 201.
இரணியன், 288.
இரவி, 365.
இராமன், 409, 492.
இராமேச்சுரம், 60 - 61.
இரேணுகேசம், 65.
இரேணுகை, 409.
இலளிதை, 403.
இறவாத்தானம், 63, 467.
ஈசானன், 200.
உமை, 191, 410.
உருத்திரர் சோலை, 76.
உருத்திரர் நூற்றுப்பதினெண் [மர், 76.
உவணன், 313.
ஏகம்பநாதர், 56.
ஏகம்பம், 92.
ஏரி இரண்டு, 43.
ஐங்கரன், 191, 292.
ஒற்றை மறைமா, 10 - 11.
ஓணகாந்தன்றளி, 67.
ஓணன், 491.
கங்கை, 139.
கச்சபேசம், 63.
கச்சிமயானம், 58, 463.
கடகேசம், 60.
கடப்பந்தாரான், 314.
கடம்பன், 52, 192.
கடற்றலைவன், 197.
கண்ணன், 258.
கண்ணீச்சுரம், 73.
கம்பம் மூன்று, 58.
கயிலாயம், 64.
கருடன், 286, 410.
கல்லொன்று, 40.
கவுசிகம், 442.
கற்கீசம், 64.
கற்பாவையொன்று, 40.
காஞ்சி, காப். 1, 55, 255, 266, [502.
காதம்பம், 72.
காந்தாரம், 438.
காப்பீசம், 60.
காம்போதி, 446.
காமகோட்டம், 51.
காமன், 280.
காமீசம், 65.

காரோணம், 75.
காலிறைவன், 281.
காவியரெண்மர், 46.
கிளைகள், 217.
குமரகோட்டம், 52.
குமரன், 294.
குரங்கணின் முட்டம், 75.
குழல்கள், 217.
குறிஞ்சி, 455.
கூவல் பதினொன்று, 38.
கோல்லி, 451.
கோமான், 1.
சஞ்சரிகம், 395.
சஞ்சாயகம், 396.
சண்டன், 192.
சத்ததானம், 66.
சதுரானன சங்கரம், 73.
சாபம், 296.
சலந்தரன், 291, 492.
சலந்தரேசம், 68.
சவுனகேசம், 65.
சனற்குமாரன், 308.
சாகம், 323, 371.
சாத்தரெண்மர், 46.
சாத்தீசம், 64.
சாதாரி, 439.
சார்ந்தாசயம், 69.
சிகண்டி, 445.
சித்தீசம், 69.
சிலீமுகம், 323, 371.
சிலையொன்பது, 29.
சிலையொன்று, 39.
சிவபுண்ணியங்கள் பத்து, 48.
சிவாத்தானம், 61 - 2.
சீகாமரம், 444.
சுரக்ரேசம், 63.
சுருமபு, 320, 397.
சூரியன் கோயில், 53.
செக்கொன்று, 39.
செவ்வந்தீசம், 59.
செவ்வழி, 450.
செவ்வேள், 495.
சேஞபதீச்சுரம், 74.
சோதிலிங்கம், 84.
சோமன், 280.
சோமேசம், 66.
ஞிமிறு, 320, 400.
தக்கன், 305, 310.
தக்கேசம், 69.
தடங்களைந்து, 21, 277.
ததீசி, 465.
தருவைந்து, 19.
தலங்கள் இருபது, 50.
தாண்டகம், 440.
தாருவனம், 473.
தாணேதோன்றுந்தானம், 62.
திரிபுரசுந்தரி, 404.
திருநெறிக்காரைக்காடு, 63-4.
திருமாது, 410.
திருமாற்பேறு, 59.
திருமேற்றளி, 75.
திருவோத்தூர், 73.
தீர்த்தம் பல, 54.
தீர்த்தமிரண்டு, 11.
தீர்த்தமொன்பது, 47.
தீர்த்தேசம், 63.
தும்பி, 321.
துர்க்கையரெண்மர், 46.
தேற்றிமூன்று, 14.
நட்டபாடை, 443.
நதமொன்று, 43.
நதியேழு, 45.
நந்தீசம், 58.
நரமடங்கல், 288, 296.
நவக்கிரகேசம், 62.
நளினத்தோன், 1.
நாரசிங்கீச்சுரம், 71.
நிலம்நான்கு, 44.
நூற்றுப்பதினெண்டளி, 77.
நேமிப்பாணி, 289.
நேர்திறம், 453.
நைவளம், 447.
பஞ்சுரம், 449.
பண்டன், 403, 462.
பணமணீசம், 69.
பணவம், 216.
பஞதரேசம், 68 - 9.
பதலை, 216.

பரசுராமேச்சுரம், 61.
பராசரேசம், 65.
பலபத்திரராமநாதம், 72.
பறவையாறு, 23.
பனங்காட்டூர், 75.
பாண்டவேசம், 65.
பார்ப்பதி, 82, 367.
பாலை, 454.
பிரணவம், 352.
பிரமரம், 319, 399.
பிறவாத்தானம், 63.
பீடமெட்டு, 45.
புட்கரிணி ஐந்து, 44.
புண்ணிய கோடீச்சுரம், 66.
புயல்வண்ணப்புத்தேள், 1.
புறநீர்மை, 448.
பெயர்கள் பன்னிரண்டு, 49.
பொதுவேழு, 25.
பொய்கையெட்டு, 27.
பொழிலொன்பது, 31.
போதகத்துப்பிள்ளைதளி, 52 - 3.
மங்களேசம், 62.
மங்கலை, 408.
மச்சநாதம், 72.
மஞ்சணீர்க்கூத்தர், 406.
மடங்கலணை நான்கு, 17.
மண்டபம் மூன்று, 44.
மணிகண்டேச்சுரம், 66.
மத்தள மாதவேசம், 58 - 9.
மத்தள மாயோன், 193.
மதங்கேசம், 69.
மதமாறு, 45.
மதன், 145.
மதுகரம், 319, 394.
மதுரையங்கயற்கண்ணி, 475.
மந்தி, 322, 370, 398.
மந்திரம் பதினொன்று, 49.
மறைநூபுரம், 73.
மன்றம்பத்து, 35.
மா, 322.
மாகாளேச்சுரம், 71.
மாண்டுகன்னீச்சுரம், 71.
மாண்டுகன்னு, 412.
மாதலீசம், 59.
மாயன், 358, 365, 462, 496.
மாயோன், 80
மாரன், 298, 381.
மால், 264, 411.
மாலிங்கம் (மகாலிங்கம்), 70.
மாவடி, 84, 284.
மிஞிறு, 414.
மூக்கால ஞானேசம், 72.
மூத்தீசம், 67.
முருடு, 216.
முழவம், 216.
மூர்த்தம்பதினொன்று, 48.
யோகாசாரியர்சூழ்தானம், 62.
ருத்திரேசலிங்கம், 84.
வண்டு, 318, 373, 391, 413.
வயன்மூன்று, 16.
வயிர்கள், 217.
வயிரவக் கடவுளின் சிலம்பொலி கேட்குமிடம், 41.
வராகபுரம், 65 - 6.
வருணேசம், 59.
வலாரி, 365.
வளைகள், 217.
வன்றொண்டன், 496.
வன்மீகநாதம், 71 - 2.
வன்னீச்சுரம், 71.
வாசுகி, 369.
வாணன், 289, 491.
வாணி, 411.
வாணீசம், 68.
வாமனன், 295.
வாலீசம், 58.
விச்சுவநாதம், 61.
விடுவச்சேனேசம், 70.
விண்டு, 253.
விண்டுவேசம், 58.
விளரி, 414, 452.
வீராகேச்சுரம், 74.
வீரட்டகாசம், 74.
வெப்புக்கண்ணன், 257 - 8.
வெள்ளி, 465.
வேகவதி, 105, 251.
வேதவியாசன், 270.
வேலான் (வேலோன்), 82, 364.